# கல்கி

KALKI 10-8-80 90 காசு




• பறக்கும் பாவையர்
— அட்டைப்படக் கட்டுரை


• கே.பாலசந்தரா பேசினர்?
— ஸ்ரீவித்யா குமுறல்!

■ டாக்டர்கள் ஓவர்டோஸ்!
— உமாபதி ஜோக்ஸ்

★ சிவாஜி சகாப்தம் முடிந்துவிட்டதா
— சர்ச்சை தொடர்கிறது.

"நான் செக்ரெட்டரி
ஆகையால் ஸ்மார்ட்டாக இருக்கத்தக்க உடை அணிய வேண்டுமல்லவா."






உங்கள் அந்தஸ்தை தனி
அதற்கேற்ற துணி

மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்

மஃபத்லால் இண்டஸ்ட்ரீஸ் மஃபத்லால் ஃபைன்

MF-4-TAM



# சிவாஜி சகாப்தம் முடிந்து விட்டதா?

**சென்ற இதழில் சௌகார் ஜானகி கூறியவற்றுக்கு இந்த வாரம் பதிலளிக்கிறார் வியட்நாம் வீடு சுந்தரம்.**

எங்கோ மூலையில்கிடந்த என்னை ''வியட்நாம்வீடு சுந்தர''மாக்கி இந்த அளவுக்கு வளர்த்தவர் சிவாஜி தான். இளைஞர்களின் ஆர்வத்துக்கும் தொழில் ஆசைக்கும் முழு ஆதரவு தருபவர் என்பதற்கு அவரோடு இருந்த நாட்களில் அவர் எனக்களித்த சலுகைகளே சான்று. அவரால் முன்னுக்குக் கொண்டு வரப்பட்ட இளைஞன் நான் ஒருவன் மட்டுமா? அவர் இனி போட வேண்டிய காரெக்டர்கள் எதுவுமே பாக்கியில்லை! இன்று செய்ய வேண்டிய பல 'ரோல்'களை என்றோ செய்து காட்டியவர். இளம் வயதிலேயே கதாநாயகன் வேஷம் தவிர கேரக்டர் ரோல்களை ஏற்காதவரா அவர்? அப்பராக, பத்மனாபனாக, ரங்கூன் ராதாவில் தகப்பனாக இப்படி வயதான பாத்திரங்களைச் செய்து காட்டவில்லையா? கப்பலோட்டிய தமிழனில் நடித்தாரே டூயட்டா பாடினார்? இல்லை, கிளாமராக நடித்தாரா? அழவைத்தார். வ.உ.சி.க்கு வடிவம்கொடுத்தார். கட்டபொம்மனாக கர்ஜித்தாரே கமர்ஷியல் நோக்கு அதில் எங்கே இருந்தது? அவருக்குக் கிடைக்கும் பாத்திரங்களுக்கு அவர் நியாயம் செய்கிறாரே தவிர பாத்திரங்களைப் படைப்பதும், கொடுப்பதும் நம்தானே? நாம் என்ன தருகிறோமோ, என்ன சொல்கிறோமோ அதைச் செய்கிறார். அது கிழவனா, குமரனா, என்பது அவர் தலையீடல்ல. ஏன்? நாம் நல்ல காரக்டர்களை உருவாக்கி அவரிடம் தந்தால் (தயாரிப்பாளர் மூலம்) ஓஹோவென்று செய்யாமலா விட்டுவிடுவார்? காரெக்டர்கள் அமையட்டும், பிய்த்துக் கட்டிவிடுவார். கலையுலகில் அவர் சகாப்தம் முடிந்து விட்டதா என்பது பற்றி விமர்சனமே வேண்டாம். சிவாஜி சகாப்தம் முடிவில்லாத தொடர்கதை.

வாதம் என்று வந்தால் நானும் கூற முடியும். கிளார்க் கேபிள் எழுபது வயதில் மார்லின் மன்ரோவுடன் நடித்தார். விரும்பியது ஹாலிவுட் கலையுலகம். அகில உலக ரசிகர்களும் விரும்பி ஏற்றார்கள். அம்த மாதிரி நாட்டிய மேதை பாலசரஸ்வதி அவர்களின் நடனத்தை சமீப காலத்தில் கூட மெய்மறந்து ரசித்திருக்கிறோம். ''சிருங்காரம்'' மற்றும் எத்தனையோ உணர்ச்சி பாவங்களை அவர் சித்திரித்திருக்கிறார். அங்கு நாம் அவர் கலையைப் பார்க்கிறோமோ தவிர வயசையா எண்ணினோம்? நடிகரின் ஆற்றலைப் பார்க்கிறோமே தவிர அப்பாத்திரத்தை ஏற்பவரின் வயது பற்றி நமக்கென்ன?

சிவாஜி தமிழில் நடித்த பாசமலரை ஹிந்தியில் அசோக்குமார் நடித்தார். சிவாஜி நம்மைப் பாசத்தில் நினைத்துக் கலங்கவைத்த அளவுக்கு அசோக்குமார் நம்மைக் கலங்கச் செய்யவில்லை. ஏழு வயது முதல் இன்று வரை நடிகர் திலகம் கலையுலகிலும் நம் மனத்திலும் நிரந்தரமான இடத்தைப் பிடித்தவர். வெற்றிகளைக் குவித்து வருபவர். இன்னும் பல வெற்றிகளைக் குவிக்கப் போகிறவர். ஐயமே வேண்டாம்!

பேட்டி:-சிக்கி



# Kalki Shopping Page




*Our Stockists:*

1. M/s D. Srinivasa Iyengar, Maligai, West Car Street, Chidambaram & Cuddalore
2. M/s K. S. Muthuswamy Iyer Son R. V. Venkatarama Iyer, Maligai, Railady, Mayuram
3. M/s R. Ganapathi Pillai, Maligai, Railady, Mayuram
4. Thanjavur Cooperative Wholesale Stores Ltd., Thanjavur
5. M/s A. V. M. Muthukrishnan & Bros, Pudupalayam, Cuddalore
6. M/s P. Ramalingam, 26, Bhandarkar Road, Matunga, Bombay-19
7. M/s P. V. R. K. & Co., 321, Avenue Road, Bangalore-2
8. M/s Geetha Stores, 115, Jeweller Street, Bangalore-1

★

*எங்கள் புதிய D L C பிராண்ட் அக்மார்க் நெய் 16 kg & 4 kg கிடைக்குமிடம்*

1. **M/s Bharathi & Co**
   27, Mundy Street, Vellore-4
2. **M/s R. Rangarajan & Co**
   13/1751, Karikkara Street, Kumbakonam-612 001

★

**Dhanalakshmi & Co**
21-B, M. G. Pudur 1st Street,
Tirupur–638604




# வெஸ்டெர்லி

ஒரு "டெக்னோகிராட்ஸ் கம்பைன் பி. லிட்., சென்னை 600 058" தயாரிப்பு

# எல்லா வயதினருக்கும் எல்லா தேவைகளுக்கும் கைத்தறி!

**கோ-ஆப்டெக்ஸ்** கைத்தறி

## குறிஞ்சி


367, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
வண்ணையம்பதி சென்னை–21
அருகில் உள்ள
விற்பனை நிலையங்களுக்கு
வருகை தாரீர்!

# Kalki Shopping Page

மல்லிகைபோல் மென்மையாகத்
துல்லியமாய் மாவரைக்க....

## "கணேஷ் & சௌபாக்யா"

மாவரை இயந்திரங்கள்



- உத்திரவாத உழைப்பு
- கவர்ச்சிகர அமைப்பு

தயாரிப்பாளர்:

**ஸ்ரீ கணேஷ் இண்டஸ்டிரீஸ்**

119, சத்தி ரோடு, ஈரோடு-1.
(போன்: 73513)



## அஷ்ட ஐஸ்வர்யங்களும் அடைய...

பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை!
வளமான வாழ்வுக்கு செல்வமே
உறுதுணையாகும்!
செல்வத்தின் நாயகியான
ஸ்ரீ மகாலட்சுமியின் அருள்பெற்று
சகல சௌபாக்கியமும் பெற...
ஸ்ரீ லக்ஷ்மி ஆகர்ஷண சக்கரம் (ரூ. 105-)
தனப்ராப்தி டாலர் (ரூ. 35-)
(பூஜையில் வைத்தது)

தபாலில் பெற 25% முன்பணமனுப்பி
வி.பி.பி.யில் பெறலாம். விரிவான 'கேட்லாக்'
பெற 25 பை தபால் தலையுடன் எழுதவும்.

**நவசக்தி நிலையம்**


153, லாயிட்ஸ் ரோடு, கோபாலபுரம்,
சென்னை-600 086. (போன்: 812013)

## Bharat TV

### THE TV FOR INDIA NOW WITH SOLID STATE TECHNOLOGY


- 20 cm 'Hi-fi' dual cone speaker
- Acoustically designed cabinet
- 3 Ics
- Multichannel tuner
- Automatic picture control

20 SOILD STATE
BT 202
(without shutters)



- Laminated sliding shutters
- 3 ICs single printed circuit board
- Automatic picture control
- Multichannel tuner
- 20 cm dual cone double speaker

URVASHI
SOILD STATE
SHUTTER TYPE



**ARUNA & CO**

340, Tiruvottiyur High Road,
Madras-600 021
Ph: 553644 – 552728

534, Tiruvottiyur High Road,
Madras-600 021
Ph: 553644 – 552728

1, Narasingapuram Street,
Mount Road,
Madras-600 002 Ph: 844251

# காதலியை வெறுக்கிறேன்!

ஆர். சேகர்

நூறு அடி தூரத்தில் ஆர்வமாய்த் தெரிந்தாள் மோனிக்கா! அவள் வரு முன் 'ஹேப்பி பர்த்டே' வார்த்தைகள் அவள் பார்வையில் பயணம் செய்து வந்தன.

இன்று ஜனவரி 18. மகத்தான தினம். நான ஜனித்த. பொன் கிடைத்தாலும் கிடைக்காத புதன். எனக்குக் கிடைத்த பொன், பொண் எல்லாம் மோனிக்கா. முழுசாய் சொன்னால் துவள்வாள். சுருக்கமாய் மோனி. செல்லமாய் மோனி.

காதலைக் கண்களில் தேக்கி ஜாலம் புரியும் அவள் கண்கள் ஆளை அடித்துப் போடும். பார்த்தால் பார்வையை வேறெங்கும் நகர்த்த முடியாதபடி பாலம் கட்டி ஊமை மொழியால் சறுக்கி விளையாடுவாள்.

''ஹேய்! ஹேப்பி ரிட்டர்ன்ஸ் ஆப் த டே''

ஜீ ஸ்டிரிங்காய் அதிர்ந்தாள். அவளுடன் லிஃப்டுக்கு நடந்து 28ம் மாடியை அழுத்தினேன். ஜீன்ஸுக்கு மேல் பனியன் 'டேக் இட் யுவர்செல்ஃப்' என்றது. இண்டிமேட் மூக்கில் புகுந்து மனசைத் தடவிக் கொடுத்தது. லிஃப்ட் மேலே மேலே... சொர்க்கத்துக்கு.

''பிறந்த நாளுக்கு வாழ்த்து மட்டும்தானா? பரிசு இல்லையா?''

''உனக்கில்லாததா? என்ன வேண்டும். கேள்.''

''என் பேரில் பாதியும் உதட்டு ஒத்தடமும்'' (என் பேர் என்ன என்று நடுவில் சொல்கிறேன். கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுப் படிக்கவும்.)

லிஃப்ட் 18வது மாடியைக் கடக்கையில் என் கையைப் பிடித்து உதட்டுப் பஞ்சால் ஒத்தினாள்.

''காயம் இங்கே'' என் உதட்டைக் காட்ட.

''சாயம் இங்கே'' அவள் உதட்டைக் காட்ட.

''என் பேரில் பாதி?'' என்றேன். அவள் ராஜேந்திர குமாரிடம் கடன் வாங்கி 'வே' என்று அழகு காட்டியபோது 28வது மாடி வந்தது.

அந்தக் கம்ப்யூட்டர் மகா ஸ்தாபனத்தின் ஆர் அண்ட் டி பிரிவில் நானும் மோனியும் ஆராய்ச்சிப் பொறியாளர்கள். ஐ பி எம், கேலக்ஸி, ஸ்பெக்ட்ரம் 7, போன்ற கம்ப்யூட்டர்கள் எங்கள் பேபிகள். எல்லாம் அதிவேக மின்னலாய் அடிபணியும். கம்பெனிக் கணக்குப் பார்த்து, ஜாதகப் பொருத்தம் பார்த்து, போரடித்தால் செஸ் விளையாடி... செய்யாத வேலையில்லை. நானும் மோனியும் புதுப் புதுக் கட்டளைகளைக் கண்டுபிடித்து கம்ப்யூட்டர் மொழி ஃபோர்டிரானில்சொல்ல அவை சமர்த்தாய்க் கீழ்ப்படியும்.

சூரியனுக்கு அடுத்த உப கடவுள் கம்ப்யூட்டர். நாங்கள் கடவுள் அறைக்குள் நுழைந்தோம்.

''மோனி இன்னிக்கு ரொம்ப அழகாய் இருக்கே! அழகுக்கு அகராதி!''

''பொறந்த நாள்னு இப்படி வழியணுமா?''

''ரியலி யூ ஆர் லுக்கிங் ஸோ ஸ்வீட் டுடே ஒம்பேர்லநடுவில 'இ'சேர்க்கணும். மோகினி''

''தேங்க்ஸ் பார் த காம்ப்ளிமெண்ட்ஸ். ஆமா இன்னிக்கு ஏதோ புது நியூஸ் சொல்றதாச் சொன்னே.''

''அதுவா மோனி. இந்த மறக்க முடியாத நாளில் ஓர் உறுதி கொள்ளப் போறேன். என் வாழ்க்கையில் அது திருப்பு முனையா இருக்கும். மிக விரிவடையப் போகும் சுவாரஸ்யமான எலெக்ட்ரானிக்ஸ் எதிர் காலத்தில் தனி மனிதனுக்குப் புகழ் இருக்காது. இருந்தாலும் ஒவ்வொருத்தனும் ஒரு ஐந்து நிமிடமாவது பிரபலமாக விளங்குவான். அவ்வளவுதான். ஆனால் என் இட்டப்படி காலம் முழுதும் நான் பிரபலம். உலகம் என் காலடியில். நான் ஒரு இயந்திரம் செய்யப் போகிறேன். காலப் பெயர்ச்சி விசை.''

''புரியற தமிழிலே சொல்லு.''

''காலயந்திரம். எச்.ஜி. வெல்ஸ் சொன்ன டைம் மெஷின். அதை நானே உருவாக்கப் போறேன்.''

''கால யந்திரம்? எது... அந்த நாலாவது பரிமாணமான காலத்தில் பயணம் செய்யும் மெஷினா?''

''அதே! இது எதிர்காலத்திலும் இறந்த காலத்திலும் ஓடும். கார்ல போனா தூரம் மாறுற மாதிரி இதில போனா காலம் மாறும். இரண்டாயிரம் வருடம் பின்னால போய் வள்ளுவர் பாட்டெழுதுறதைப் பார்க்கலாம். 2500ம் வருடம் போய் ஹேமமாலினி புதுஸா உயிர் பெற்றதையும் பார்க்கலாம். உலகமே என் காலடியில்.''

மோனி அசுவாரஸ்யமாக ஐபிஎம் டைகோவிற்கு செஸ்ஸை நினைவில் பதித்துக் கொண்டிருந்தாள். சிசிலியனின் டிராகன் வேரியேஷனை உட்கொண்ட அந்தக் கம்ப்யூட்டர் தனது காந்தப் பிரதேசத்தில் சேமித்துக் கொண்டது.

''இது கூட செஸ் விளையாடிப் போரடிக்குது. என்னையே ஜெயிக்கிறது. நாம ஒரு கேம் போடலாமா?'' — மோனி.

''செஸ்ஸா? நடுவில் 'க' போட்டுக்கலாமா? போரடிக்காது.''

''இந்தஇடைச் செருகலை விடமாட்டியே!''

பிறகு விடை பெறுகையில் நான் மூச்சைப் பெரிதாய் இழுக்க ''என்ன அப்படி இழுக்கிறே?'' மோனி கேட்டாள்.

''நாளைக் காலைவரை உன் வாசனையைப் பிடித்துக் கொண்டேன்.''

''குட் நைட்.''

''நாளைய கனவினை நினைவாக்கலாமா?''


''முதலில் நாளைய நனவைக் கனவாக்கு.''

• • •

அன்று உலகம் எதிர்பார்த்த மாபெரும் தேர்தல் முடிந்து ஓட்டுக்கள் எண்ணப்பட்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி

# ரூ 500/- பரிசு பெற்ற விஞ்ஞானக் கதை—



டன. இருவானர் மகா கனம் பொருந்திய துண்டணிந்த கோவிந்தராசன் தம் எம்.பி. பதவி தங்குமா? பறிபோகுமா? என்ற கவலையை 'வாட்'69'ல் குறைக்க முயன்றார்.

சைவமான அவருக்குக் குருவிச் சின்னம் தந்ததே அபசகுனமாக நினைத்து, 'ஜெயித்தால் நாற்காலி' சின்னக் கட்சியில் சேரமுடிவு செய்தார். 'நாற்காலி' என்றும் உயிர்.

"என்ன வடிவேலு, நெலமை எப்படி இருக்கு?" டென்ஷன் தாங்காமல் சுற்றியிருந்த தொண்டர் படையிடம் கேட்டார்.

"அரை மணி முன்னுல ஐயா லீடிங். இப்போ அந்தக் 'கழுதை'ப் பய 100ல மிஞ்சிட்டான். கொஞ்ச நேரத்துல பிஞ்சிடுவான். இன்னும் நம்ப மேட்டுக்குறிச்சித் தொகுதி எண்ணலே பாருங்க. அங்கே பத்தாயிரம் சாலிடா ஐயாக்குத் தான். பூரா நம்ப ஜெனம்தான்." இவர்

தான் பதவிக்கு வந்து ஜாதியை ஒழிக்கப் போகிறவர்!

எண்ணிக்கை கண்ணாமூச்சி விளையாட ஒரு தொண்டன் சொன்னான்: "ஐயா புதுஸா ஒரு கடவுள் அவதரிச்சிருக்கிறாராம். 28 வயசுலே எல்லாத்தையும் புட்டுப்புட்டு வைக்கிறாராம். ஒரு பொட்டிக்குள்ளே போய்க் கடவுள்கிட்டப் பேசிட்டு வர்றாராம். அம்மா தான் பிரதமர்னு சொல்லியிருக்கார். கடவுள்ங்க.. நம்ப முடிவு பத்தி அவர் கிட்டே கேட்கலாமா?"

"என்னய்யா வடிவேலு, உடனே போன் போட்டுக் கேளுய்யா!"

அவர்கள் கால யந்திரத்தின் கடவுளான என்னிடம் வந்து கேட்க நான் கால யந்திரத்துள் புகுந்து நாளைய தினத்துக்குப் போய் கோவிந்தராசன் நூறு ஓட்டு வித்தியாசத்தில் தோற்றதைப் பார்த்துச் சொல்ல அவர் மயங்கி விழுகையில் என் கனவு கலைந்தது.

● ● ●

"மோனி, காத்தால மூன் சாமத்தில் கண்ட சொப்பனம். ஒரு வருடத்தில பலிக்கப் போகிறது. கால யந்திரம் படைத்து விட்டால் நான்தான் கடவுள்."

"நினைப்புத்தான் சுவாமி பொழப்பைக் கெடுக்கிறது."

"நினைப்பு இல்லே. சத்தியமான உண்மை. எல்லா சாத்தியங்களும் இருக்கு. இன்னிக்கே என் ஆராய்ச்சி ஆரம்பம்."

உடனே மோனி எழுந்து என்னருகே வந்து, முன்னே நின்று தலையைத் தொட்டு ஆசீர்வதித்தாள்.

"இப்படி யெல்லாம் அடிக்கடி பக்கத்தில இனிமே வரக்கூடாது. நீ பக்கத்தில வந்தா என் மனஸ்ங்கற ஆஸிலாஸ்கோப்பில் 'நாய்ஸ்' வோல்டேஜ் அப்ளை பண்ண மாதிரி கன்னுப் பின்னு அலைகள் திருதிருன்னு வரது. அப்புறம் ஆராய்ச்சி சப்ஜெக்ட் மாறிடும்."

"என்னை விட ஆராய்ச்சி முக்கியமாப் போச்சா?" மோனியின் முகம் கோபம் காட்ட சிவப்பு ஃபில்டர் பரப்பியது.

"அடடா, உனக்காகத்தானே எல்லாம். அதற்குள் கோபமா என் இனிய காதலியே!"

"......"

"பேச மாட்டாயா? கம்ப்யூட்டர் கிட்டச் சொல்லிப் புதுக் கவிதை சோகமாக பாடட்டா?"

"பாடு. தலைப்பும் நானே தரேன். 'காதலியை வெறுக்கிறேன்'."

● ● ●

அந்தப் பெரிய புள்ளி கொலை செய்யப்பட்டு உடைமைகள் ஐம்பது லட்சமும் அம்போ! போலீஸ் நாய் வந்து வீட்டையே தேய்ந்த ரெகார்டாய்ச் சுற்ற, ஒரு தடயமும் இல்லாமல் போலீசார் திணறி, மத்திய புலனாய்வும் தோல்வியைத் தழுவி ஸ்காட்லண்ட் யார்டும் பிரத்யேகமாய் முயன்று கொலை, கொள்ளைக்காரனின் புத்திசாலித் தனத்தையும் தங்கள் இயலாமையையும் ஒப்புக்கொண்டபோது அவர்கள் நவீன கடவுள் அவதாரமான என்னை அணுகினர். ஒரு லட்சம் காணிக்கை பெற்றுக் காலயந்திரத்துள் நுழைந்தேன்.

அந்த இரண்டு பெரும் ரப்பர் உடையில் நுழைந்து, அந்தப் பெரிய புள்ளியை முற்றுப் புள்ளியாக்கி 'கறுப்பு வெள்ளை'களைக் கவர்ந்து கவனமாய் வெளியேறி, தற்போது கோவிந்தம் பாளையத்தில் புளிய மர வீட்டில் பணத்தைப் பதுக்கி வைத்திருப்பதைப் பார்த்துச் சொன்னேன்.

● ● ●

"மார்க்ஷல் தினமும் கனவு காணாதே! பயமா இருக்கு" என்றாள் மோனி. (அடவிளக்கெண்ணெய் வீண் போகலே.)

"இதான் கடைசிக் கனவு. கண்டாலும் உங்கிட்டச் சொல்லலே. சரியா? ஆமாம் நேற்று பேசாமப் போனே!"

"அது சரி. காதலியை வெறுத்தாயா?"

"நேத்து பூரா கம்ப்யூட்டர் கிட்டே முட்டி மோதித் தமிழ்க் கவிதை கொணர்ந்தேன். இதோ.

**காதலியை வெறுக்கிறேன்**

அவளும் நோக்கினாள்,
அடியேனும் நோக்கினேன்,
தெய்வீக 'அப்ரோச்.'
'என்னுயிர் நீதானே',
'நீயின்றி நானில்லை',
காதல் — சாதல்?
இப்போதோ என்
காதலியை வெறுக்கிறேன்.
அவள் என் மனைவியானதால்!

"எப்படி கம்ப்யூட்டர் கவிதை?"


"நான் உன்னைக் கல்யாணம் செய்துக்க மாட்டேன்."

"மோனி அவசரப்படாதே. அப்புறம் வேறே கவிதை எழுதறேன். தலைப்பு என்ன தெரியுமா? மனைவியைக் காதலிக்கிறேன்."

தினமும் கொஞ்சமாய்ப் பரிசோதனை செய்து கம்ப்யூட்டர்களுடனும், இனி அதிசயங்களுடன் விளையாடி, வயர்களில் புள்ளியில்லாக் கோலங்கள் போட்டு, போர்டில் சமன்பாடுகளை வெள்ளைப் பூச்சிகளாக்கி இரவு பகல்களைச் சிலசமயம் மறந்து — மோனியையும்தான் — முயற்சி திருவினையாக்கும் பழமொழியை உண்மையாக்கினேன். அதற்குள் ஏறத் தாழ ஒரு வருடம் சொல்லாமல் போனது.

கால யந்திரம் ஒரு மாதிரி வடிவம் கொண்டது. கார் போன்ற அமைப்பு. அமர்ந்து விரும்பிய வருடம் போகலாம்!

"மோனி! வர ஜனவரி 18ல் என் பிறந்த நாளில் முதல்பரிசோதனை செய்யப்போறேன்,



"ஒலிம்பிக் நியூஸ் படிச்சிட்டிருந்த சமயத்திலே என் தங்கை உஷாவைத் தவறிப்போய் 'மிஷா'ன்னு கூப்பிட்டுட்டேன்."

"அப்புறம்?"

"அதைப்படிக் கூப்பிடலாம்னு கராடியாகக் கத்த ஆரம்பிச்சுட்டா!"

- ஏ. வி. ராமநாதன்

வெள்ளோட்டம். பிறகு மக்களுக்கு எந்தப் பிரச்னையும் கிடையாது. எதிர்கால உலகின் தலைவர் யார் என்று சொல்வேன். கொலை கொள்ளைகளைக் கண்டுபிடித்துத் தடுப்பேன். விளையாட்டில் யார் ஜெயிப்பார்கள் என்று. இறப்பு எப்போது வருமென்று சொல்வேன். மாணவர்க்கு கேள்வித் தாட்கள் சொல்வேன். எண்ணற்ற செயல்கள். கடவுளுக்குக் கடவுள். கடவுளே என்னைப்பார்க்கக் கியூவில் நிற்பார்.''

''போற போக்கைப் பார்த்தால் நீ கீழ்ப் பாக்கத்தில் நிக்கணும்.''

''கீழ்ப்பாக்கம்னதும் நினைவுக்கு வருது. நேத்து ஒரு சுவாரஸ்யமான கனவு. கால யந்திரத்தின் இன்னொரு அப்ளிகேஷன். ஒரு இளைஞன் என்னிடம் வருகிறான். அவன் தன் காதலியைக் காதலிக்கிறான் உயிராய். இந்தச் சமயத்தில் ஒரு ''பொறுமை'' அவ ளைப் பத்தி வத்தி வைக்க இவனுள் சந்தேகப் பேய். காமப் பேயும் சந்தேகப்பேயும் சண்டை விட இவன் என்னிடம் வந்து தன் காதலி சுத்தமானவளா என்கிறான். நான் கால யந் திரத்தில் சென்று அவளின் கடந்த காலத்தை நோக்க அவள் எவனோ ஒருவனுடன் 'ஏ'வாக இருந்தாள். கேட்ட இவன் கீழ்ப்பாக்கத் துக்குப் போய்விடுகிறான்.''

''நீயும் உன் மெஷினும். இது உண்மையா வேலை செய்யுமா?'' எதிர்பார்ப்புடன் கேட் டாள்.

''18ம் தேதி பார்.''

அன்று 18ம் தேதி. இன்னொரு மகத்தான 18. நானும் மோனியும் காலயந்திரத்தின் அருகில். ''மோனி இது முதல் முயற்சிதான். தற்போது ஒரு வருடம் வரைதான் பின் னோக்கிச் செல்ல முடியும். இது வெற்றி பெற்றால் பிறகு எந்த வருடம் விரும்பி னாலும் செல்ல மாற்றிவிடலாம். இதோ பார். இந்த ஸீட்ல உட்கார்ந்து கதவைச் சாத்திக்கணும்.'' என்று நான் கால யந் திரத்தில் அமர்ந்து கொண்டேன். ''வெளியே இரண்டு பட்டன் இருக்கு பார். அந்த டயலை இரண்டில் திருப்பி செட் பட்டனை அழுத்தி னால் நான் ஒரு வருடம் பின்னால் சென்று இரண்டு மணி நேரத்தில் திரும்பி வருவேன். இது நார்மல் பட்டன். நார்மலை அழுத்தினால் நாம் எந்த வருடம் செல்கிறோமோ அந்த வருடத்திலிருந்து மீண்டும் வாழ ஆரம் பிக்கலாம். இன்னொரு வாழ்க்கை மாதிரி. திரும்பி வர ரிட்டர்ன் பட்டனை அழுத்தணும்.

''ஒரு வருடம் முந்திய 18ம் தேதியை இதில் முன்பே அமைத்திருக்கிறேன். கதவை நான் சாத்தியதும் நீ டயலை 1ல் நிறுத்தி செட் பட்டனை இயக்கு. நான் ஒரு மணி நேரத்தில் திரும்பி வந்துவிடுவேன். இப்ப நேரம் என்ன?''

''காலை 9மணி 10நிமிடம் 25 நொடிகள்.''

''நீ என்ன ரேடியோ ஸ்டேஷன்ல வொர்க் பண்றயா?''

''இல்லே. நான் கட்டியிருப்பது எலெக்ட் ரானிக் கடிகாரம்.''

''ஜோக்குக்கு இப்ப நேரமில்லே. கதவை மூடிக்கிறேன். சொன்னதைச் செய்.''

மோனி குனிந்து கண்ணில் உயிர்ப்பின்றி முத்தமிட, (பயப்படுறோ!) உணர்ச்சி யின்றி வயர்களைத் தலையின் சில பகுதிகளில் இணைத்துக் கொண்டேன். கதவை மூட....

• • •

திடீரென்று நான் சுருங்கிப்போவது மாதிரி லேசாகி, எனக்குள் யாரோ உட்கார்ந்த மாதிரி என் எடை முழுதும் இழந்த மாதிரி உணர்ந்து, மிதந்து என்ன ஆச்சரியம்... அந்தக் கம்பெனி வாசலில் நான் நிற்பதை நானேபார்க்கிறேன். மிதந்து சென்று நாங்கள் ஒன்றுகி.:..

என்ன இன்னும் மோனி வரவில்லே. பிறந்த நாளும் அதுவுமா ஏன் லேட். அட அதோ தூரத்தில் இருநூறு அடியில் ஓடி வருவது மோனியேதான். இப்போது 150 அடியில். 149, 148, 147... 100 அடி தூரத்தில் ஆர்வமாய்த் தெரிந்தாள் மோனிக்கா!

(இப்போது கதையின் தொடர்ச்சியைக் கதையின் ஆரம்பத்திலிருந்து படிக்கவும் கதாசிரியர்)

மோனிக்கா சொல்லும் பின்குறிப்பு:

காலயந்திரம் கேட்க இனிமைதான். விளைவுகள் பயம். இறக்கும் நாள் தெரிந்தால் எவன் வேலை செய்வான்? உலகே ஸ்தம் பிக்கும். மார்ஷலுக்கே சந்தேகம் வந்து என் பழைய வாழ்க்கையைப் பார்க்கச் சென் றால்... நான் முன்பு சந்துருவைக் காதலித்துக் கணநேர மனமயக்கத்தில் என்னை இழந்து... விபத்தில் சந்துரு....

ஐயோ. இதெல்லாம் மார்ஷலுக்குத் தெரி யக்கூடாது. அதனால்தான் மார்ஷல் கத வைச் சாத்திக் கொண்டதும் நான் நார்மல் பட்டனைத் தட்டிவிட்டேன். இனி மார்ஷ லுக்குப் போன வருடம் 18ம்தேதியிலிருந்து மீண்டும் வாழ்வு தொடங்கும். என்னுடன் பேசி, காலயந்திரம் செய்து கனக்கண்டு. அதில் அமர்ந்து பின்னோக்கி ஒரு வருடம் போய் மீண்டும் வாழ்வு தொடங்கி, கால யந்திரம் செய்து, மீண்டும் பின்னே போய்... கம்ப்யூட்டர் ரீ லூப் போல ஒரே வருடத்தி லேயே சுற்றிச் சுற்றி வரும் மார்ஷல் பாவம். உலக நன்மைக்காகவும் என் நன்மைக்காகவும் நான் என் காதலனை இழக்கிறேன்!

---

''டைரக்டர் சார், நம்ம புது படத்திற்கு இந்தக் கதையையே செலக்ட் பண்ணலாம். ஹீரோயின் கிட நாப்பிங், ஹீரோயின் தங்கை ரேப், ஹீரோவின் மகன் நரபலி சாமியார்களால் கடத்தப்படல் என்று 'ரியலிஸ்டாக' நாட்டு நடப்பை எழுதியிருக்கார்.''

— பி. ஆர். கண்ணன்



# இசையின் அழகை உணர்ந்தவர்

[கிருஷ்ணகான சபாவில் ஸ்ரீ டி. கே. ஜயராமன் சங்கீத சூடாமணி என்ற விருதை இவ்வாண்டு பெறுகிறார். அவருடைய சங்கீதத்தின் சிறப்பு இயல்புகளை விவரிக்கும் இக்கட்டுரையின் ஆசிரியர் ஸ்ரீ ஆர். வேணுகோபால் ஸ்பென்ஸர் கம்பெனியில் மிக உயர்ந்த பதவி வகிப்பதுடன் மிகப் பிரபலமாகியுள்ள பல சாகித்தியங்களை இயற்றி கர்நாடக இசைக்குத் தொண்டாற்றியும் உள்ளவர்.]

**பா**மரர்கள் மட்டுமே அனுபவிக்கக் கூடியது ஒரு வகைச் சங்கீதம். பண்டிதர்கள் பாராட்டுவது இன்னொரு வகைச் சங்கீதம். ஆனால் உண்மையான உயர்ந்த சங்கீதத்தின் சிறப்பு என்னவென்றால் அந்தச் சங்கீதம் பாமரர்களுக்குப் பரவசமூட்டுவதைப் போல் பண்டிதர்களுக்கும் இன்பம் தரும். இப்படிப்பட்ட சங்கீதம் காலத்தால் அழியாதது.

சங்கீதத்தின் உரு ஸ்வரம் என்றால் அதனுடைய கரு **பாவம்**. **பாவம்** இல்லாத சங்கீதம் மணமற்ற மலர்.

**பாவம்** என்றால் மகிழ்ச்சி, சோகம், சினம் முதலான நவரசங்களை ஒட்டிய பாவம் என்று பொருள் கொள்வது தவறு. அவையெல்லாம் நாடக **பாவம்**. சங்கீதத்திலே **பாவம்** என்ற சொல்லுக்குத் தனிப் பொருள் உண்டு.



எந்த ஒரு நிலையிலே மற்ற புலன்களுக்குத் தெரியாததோர் இன்ப நிலை, அழகுணர்ச்சி, நம்மையெல்லாம் கடந்து நிற்கும் ஒரு இறைத் தன்மையிடம் ஈடுபாடு என்பவை ஏற்படுகின்றனவோ அந்த நிலைக்குத்தான் சங்கீதத்தில் **பாவம்** என்று பெயர். சுருங்கச் சொன்னால் அழகுணர்ச்சியும் ஆன்மீக உணர்வும்தான் சங்கீத **பாவம்**. ஸ்வரங்களை அசைத்தோ நிறுத்தியோ கோத்தோ ஒரு ராகத்தின் அழகு வெளிப்படும்படி செய்வதுதான் உண்மையான **பாவம்**.

இது தவிர நம்முடைய சங்கீதத்திலே சாகித்தியத்துக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. நம்முடைய சாகித்தியங்கள் ஸ்வர அலைகளின் மேலே மிதக்கின்ற படகைப் போன்றவை. இவைகளை கவனமாகவும் பக்தி உணர்ச்சியுடனும் கையாள வேண்டும். சாகித்தியங்களின் பக்தி உணர்ச்சியை வெளிப் படுத்த செயற்கையாகக் குரலைத் தாழ்த்தியோ, உயர்த்தியோ தழுதழுக்கவோ பாடத் தேவை இல்லை. அவற்றினுடைய சங்கீதக் கருவை விளங்கும்படி செய்தாலே போதும். அழகு மேம்பட்டு விளங்கும். உள்ளத்திலே ஆனந்தம் பொங்கும்.

இன்று நம்மிடையே மேற்சொன்ன சங்கீத சாகித்திய **பாவ** அம்சங்களிலே சிறந்து பண்டிதர், பாமரர் இருவருடைய நன் மதிப்பையும், ஆதரவையும் பெற்று விளங்கும் வித்வான்களிலே ஸ்ரீ டி. கே. ஜயராமன் அவர்கள் ஒருவர். அழுத்தமான கமக சுத்தமான சாரீரம். அவ்வப்போது வியப்பில் ஆழ்த்தும் அசாதாரண துரித காலப் பேச்சுக்கள். சுருதி சுத்தமான கார்வைகள், ராகங்களின் உயிர்நாடிகளைத் தெரிந்து வைத்திருக்கின்ற உயர்ந்த ஞானம், லய சம்பந்தமான வேலைப்பாடுகளிலே சிறந்த திறமை இருந்தும் அந்தத் திசையிலே அதிகமாக மனத்தைச் செல்ல விடாமல் கட்டுப்படுத்தி அழகுணர்ச்சியிலே ஈடுபடுகிற விவேகம், சாகித்தியங்களின் எழிலும் ஏற்றமும் விளங்கும்படி அவற்றைக் கையாளுகின்ற ஆற்றல், மென்மை, இதம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம், ஸ்ரீ ஜயராமனுடைய சங்கீதத்தின் சிறப்புக்களை..

தன்னுடைய குருவென்று பெருமையுடன் தான் வணங்கிப் போற்றுகின்ற சகோதரி ஸ்ரீமதி பட்டம்மாளின் வழி வந்தவர் என்றாலும் தனக்கென்று ஒரு தனி பாணியை வகுத்துக் கொண்டவர் ஸ்ரீ ஜயராமன். சிறு வயதிலிருந்தே கச்சேரி செய்கின்ற அனுபவம். ஏறாத மேடையே இல்லை என்னும் அளவுக்குப் பிரபலமான புகழ். பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் அபிமானம்.

இவையெல்லாம் தவிர ஸ்ரீஜயராமனுடைய இன்னொரு முக்கிய சிறப்பு சங்கீதம் கற்றுத் தருவதிலே

இவருக்குள்ள ஈடுபாடும் திறமையும். நாடிச் சென்று இவரிடம் பாடம் செய்கின்றவர்களின் பட்டியலிலே பல மாணவ மாணவிகளைத் தவிர ஒருசில முன்னணி வித்வான்களும் உண்டு. அதே சமயத்திலே ஸ்ரீ ஜயராமன் அவர்களுக்கும் எங்கெங்கே சிறப்பு அம்சங்கள் தென்படுகின்றனவோ அங்கங்கே அவற்றைத் தேடிப் பெற்றுக் கொள்கின்ற பண்பும் கலை ஆர்வமும் உண்டு.

ஒருசில வருடங்களுக்கு முன்புவரை நம்மிடையே வாழ்ந்து மறைந்த ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களிடம் நேர்முகமாக அவருடைய பல கீர்த்தனைகளைப் பாடம் செய்து அவரிடம் பாராட்டும் பெற்று இன்று அந்தக் கீர்த்தனைகளின் முழு அழகும் வெளிப்படும்படி பாடி ரசிகர்களை ஆனந்தத்தில் ஆழ்த்துகின்ற பெருமையும் ஸ்ரீ ஜயராமன் அவர்களுக்கு உண்டு.


தகுதியான கலைஞருக்குத் தக்க கௌரவத்தைத் தகுந்த சமயத்தில் வழங்கி இருக்கின்றது கிருஷ்ண கான சபை. ஜயராமன் அவர்களுடைய இசைத் தொண்டு பல்லாண்டு தொடர்ந்து மேம்பட்டு வளர இறைவன் அருளை வேண்டுவோம்.



படங்கள் : உத்ரா






அஸ்ஸாம் பிரச்னை
கோரேந்திர சிங்
எப்படியாவது இவளைக் கொஞ்சம் அழகு படுத்திக் காண்பியுங்க!
BEAUTY PARLOUR
அழகு படுத்தும் நிலையம்
சென்னை நகரம்

1980 ஆகஸ்டு 10
ரௌத்திரி ஆடி 26
மலர்: 39 இதழ்: 2



# கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

## கல்கியின் தனித்தன்மை

"கல்கி தனது தனித்தன்மையை இழந்துவிட்டு நிற்கிறது'' என்பதாகச் சமீபத்தில் ஒரு குற்றச்சாட்டு கிளம்பியிருக்கிறது. புதுதில்லி நேயர் ஆர். கங்காதரன் Contour என்ற பத்திரிகையில் 'சோ' எழுதியுள்ள கட்டுரையிலிருந்து சில வரிகளை எடுத்தெழுதி, '''கல்கி', ராஜாஜி, டி. கே. சி. ஆகியோரது நினைவைப் போற்றும் நானும் எனது நண்பர்கள் பலரும் 'சோ' கட்டுரையில் உள்ள இந்த வரிகளை எழுத்துக்கு எழுத்து ஆமோதிக்கிறோம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அண்மைக் காலத்தில் கல்கியில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அந்த மாறுதல்களால் கல்கி தனது தனித் தன்மையை இழந்து விடவில்லை, மாறாகத் தனது தனித் தன்மையைத் திரும்பப் பெற்றிருக்கிறது. அதாவது கல்கியின் தொடக்க காலம் முதல் 1954 இறுதியில் கல்கி அவர்கள் இறந்தது வரை கல்கிக்கு இருந்து வந்த ஒரு தனித்தன்மையை (identity) அது இப்போது திரும்பப் பெற்றுள்ளது.

இப்போது கல்கியில் நடந்துள்ள மாறுதல்கள் எதிலும் புதுமையில்லை. கல்கி அவர்களே கையாண்டவைதாம். சிலவற்றைப் பார்ப்போம். இப்போதெல்லாம் சினிமாவுக்குக் கல்கி அதிக முக்கியத்துவம் தருகிறது என்று சிலர் குறைப்படுகிறார்கள். தொடக்க கால கல்கி இதழ்களை எடுத்துப் பார்த்தால் சினிமா விமர்சனம் தவிர சினிமா செய்திகள், படங்களுக்காகவே எட்டுப் பக்கங்கள் வரை ஒதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சினிமா மக்களை வெகுவாகக் கவர்கின்ற முக்கிய சாதனம், அதை ஒதுக்கவோ அலட்சியப்படுத்தவோ முடியாது என்று உணர்ந்திருந்தார் கல்கி. அதற்காகப் பெண் இனத்தை இழிவுபடுத்தும் ஆபாசமான படங்களைப் பிரசுரிப்பதோ, அரசியல், சினிமா தொடர்பான கிசு கிசு எழுதுவதோ அவருக்கு உடன்பாடல்ல. இவற்றை இன்றைய கல்கியிலும் காணமுடியாது.

ஆரோக்கியமான விவாதங்கள் பல இன்று கல்கியில் இடம் பெறுகின்றன. ராகங்கள் பற்றிய சர்ச்சை, ஓரம்போ பாணி பாடல்கள் பற்றிய சர்ச்சை, சக்தி வைத்தியம் - சாகித்திய அகாதமி சர்ச்சை, பாங்குகளில் என்ன நடக்கிறது சர்ச்சை, சிவாஜி சகாப்தம் குறித்த சர்ச்சை என்று பல. இவை தவறு எனில் கல்கி அவர்கள் எத்தனை சர்ச்சைகளை நிகழ்த்தியுள்ளார் என்று யோசித்துப் பாருங்கள். இவ்வாறு சர்ச்சைகளில் இறங்கும்போது பிரச்னையைத்தான் அலச வேண்டுமே தவிர தனி நபர்களையோ அல்லது அவரது சொந்த வாழ்க்கையையோ அல்ல என்பது கல்கி கையாண்ட பண்பாடு. இதனை நாங்கள் மறக்கவில்லை.

சிவசங்கரி கல்கியில் எழுதுகிறார், புஷ்பா தங்கதுரை எழுத ஆரம்பித்து விட்டார், ஜெயராஜ் படம் போடுகிறார் என்றெல்லாம் சிலர் குறை கூறுகிறார்கள். ஜீன்ஸின் ஜிப்பை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கும் பெண்ணின் படத்தையா கல்கியில் வரைகிறார் ஜெயராஜ்? சிவசங்கரியும் புஷ்பா தங்கதுரையும் எழுதுகிறார்கள் என்பதை விட என்ன எழுதுகிறார்கள் என்று பார்ப்பது நல்லது. கல்கிக்கு எப்படி எழுத வேண்டும் என்று இவர்களுக்குத் தெரியும். தப்பித் தவறி வரம்பு மீறினால் சிவப்பு மை நிரம்பிய பேனாக்களுடன் கல்கி ஆசிரியர் குழாம் காத்திருக்கிறது. 'எந்த எழுத்தாளரையும் ஒதுக்கத் தேவையில்லை, இளம் தலைமுறையினரை அணைத்துப் போக வேண்டும், புதிய ஆற்றல்களைக் கண்டுபிடித்து வழங்க வேண்டும்' என்பது இந்தப் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரின் கருத்து.

இன்னும் என்ன? அட்டைப் படத்தில் சினிமா நட்சத்திரங்களைப் பிரசுரிக்கிறீர்கள்; பெண்களின் படத்தைப் போடுகிறீர்கள் என்பது ஒரு குற்றச்சாட்டு! பெண்களை மட்டும் போடுவதில்லை, பல சமயங்களில் ஆண்களும் இடம் பெறுகிறார்கள். நகைச்சுவைப் படங்களும் வருகின்றன. அது போக, ''கல்கி'', ஆசிரியர் பொறுப்பு ஏற்றிருந்த கால கட்டத்தில் எத்தனை சினிமா நட்சத்திரங்கள் அட்டைப் படத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று பார்த்தால் அந்தப் பெயர் பட்டியலே அரைப் பக்கத்தை நிரப்பி விடும்! ''கல்கி'' வாழ்ந்த காலத்தில்

வண்ணப் புகைப்படம் எடுக்கும் கலை இங்கு வளர்ந்திருக்கவில்லை. வண்ண ஓவியங்களை ''கல்கி'' பயன்படுத்தினார். அந்த வண்ணச் சித்திரங்களில் அழகிய பெண்கள் இடம் பெறுமலா இருந்தார்கள்? இன்று ஓவியரின் இடத்தைப் புகைப்பட நிபுணர் பிடித்துக் கொண்டிருக்கிறார், அவ்வளவே.

'நேற்று இந்திரா காந்தியைத் தாக்கினாய், இன்று வாழ்த்துகிறாய்!' 'எம். ஜி. ஆரை நேற்று வாழ்த்தினாய் இன்று தாக்குகிறாய்' என்பது சிலரின் குறை. இதுவும் கல்கி காட்டிய பாதைதான். எந்த ஒரு தலைவரோ கட்சியோ தவறிழைத்தால் தாக்கத் தயங்காதவர், அவர்கள் நல்லது செய்தால் உடனே வாழ்த்தவும் தவறவில்லை. காந்திஜியில் ஆரம்பித்து, நேருஜி, காமராஜ், அண்ணாதுரை, டி. டி. கே. வாசன் போன்ற எத்தனையோ பேர்களை கல்கி போற்றியுமிருக்கிறார், அவர்களிடமே கருத்து மாறுபட்டும் நின்றிருக்கிறார். ராஜாஜி அவர்களிடம் கூட கல்கி கருத்து மாறுபட்டு எழுதிய தருணங்கள் ஒன்றிரண்டு உண்டு. அது போக, கல்கி ராஜாஜியிடம் காட்டிய பக்தி விசுவாசத்தை இன்று நாம் யாரிடம் செலுத்த முடியும்? அந்த அளவுக்கு அருகதையானவர்கள் யார் இருக்கிறார்கள்?

அருள்வாக்கு பகுதியில் காஞ்சி முனிவரின் அருளுரைகள் மட்டுமின்றிப் பல்வேறு மதங்களின் மடங்களின் தலைவர்களுடைய பொன்மொழிகளும் இடம் பெறுகின்றன. இது கல்கி அவர்களின் மனத்துக்குகந்த நல்ல மாறுதலே.

கர்நாடக சங்கீதத்துக்கும் இதர கலைகளின் வளர்ச்சிக்கும் நகைச்சுவைக்கும், அங்கதத்துக்கும் கல்கி எவ்வளவு முக்கியத்துவம் தந்தார் என்பது அனைவருக்கும் தெரியும். அந்த நற்பணி இன்றும் தொடர்கிறது.

மேற்சொன்ன ஒவ்வொரு அம்சத்திலுமே கல்கியின் தனித்தன்மை பளிச்சிடுகிறது என்பதுடன் கல்கி அவ்வப்போது பிரசுரிக்கும் சிறப்பிதழ்கள் அதற்கு உயர்வையும் வாசகர்களின் அமோக ஆதரவையும் பெற்றுத் தந்துள்ளன.

பயனுள்ள, கனமான விஷயங்கள் கல்கியில் இல்லை என்று யாரும் கூறிவிட முடியாது. 'கல்லூரியில் குவிஸ்', 'சட்டமும் சமுதாயமும்' போன்ற பல பகுதிகள் சான்று. நேற்று வெளியான வாசந்தி நாவலிலோ இன்று தொடரும் பி. வி. ஆர். நாவலிலோ நாளை பிரசுரமாக இருக்கும் இந்திரா பார்த்தசாரதி நாவலிலோ இலக்கியத் தரம் இல்லை என்று யார் கூறுவார்கள்?

ஒன்று மட்டும் எங்களால் செய்ய முடியாது. கல்கி அவர்கள் காட்டிய அளவுக்கு ஆற்றலையும் அவருக்கு இருந்தது போன்ற இலக்கியத் திறனையும் நம்மால் நிச்சயம் வெளிப்படுத்த முடியாது. ஆனால் அவர் வகுத்த பாதையில் நம் சக்திக்கும் அறிவுக்கும் இயன்ற அளவில் சத்தியத்தைச் சார்ந்திருந்து செயலாற்ற முடியும்.

''சினிமா பகுதி இல்லாமல் பத்திரிகை நடத்த முடியாதா?'' என்று 'சோ' அண்மைக் காலமாக எழுதியும் பேசியும் வருகிறார். சினிமாவினால் அவர் பிராபல்யம் அடையாதிருந்து இப்படி பேசினால், எழுதினால் அவரது இக் கருத்துக்கு மதிப்பிருக்கும்.

---



**16** ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா மீண்டும் ஹாக்கியில் தங்க மெடல் பெற்று ஒலிம்பிக் உலக சாம்பியனாகியுள்ளது. ''இந்த ஒலிம்பிக்கில் பல நாடுகள் கலந்துகொள்ளவில்லை, அதனால்தான் இந்தியா தங்க மெடலைப் பெற்றுவிட்டது'' என்று இளக்காரமாக எண்ணுவதை விட ''வேறு பல நாடுகள் பங்கு பெற்றிருந்தாலும் இந்தியா வென்றிருக்கும்; ஸ்பெயினிடம் காட்டிய அதே போராட்ட மனப்பான்மையை வெளிப்படுத்தி வெற்றி கண்டிருக்கும்'' என்று நினைப்பது தான் சரி.

உலக அரங்கிலே மேலும் பிரகாசிக்க, செயற்கைப் புல்வெளியில் விளையாட நமது ஆட்டக்காரர்கள் பழக வேண்டும். இதற்கு செலவு கணக்குப் பார்க்கக் கூடாது. அரசாங்கக் கார்கள் ஒவ்வொன்றும் மாதம் ஒரு லிட்டர் பெட்ரோல் மிச்சப் படுத்தினால் போதும், பல கேந்திரங்களில் செயற்கைப் புல் ஹாக்கி அரங்கினை உருவாக்கிவிடலாம்.

• • •

இந்தியன் ஆயில் நிறுவனத்துக்குச் சொந்தமான குழாய்கள் பூமிக்கு அடியில் செல்கின்றன. அதன் மீது குடிசை போட்டுக் கொண்டு சாவகாசமாக பைப் லைனைத் துளைத்து, எண்ணெய் எடுத்து, திருட்டுத்தனமாய் விற்று வந்திருக்கிறார்கள்.

# செய்திகள் வாசிப்பது 'செம்பியன்'

நெம்பர் பிளேட் இல்லாத காரில் வந்து 12 வயதுச் சிறுவன் வசீனைக் கடத்திச் சென்றிருக்கிறார்கள். வேறு ஒரு பையனையும் இப்படியே கடத்திப் போக வண்டியை நிறுத்தியபோது கட்டிப் பயல் வசீன் தப்பி ஓடியிருக்கிறான். அவன், மூன்றுவது ஒரு பையன் காரில் இருந்ததாகவும் அவன் வாயில் துணி அடைக்கப்பட்டு இருந்ததாகவும் கூறுகிறான்.

தாம்பரம் பல்லவன் டிப்போவில் சிமெண்ட் திருட வந்த கொள்ளைக்காரர்கள், காவல்காரரைக் குத்திக் கொன்று விட்டனர். ஒரு பல்லவன் டிரைவருக்கும் காயம்.

இந்த மூன்று செய்திகளும் இடம்பெற்றுள்ள அதே நாளிதழில் "எதிர்க் கட்சியினர் கூறுவது போலக் குற்றங்கள் அப்படியொன்றும் மலிந்துவிடவில்லை" என்று சட்டசபையில் முதல்வர் பேசியுள்ளதாகவும் செய்தி வெளியாகியிருப்பது நல்ல ஜோக்!

அதைவிடப் பெரிய ஜோக், "எமர்ஜென்ஸி காலத்தில் குற்றங்கள் நடக்கவில்லையா? தமிழகத்தை விட மற்ற மாநிலங்களில் நிலைமை இன்னும் மோசம்" என்றெல்லாம் முதல்வர் கூறியிருப்பதுதான்!

முதல்வரின் இந்தக் கூற்றுக்கும், "சர்க்கரை விலை ஏறிவிட்டதே?" என்ற புகாருக்கு "மேல் நாடுகளில் விலை இதைவிட அதிகம்" என்று ஆர். வி. சமாதானம் சொன்னதற்கும் அதிக வித்தியாசம் இல்லை.

"ஏண்டா கணக்கில் ஐந்து மார்க் வாங்கியிருக்கே?" என்று பையனைக் கேட்கும்போது, "என்னைவிடக் குறைவாக இரண்டும், மூன்றும் வாங்கினவங்க இருக்காங்களே அப்பா" என்று அவன் பதில் சொன்னால் கோபிக்காதீர்கள்! அமைச்சர்களே அப்படித்தானே பதில் கூறுகின்றனர்!

• • •

"கமிட்டிகள் என்றாலே எனக்கு அலர்ஜி. பெரும்பாலான கமிட்டிகள் மேலும் குழப்பங்களையே விளைவிக்கின்றன; உருப்படியாக எதையும் சாதிப்பதில்லை" என்று ஆர். வி. நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது கூறியதில் அர்த்தமிருக்கிறது.

ரொம்ப காலத்துக்கு முன்னால் கல்கி அவர்கள், "பிரச்னையின் தலையில் கல்லைத் தூக்கிப் போடு அல்லது கமிட்டியைப் போடு!" என்று தலைப்பிட்டு ஒரு தலையங்கம் எழுதினார். அது இன்றைக்கும் பொருந்தும். எதற்கெடுத்தாலும் கமிட்டி போடுவது வீண் கால தாமதத்துக்கும் குழப்பத்துக்கும்தான் வழி வகுக்கும். அமைச்சரவையே ஒரு கமிட்டிதான். பிரச்னைகளை நன்கு விவாதித்துப் பெரும்பாலானவற்றுக்கு நல்ல முடிவுகளை உடனுக்குடன் எடுக்க அமைச்சரவைகள் பழக வேண்டும்.

• • •

சஞ்சய் காலமானதற்குக் காரணமான விமானம் இந்தியாவுக்கு எப்படி வந்து சேர்ந்தது? அதற்கு அனுமதி எவ்வாறு கிடைத்தது? என்பன குறித்துச் சில விஷயங்களை ஜோதிர்மாய் பாசு நாடாளு மன்றத்தில் கூறப்போக, ஆர். வி. இடைமறித்து, "அவர் கூறுவனவை உண்மைக்குப் புறம்பானவையாய் உள்ளன" என்று சொல்லி, தாமே அந்த விமானத்தின் இந்திய சரித்திரத்தை விளக்க ஆரம்பித்தார். ஆர். வி.யின் விளக்கம் நமக்கு மேலும் குழப்பத்தைத்தான் ஏற்படுத்துகிறது!

ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. விமானம் ஒழுங்கான, நியாயமான சட்டத்துக்குட்பட்ட முறையில் தருவிக்கப்படவில்லை. அது சஞ்சய்க்குச் சொந்தமானதுமில்லை.

வேறு ஒரு செல்வந்தர் தமது நிறுவனத்துக்காக என்று அதனை வாங்கி சஞ்சய்க்குப் பரிசளித்திருக்கிறார். அல்லது அதில் பறக்க அவரை அனுமதித்திருக்கிறார். விமானத்துக்காகும் எரிபொருள்; மற்ற மற்ற செலவுகளை சஞ்சய் ஏற்றதாகத் தெரியவில்லை. பிரதமர் இந்த விஷயத்தை அறியாதிருந்திருக்க முடியாது. இவ்வளவு விலை உயர்ந்த பரிசை ஒரு ஏழை நாட்டின் பிரதமரின் மகன் பெற



லாமா? அதன் உள் நோக்கங்கள், பின்விளைவுகள் பற்றி யோசித்திருக்க வேண்டாமா?

• • •

ஈரான் நாட்டு மன்னர் இறந்துவிட்டார். அவர் ராம ராஜ்யம் நடத்தினார் என்று யாரும் கூற முடியாது. கொடுங்கோல் ஆட்சிதான். ஆனால் இப்போது பதவிக்கு வந்துள்ள கொமெனி அவரை விடப் பெரிய கொடுங்கோலராக மாறி வருகிறார்.

ஈரானியப் பெண்கள் நவீன உலகுக்கு ஏற்ப நாகரீக முன்னேற்றமடைய இரான் மன்னர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் நல்ல பலன் தந்தன. ஆண்களுக்குச் சரிசமமாக அவர்கள் மதிக்கப்பட்டு வந்தனர். ஆனால் இப்போது கொமெனி மறுபடியும் பெண்கள் பர்தா அணிய வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார். அண்மையில் டெஹ்ரானில் 3000 பெண்கள் இதனை எதிர்த்துத் துக்க நாள் அனுஷ்டித்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

இதற்கு அடுத்த நாள் மற்றொரு அரசு உத்தரவு வந்தது: "பர்தா அணிந்தாலொழிய ஈரானிய அரசில் பணியாற்றும் பெண்களுக்குச் சம்பளம் கிடையாது!"



# குரு

இந்த வண்ணப் படத்தின் கதாநாயகன் குரு சாகசமான காரியங்களை மிகவும் துணிச்சலோடு செய்கிறான். ஆனால் அவற்றைப் படத்தில் காட்டும்போது சஸ்பென்ஸோடு அமைக்க வேண்டாமோ? 'டெம்போ' மருந்துக்குக்கூட இந்தப் படத்தில் இல்லை. எல்லாமே சாவகாசமாக நடப்பதால் 'த்ரில்' இல்லாமல் போய்விட்டது.

டைரக்டர் ஐ. வி. சசி திறமைசாலிதான். ஆனால் ஒரு காட்சி சிறப்பாயிருந்தால் அடுத்த காட்சி தொய்ந்து விடுகிறதே!

ஸ்ரீதேவி 'சிக்'கென்று பல உடைகளில் கவர்ச்சியாய்த் தோன்றுகிறார். குருவைக் காதலிக்கிறார்; கண்ணீர் விடுகிறார்; போதையில் தள்ளாடுகிறார்; ஹெலிகாப்டரில் பறந்து கயவர்களைச் சுட்டுத் தள்ளுகிறார். மொத்தத்தில் பாராட்டும்படி நடித்திருக்கிறார்.

பூர்ணம் விசுவநாதன், ராவ் பகதூர். சிறிது நேரமே வந்தாலும் நன்றாக நடித்திருக்கிறார்.

முத்துராமன் தேசபக்தன். உருக்கமாக நடித்திருப்பதோடு ''டிஷ்யூம் டிஷ்யூம்'' சண்டைகளிலும் சக்கைப் போடு போட்டிருக்கிறார்.

கமல்தான் அஷோக் அல்லது குரு. அபாரமாக நடித்திருக்கிறார். தம் காதலியின் தாயாரைச் சந்தித்துப் பேசியபோதும் மலைக் குகையில் ஸ்ரீதேவியுடன் மாறு வேஷத்தில் இருந்தபோதும் அவர் நடிப்பு குறிப்பிட்டுக் கூறிப் பாராட்டும்படி இருந்தது. அஷோக்காகப் போலீஸ் கமிஷனரிடம் பேசும்போது அவரது தனித் திறமை பளிச்சிடுகிறது.

திரைக் கதை பல அயல் நாட்டுப் படங்களையும், ஹிந்திப் படங்களையும் கலந்து உருவாக்கப்பட்ட பேல் பூரி! ''ஜுகுனு'' (ஹிந்தி)யின் சாயல் நிறைய இருக்கிறது.

எக்ஸ்பிரஸ் என்று பெயர் சூட்டிக்கொண்டு ஸ்டேஷனுக்குஸ்டேஷன் நின்று புறப்பட்டால் பயணம் அலுக்கத்தானே செய்யும்?



# இளமைக்கோலம்

தினக்கு நானூற்றைம்பது ரூபாய் சம்பளம் என்று சொல்லிக் கொண்டு பெரிய பங்களாவில் ராஜேஷ் (கமல்) வசிப்பது அதிசயம்! அமர்க்களமாக டிரஸ் பண்ணிக் கொண்டு புத்தம் புதுக் காரில் வந்து இறங்குவது புரியாத புதிர்!

சும்மா சொல்லக்கூடாது. கமல் சிரமப்பட்டு நடித்திருக்கிறார்.

இளங்கோவாக வரும் பிரதாப் போத்தன் நடிப்பில் சிறந்து நிற்கிறார். நிஷா பரவாயில்லை.

ராதிகாவுக்கு இந்தப் படத்தில் நல்ல பாகம். ஓரளவு முயன்று பாத்திரத்துடன் ஒன்றி நடித்திருக்கிறார்.

ஜூர்மானா என்ற ஹிந்திப் படத்தின் தழுவல் கதையாம்! ஹிந்தி படத்தைத் தழுவித் தமிழில் எடுக்கத்தான் செய்கிறார்களே நல்ல கதையாகத் தேர்ந்தெடுக்கக் கூடாதா? இப்படி வடிகட்டின அசட்டுக் கதையைப் பொறுக்கி எடுத்து. 'அவர்கள் அசடு; அவர்களைவிட நாங்கள் பெரிய அசடு' என்று காண்பித்துக் கொள்ள வேண்டுமா?

- காந்தன்

# பறக்கும் பாவையர்

பெண்களுக்கான வேலைகளில் மிகவும் கவர்ச்சியாக ஒன்று விமான ஹோஸ்டஸாக விளங்குவது. இந்த வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பெண்களுக்கு ஒன்பது வாரம் பயிற்சி அளிக்கிறது இந்தியன் ஏர்லைன்ஸ். டெல்லி சப்தர்ஜங் விமான நிலையத்தில் இந்தப் பயிற்சிக் கூடம் இருக்கிறது.

இதனைப் பார்த்து எழுத வேண்டும் என்றதும் இந்தியன் ஏர்லைன்ஸ் பிரதம பொதுஜன தொடர்பு அதிகாரி ஏ. கே. சிவானந்தம் எல்லா உதவிகளும் செய்தார்.

ஏர்ஹோஸ்டஸ் பயிற்சி நிலையத்தில் நல்ல தோற்றமுடைய அழகான இளம் பெண்கள் இங்குமங்கும் நடமாடிக் கொண்டிருந்தனர்.

பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்துப் பட்டதாரிப் பெண்களில் இந்த வேலைக்குத் தகுதியுள்ளவர்களின் மனுக்களை வரவேற்கிறார்கள். மலைவாழ் மக்களுக்கும் பின்தங்கிய வகுப்பினருக்கும் இதிலும் ரிசர்வேஷன் உண்டு! இதில் சேர விரும்பும் பெண்கள் ஐந்து அடி இரண்டு அங்குலம் உயரத்துக்குக் குறைவில்லாமலும் ஐந்தடி ஆறு அங்குலத்துக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலும் நேர்முகத் தேர்வு நடக்கும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை டில்லிக்கு அழைத்து அவர்களுள் சிறந்தவர்களைமறுபடி தேர்ந்தெடுப்பார்கள். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கு டெல்லி சப்தர்ஜங் விமானப்பள்ளியில் ஒன்பது வாரங்கள் பயிற்சி கொடுக்கப்படுகிறது. விமானத்தில் பிரயாணிகளுக்கு உணவு, தேநீர், காப்பி, பிஸ்கட் போன்றவைகளை எப்படிக் கொடுப்பது, அவர்களின் எந்த வசதிகளை எப்படிக்கவனிக்க வேண்டும், தலையணைகளை எப்படிச் சரி செய்ய வேண்டும் என்பனவற்றைச்சொல்லிக் கொடுக்கிறார்கள்.

நாற்பத்தைந்து நிமிடங்கள் தொடர்ந்து கடலின் மேல் விமானம் பறக்குமானால் முன்னெச்சரிக்கையாகப் பயணிகளுக்கு மிதப்பு ஜாக்கெட்டுகளை எப்படி அணிய வேண்டும் என்று இவர்கள் கற்றுத் தரவேண்டும்.

அழகாக நடக்கப் பயிற்சி தருவதற்காகத் தலையில் ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு அது விழுந்துவிடாமல் 'பாலன்ஸ்' செய்தபடி நடக்கச் சொல்கிறார்கள். காப்பி, டீயுடன் உபசரிக்கச் செல்லும்போது விமானம் ஆட்டம் கண்டால் சிந்திவிடக் கூடாது அல்லவா?

ஒலிபெருக்கியில் சரியான, அழகானஉச்சரிப்புடன் அறிவிப்புகள் செய்வதற்கான பயிற்சியும் இங்கே அளிக்கப்படுகிறது.

விமானப் பணிப் பெண் நமது கலாசாரங்களைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதும் ஒரு விதி. அயல் நாட்டு பயணிகள் ஏதும் கேட்டால் சரியாகப் பதில் கூறத் தெரிந்திருக்க வேண்டும்.

அவசியம் ஏற்பட்டால் முதலுதவி செய்ய இவர்கள் தயார்! திடீரென்று பயணிகளில் யாருக்காவது இருதயத் தாக்குதல் ஏற்பட்டால் கூடச் சமயோசிதமாக நடந்து கொள்ள இவர்கள் அறிந்திருக்க வேண்டும்!

நிலைமை... விபத்து ஏற்பட்டால் அதைச் சமாளிக்க மட்டுமின்றி இப்போதெல்லாம் ஹைஜாக் முயற்சிகளை முறியடிக்க என்ன செய்யலாம் என்பதற்குக்கூடப் பிரத்தியேகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அடுத்த கட்டமாக விமானப் பணிப் பெண் தன்னுடைய தோற்றத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்து கொள்ளலாம் என்றும் சொல்லித் தருகிறார்கள். எடுப்பான முறையில் புடவை கட்டிக்கொள்ளக் கற்றுத் தரப்படுகிறது. ஒப்பனைக்காகப் பிரத்தியேக வகுப்புக்கள் உண்டு.

விமானத்தைப் பற்றியும் பல நுணுக்கங்களைக் கண்டிப்பாக இவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பயணிகள் விமானம், அதன் இயக்கம் பற்றி எத்தகைய கேள்வி கேட்டாலும் தயங்காமல் சட்டென்று பதில் சொல்ல வேண்டும். பயணிகள் எதைக் கேட்டாலும் 'இல்லை', 'முடியாது' என்ற வார்த்தைகளைத் தவிர்த்து நாசூக்காகச் சமாளிக்கக் கற்கிறார்கள்.

ஒன்பது வாரப் பயிற்சி முடிந்தவுடன் இறக்கை வழங்கும் விழா (Wing Ceremony) என்று ஒரு வைபவம் உண்டு. வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்த பெண்களுக்கு இறக்கை வடிவிலான 'பாட்ஜை' அணிவிக்கிறார்கள்.

நல்ல வருமானம் கிடைக்கிறது என்பது மட்டுமல்ல, வசதியான உயர் குடும்பத்தைச் சேர்ந்தவரைக் கணவனாக அடைய வாய்ப்பு இருக்கிறது என்பதும் இந்த வேலையில் உள்ள கவர்ச்சிக்கு ஒரு காரணம்!

—கட்டுரை: மேலட்டை வண்ணப்படம்: சித்தி



# புதிய தலைமுறை

**திரு கே. எஸ். சுந்தரம்**
(டைரக்டர், அடிஸன் பெயிண்ட்ஸ்)

கல்லூரி படிப்பு முடிந்ததும் லண்டன் சென்று பயிற்சி பெற்றவர். 'அடிஸன்' பெயிண்ட்' நிறுவனத்தில் சேர அழைப்பு வந்தபோது இவருக்கு 22 வயதுதான்.

கல்லூரிகளில் டென்னிஸ் விளையாடிய இவர் இப்போது 'கால்ஃப்' ஆட்டத்தில் மிகுந்த ஈடுபாடுள்ளவர். இதையொட்டி தினமும் நான்கு மைல் தூரம் நடக்கிறார்.

''முன்னேறிய நாடுகளில் பின்பற்றப்படும் புதிது புதிதான நுணுக்கங்களைப் பற்றிய நூல்களைப் படிப்பதுதான் முக்கிய பொழுது போக்கு'' என்கிறார் திரு. சுந்தரம்!

இந்தியர்களின் திறமையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர் சுந்தரம். ''இன்றைய உலக நாடுகளின் தரத்துக்கு மிக அதிகமாகவே அறிவாற்றலும் திறமையும் மிகுந்தவர்கள் நம்மவர்கள்'' என்று பெருமையுடன் சொல்லும் இவர், அரசாங்கத்தின் குழப்படியான சட்ட விதி முறைகளும், கொள்கைகளும் உற்பத்திப் பெருக்கத்துக்கு ஊக்கமளிக்காமல் கால தாமதப்படுத்துகின்றன; இந்நிலை மாறவேண்டும் என்கிறார். பெயிண்ட் அபிவிருத்தி கௌன்ஸிலிலும்ஏற்றுமதி அபிவிருத்தி கௌன்ஸிலிலும் பல ஆண்டுகள் உயர்பதவி வகித்து உதவியவர் சுந்தரம்.

**திரு. ராஜேஷ் குமார்**
(சிறுகதை எழுத்தாளர்)

தாவர இயல் படித்து ஆசிரியர் வேலை பார்த்த திரு கே. ஆர். ராஜகோபால் கோவை வாசி. கைத்தறிச் சேலைகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள இவர் பதின்மூன்று ஆண்டுகளாய்ச் சிறுகதைகள் எழுதி வருகிறார்.

''அப்போதைய தினமணிக் கதிர் ஆசிரியர் திரு சாவி என்னை ஊக்கப்படுத்தியிருக்காவிட்டால் நான் இன்றைக்கு இந்த அளவுக்குப் பிரபலமாகியிருக்க மாட்டேன்'' என்று கூறும் திரு ராஜேஷ்குமார் தன்னுடைய எழுத்துக்கு நேரில் பார்க்கும் நிகழ்ச்சிகள், மற்றவர் சொல்லும் அனுபவங்கள் —இவை தாம் அடிப்படையாய் அமைகின்றன என்கிறார். பிஸினஸ் விஷயமாய், பம்பாய், பூனா, நாக்பூர், என்று பயணம் போகும்போது சேமித்த செய்திகள் ஊர் திரும்பியதும் கதைகளாகி விடுகின்றனவாம்.

இவருடைய மனைவியே 'கஞ்சன்' என்று வருணிக்கும் அளவுக்கு இவர் சிக்கனப் பேர்வழி. அதனால்தானோ என்னவோ இவரிடம் சிகரெட், வெற்றிலை, பொடி எந்தப் பழக்கமும் கிடையாது. 'ஸ்வீட்' என்னும் சிறுவர் மாத இதழுக்கும் சில காலம் ஆசிரியராய் இருந்திருக்கிறார்.

**திரு. விவேக் சாரதி**

நெல்லை மாவட்டம் மன்னார்கோயில்காரரான பார்த்தசாரதி, சென்னை விவேகானந்தா கலலூரியில் பி.காம் படித்தவர். கல்லூரிப் படிப்பின்போதே இசைக் குழுவில் பிரபலமான இவரை விவேக் சாரதி என்று அழைத்தவர் கல்லூரி முதல்வர்தான்.

இதுவரை 800 மெல்லிசை நிகழ்ச்சிகளுக்கு மேல் நடத்தியுள்ள திரு விவேக் சாரதி தம் நான்காம் வயது முதலே 'சங்கீதாஞ்சலி' நாடகக் குழுவில் நடித்தவர். கடைசியாக இவர் நடித்த நாடகம் 'புரந்தரதாஸர்'.

1979ஆம் ஆண்டில் தமிழ் நாடு சினிமா ரசிகர் சங்கம் இவருடைய மெல்லிசைக் குழுவைச் சிறந்தது என்று தேர்ந்தெடுத்தது.

மேற்கத்திய இசைக்கு மட்டுமே இடமளித்து வரும் நட்சத்திர ஹோட்டல்களில் முதன் முறையாக இவருடைய இசைக் குழு இடம் பெற்றதுண்டு. 'சோழா ஹோட்டலில் ஆறு மாதங்கள் தொடர்ந்து நடந்த அந்த நிகழ்ச்சிகளில் வெளி நாட்டவரைக் கவர்ந்து பாராட்டுப் பெற்றவர்.


தம் இசைக் குழுவுக்கு நிகழ்ச்சி இல்லாத நாட்களில் சங்கர் கணேஷ், மலேஷியா வாசுதேவன் குழுக்களிலும் பாடும் இவரிடம் இல்லாதது சிகரெட் பழக்கம். **-சுப்ரபாலன்**












Rediffusion/K/1221c TM

இருள்அற ஓங்கும் பொதுவிலே நடம்செய்
எங்குரு நாதன்எம் பெருமான்

அருள்எனும் வடிவம் காட்டிஒண் முகத்தே
அழகுஉறும் புன்னகை காட்டித்

தெருள்உற அருமைத் திருக்கையால் தடவி
திருமணி வாய்மலர்ந்து அருளில்

பொருள்உற இருந்துஒர் வாக்களித்து என்னுள்
புகுந்தனன் புதுமைஈது அந்தோ!

— திருஅருட்பா

---


விளம்பர உதவி:

**SRI BHAGAVATHI TEXTILES LIMITED, CHITTUR**

| | | |
|---|---|---|
| Authorised Share Capital | .. | Rs. 1,00,00,000 |
| Issued & Subscribed Capital | | Rs. 30,00,000 |
| Paid-up Capital | .. | Rs. 28,90,000 |
| Allotted Spindles | ... | 12360 |

**Established in Kerala**

Manufacturers of: 80s, 90s, 2/80s, 100s & 120s

COTTON YARN (INDIAN AND FOREIGN COTTON) AND BLENDED YARN
IN HANKS AND CONES



# Dr. சாமிகிரி சித்தர்

## காது கேளாதவர்களைக் காது கேட்கச் செய்கிறார்



**காது கேளாதவர்களே! வாருங்கள்...**

★ உங்கள் நலனில் அக்கறை கொண்டோருடன் வாருங்கள். 3 நாள்—6 வேளை சித்த வைத்திய சிகிச்சை பெறுங்கள்.

★ சந்தேகமில்லாத சந்தோஷத்தோடு காது கேட்டுச் செல்லுங்கள்.

★ காதுக் கருவி உபயோகித்தவர்களுக்கும், ஊமைத் தன்மை உள்ளவர்களுக்கும் சிகிச்சை அளிப்பதில்லை.

★ அறுவைச் சிகிச்சை செய்தும் குணமாகாதவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

★ இயற்கை சிகிச்சை இது. என்றும் பலன் அளிக்கும்.

காதுகளை பரிசோதித்த பிறகே சிகிச்சைக்கு ஏற்கப்படுவர். (ஞாயிற்றுக்கிழமை விடுமுறை)

விவரங்களுக்கு:

**Dr. சாமிகிரி சித்தர் காதொலி நிலையம்**

97, சரோஜினி ரோடு, ராம் நகர், கோயமுத்தூர்-641009



வால்மீகி



நவநீதகிருஷ்ண பாண்டியன்



கருப்பையா



கலையரசன்



வீராசாமி

# சட்டமன்றத்தில் புதுமுகங்கள்

**எதிர்ப்புத்தெரிவிக்கத்தான வேண்டுமென்றால் கண்டிப்பாகச் செய்யுங்கள். ஆனால் அந்த எதிர்ப்பு உங்கள் உள் மனத்தின் ஆழ்ந்த நம்பிக்கைகளின் வெளிப்பாடாக இருக்கவேண்டும்; ஏதோ சௌகரியம் கருதி எழுப்பப்படும் கட்சியின் கோஷமாக இருக்கலாகாது. –காந்திஜி**

**கலையரசன்** (அ.தி.மு.க.)நன்னிலம் தொகுதி

முப்பத்திரண்டு வயதாகும் இந்தத் தஞ்சாவூர்க்காரருக்கு நண்பர்களுடன் அரட்டை அடிப்பது என்றால் அல்வாத் துண்டு மாதிரி. எஸ். எஸ். எல். ஸி. வரை படித்தவரின் குடும்பத் தொழில் விவசாயம்தான்.

நன்னிலம் தொகுதியில் சிறு தொழில்கள் வளர அரசு உதவ வேண்டும் என்று கூறும் இவர் மாவட்ட விவசாயத் தொழிலாளர் சங்கத் துணைத் தலைவர்.

**ஆர் கருப்பையா** (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) குளித்தலைத் தொகுதி.

ரயில்வே குமாஸ்தாவாக வேலைக்கு அமர்ந்த இவர், கம்யூனிசக் கொள்கைகளாலும் கருத்துக்களாலும் கவரப்பட்டு அக் கட்சியில் சேர்ந்தார்.

''என் அரசியல் வழிகாட்டி தோழர் எம். கல்யாணசுந்தரம். தென்னிந்திய ரயில்வே ஊழியர் சங்கத்தின் பொன்மலைக் கிளையின் செயலாளராகப் பொறுப்பேற்று, 1946ம் ஆண்டில் நடந்த ரயில்வே வேலைநிறுத்தத்தில் தீவிரமாகப் பங்கேற்றேன். தடுப்புக் காவல் சட்டப்படி கைது செய்தார்கள். வேலையும் போச்சு. திருச்சி சதி வழக்குக்காகக் கைதானேன். தொடர்ந்து விவசாய இயக்கம், தொழிற் சங்க இயக்கத்துக்காகவும் சிறைவாசம். என் வாழ்க்கையில் ஏராளமான நாட்களை இதுபோல, சிறைகளிலேயே கழித்திருக்கிறேன்'' என்று கூறும் இவருக்கு மனைவியும், ஏழு குழந்தைகளும் இருக்கிறார்கள். ஒரு மகன் ஜீவானந்தம் மாஸ்கோவில் லுமும்பா யூனிவர்ஸிடியில் என்ஜினியரிங் படித்து வருகிறார். இவருக்கு ரொம்பவும் பிடித்தது செஸ்ஆட்டம். அரசன் அரசிகளை வெட்டி வீழ்த்த முடிவதாலோ?

**வால்மீகி** (இந்திரா காங்கிரஸ்) திருப்பத்தூர் தொகுதி

ஐம்பத்து ஏழு வயதான பழுத்த அரசியல்வாதி. ஆரம்ப முதல் காங்கிரஸ் கட்சிதான்.

''நான் உண்மையிலேயே கொடுத்துவைத்தவன்! என் தொகுதியில் நான் சார்ந்துள்ள சமூக மக்களின் வோட்டுக்கள் மொத்தம் தொண்ணூற்றி நாலுதான். இருப்பினும் பலரும் ஜாதி, மதம், வேறுபாடு இன்றி 14,000 வோட்டு வித்தியாசத்தில் என்னைத் தேர்ந்தெடுத்துள்ளனர்'' என்று கூறும் இவரின் குடும்பத் தொழில் விவசாயம்.

**ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்** (காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்) ஆலங்குளம் தொகுதி

1965ம் ஆண்டில் மாநில இளைஞர் காங்கிரஸ் தலைவராகக் குமரி அனந்தன் இருந்த போது என்னை என் பகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவராக நியமித்தார். அன்று முதல் அவர் வழியைத்தான் பின்பற்றுகிறேன். 1970 முதல் கீழ்ப்பாவூர் பேரூராட்சி மன்றத் தலைவராக இருந்து பணியாற்றி வருகிறேன்.

''என் தொகுதியான ஆலங்குளத்தில் அதிகமான கிராமங்கள் இணைப்புச்சாலை இல்லாமலும், குடிநீர் வசதி இல்லாமலும் இருக்கின்றன. இவற்றைப்பெற்றுத் தருவதே என் முதல் பணியாகும்'' என்று சொல்லும் இவருக்கு ஆறு குழந்தைகள்.

**வெள்ளூர் தா. வீராசாமி** (அ-இ-அ.தி.மு.க.) ஒரத்தநாடு தொகுதி

எம். ஏ. பட்டதாரியானாலும் இவருக்குக் குடும்பத் தொழிலான விவசாயம்தான் ரொம்பப் பிடிக்கிறது. நெல், கடலை, கேழ்வரகு, கம்பு சாகுபடி செய்வதில் எக்ஸ்பர்ட்.

''என் தொகுதி ரொம்பவும் பின்தங்கியதாகும். ஒரு கலைக் கல்லூரியை அமைத்தால் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும். மருத்துவ பஸ்ஸ கிடையாது. கால்நடை வளர்ச்சி குறைந்து வருகிறது'' என்று சொல்லும் இவர் அவற்றுக்காக முழுமூச்சுடன் பாடுபடப் போகிறாராம்.

பேட்டி: **சிக்கி**

# சத்தியங்கள் ஊசலாடுகின்றன

## ஜே.வி.நாதன்

அதிர்ஷ்டம் என்பது சில அடிகள் வித்தியாசத்தில்தான் தவறிவிடுகிறது. அல்லது கிடைத்து விடுகிறது. அழகேசனால் நம்பவே முடியவில்லை. உண்மைதானா? உண்மைதானா? கண்ணில் படுகின்ற ஒவ்வொன்றையும் வலுவில் அழைத்து அதுபற்றிக் கூற வேண்டுமென்கிற பெருமிதத்துடன் கூடிய ஆவல்; பரபரப்பு, மகிழ்வுத் துடிப்பு.

தமிழில் வெளிவரும் வார இதழ்களில் சிறந்த இதழான 'மலர்க் கொத்து'விலிருந்து வந்த கடிதம் அது. அழகாய்த் தமிழில் 'டைப்' செய்யப்பட்டுக் கீழே பத்திரிகாசிரியர் கையொப்பமிட்டிருந்தார்:

அன்புடையீர், வணக்கம்.

எங்கள் இலக்கியப் போட்டிக்குத் தாங்கள் அனுப்பிய ''ஆண்மையும் உண்மையும்'' என்னும் கவிதை. ரூபாய் ஐயாயிரம் பெறும் முதல் பரிசுக்குரிய தென நடுவர் குழுவால் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு விழா நடத்தி, அவ்விழாவில் பரிசளிக்க முடிவு செய்துள்ளோம். விழா பற்றிய அறிவிப்பினை விரைவில் தெரிவிக்கிறோம்.

தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

அன்புள்ள

(ஒ-ம்).........

ஆசிரியர்

ஐயாயிரம் ரூபாய்... அடேயப்பா! அழகேசனுடைய தலை கம்பீரமாக நிமிர்ந்து கொள்கிறது. வீதியில் இராஜ நடை நடக்கிறான். ''பெரிய ஆளையா நீர் — இவ்வளவு திறமை எங்கே ஐயா வச்சிருந்தீர்?'' — எதிர்ப்படுகிறவர்கள் எல்லோரும் கேட்கிற கேள்வி— அதிசயத்துடன், பிரமிப்புடன், பொருமையுடன்.

வாசலில் கார் ஒன்று வந்து நிற்கிறது. ''கவிஞர் சார் வீடு இதுதானே?''

''ஆமாம், உள்ளே வாங்க!''

''வானவில் க்ரியேஷன்ஸின் ப்ரொட்யூசர் நான். எங்க அடுத்த திரைப்படத்துக்கு நீங்கதான் பாட்டெழுதணும். பிடியுங்க அட்வான்ஸ் ஐயாயிரம்...''



நினைப்பதற்கு எவ்வளவு ஜோராக இருக்கிறது. நிஜமாக நடக்குமா? நடக்கத்தான் போகிறது.

மனைவி சரளா ஊரில் இருந்திருந்தால் இந்நேரம் பலவித ஸ்வீட்களோடு ஒரு திருவிழாவே கொண்டாடி விருப்பாள். தோழியின் மகளுக்கு நிச்சயதார்த்தம் என்று வேலூருக்குப் போயிருக்கிருள். நாளை வருவாள். அவள் இல்லாததும் ஒருவகையில் நல்லதாயிற்று. எழுந்தான். பளிச்சென்று உடைகளைத் தேர்ந்தெடுத்து அணிந்துகொண்டான்.



டாக்ஸி பிடித்து அண்ணாநகர் போனான். தெரு முனையில் பெட்டிக்கடையின் முன் இறங்கிக்கொண்டு நடந்தான். புதிதாகத் தோன்றிய நகர் அது. அங்கேதான் அவனது நண்பன் சுராஜின் பங்களா இருந்தது.

சுவரில் தெரிந்த காலிங் பெல்லை அழுத்த, உள்ளே கிணு கிணுவென்று அழகிய கீதமாக மணி ஒலித்தது.

''ஓ, நீங்களா — வாங்க!''

''ஆம் சௌமி, சுரேஷ் இருக்கிருனா?''

''உள்ளே வாங்க! இந்த நேரத்தில் என்னிக்கு அவர் இருந்திருக்கிருர்? காலை ஒன்பது மணிக்கே பஜாரில் கடையைத் திறந்து உட்கார்ந்தால்தானே தங்கமும் வெள்ளியும் விற்பனை செய்ய முடியும்?''

கதவை உட்புறமாகத் தாளிட்டு விட்டு அவளைத் தன் பக்கம் இழுத்தான் அழகேசன்.

மேடை ஜாஜ்வல்யமாக ஒளியில் குளிக்க, நடுநாயகமாக அழகேசன் வீற்றிருந்தான்.

அவனுடைய முதற் பரிசுக் கவிதை 'ஆண்மையும் உண்மையும்' அக்கு வேறு ஆணி வேருக அலசப்பட்டுக் கொண்டிருந்தது. அதில் அவனுக்குத் தெரியாத அம்சங்களைக் கண்டுபிடித்துப் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தார், இலக்கிய மேதையான நீதிபதி ஒருவர். அவர்தான் அன்றைய விழாத் தலைவர். 'பளிச் பளிச்' சென்று ஃபிளாஷ்கள் மின்னின.

கூட்டத்தைக் கம்பீரமாகப் பார்த்துக் கொண்டிருந்த அழகேசனின் பார்வையில் தொலைவு ஆசனம் ஒன்றில் இருந்த வயோதிகர் ஒருவர் பட்டார். 'அட இவரா?' சட்கென்று பார்வையைத் திருப்பிக்கொண்டான். உடம்பு மெல்ல நடுங்கியது. இந்தக் கிழவன் இங்கு எப்படி வந்தான்?

''புலவர் சார் இருக்கிருரா?''

''அடடே, அழகேசனு, வாப்பா வா!''

''சௌக்கியம்தானு? இலக்கிய உலகம் எப்படி இருக்கு ஸார்?''

''இப்ப நான் பவணந்தி முனிவரைப் பற்றி — அவர் எழுதின இலக்கண சூத்திரங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்துக்கிட்டிருக்கிறேன் தம்பி....''

''கவிதைகள் ஏதும் எழுதலையா?''

''இரண்டு எழுதினேன். என் கவிதை நோட்டில் கடைசியாக இருக்கிறது பார்.''

''அடேடே! முதல் வரியே எத்தனை அழகாய் — ஆழமாய்.... நான் படிச்சுட்டு நாளைக்கு நோட்டைத் திருப்பித் தரேன் சார்! ஓஹோன்னு உங்க கவிதைகளைத் தமிழ் கூறும் நல்லுலகம் பாராட்டத் தான் போகுது....''

அழகேசன் கூறியது உண்மையாகத்தான் ஆயிற்று. புலவர் தமிழ்க் கண்ணனிடம் படித்துவிட்டுத் தருவதாகச் சொல்லி வாங்கி வந்த கவிதை நோட்டை அவன் திருப்பித் தரவே யில்லை. அதிலிருந்து ஒரு கவிதையை உருவித் தன் பெயரில் 'மலர்க் கொத்து' இலக்கியப் போட்டிக்கு அனுப்பி வைத்திருந்தான். அதற்குத்தான் இப்போது பாராட்டும் பரிசும் விழாவும் அமர்க்களமும்!

அழகேசன் நடுங்கினுன்.

புலவர் தமிழ்க் கண்ணன் இந்த விழாவுக்கு வருவார் என்று அவன் நினைக்கவே இல்லை. மனிதர் உண்மையை இந்தப் பெரும்

கூட்டத்தில் உடைந்து மானத்தை வாங்கி விடுவாரோ?...

·பரிசுக்காசோலை அடங்கிய உறையைத் தலைவர் பரிசளித்தார். கூட்டம் கைதட்டியது. நன்றியுரையை இரண்டொரு வார்த்தைகளில் சுருக்கமாக முடித்துவிட்டு வந்து அமர்ந்தான்.

விழா முடிவுற ஒரிரு நிமிடங்கள் இருந்தபோது புலவர் தமிழ்க் கண்ணன் அமர்ந்த இடத்தை நோக்கிக் கண்களை நகர்த்தினான். அவர் இருந்த இடம் காலியாக இருந்தது.

**டா**க்சியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தான் அழகேசன். இரவு மணி பத்து.

நடந்தவைகளை அவன் மனம் அசை போட்டது. சட்டைப் பைக்குள் ரூபாய் ஐயாயிரத்துக்கான செக்! மனத்தில் மகிழ்ச்சி! 'இது நியாயமா அழகேசா?' அந்தக் கிழவர் திடுமென முன்னால் தோன்றிக் கேட்டார்.

திருப்பமொன்றில் திரும்பியபோது சாலையோரப்பிள்ளையார் கோயில் ஒன்றின் மீது டாக்சியின் முன் விளக்கொளி பட்டது. அந்தக் கணத்தில் அழகேசனுக்குத் தெரிந்த காட்சி... பிள்ளையாரின் முன் இரு கைகளையும் கூப்பித் தொழுது நின்ற அந்த ஜிப்பா உருவம், நரைத்த தலை, ஒல்லியுடல், புலவர் தமிழ்க் கண்ணன்தான். அவர் விநாயகரிடம் என்ன பிரார்த்தனை செய்கிறார்?

அழகேசன் சிரித்துக் கொண்டான்.

டாக்சியை அனுப்பிவிட்டு வீட்டினுள் அவன் நுழைந்தபோது நிசப்தம். தொட்டதுமே திறந்து கொண்டது தெருக் கதவு. ''சரளா! சரளா!'' என்று அழைத்தவாறு உள்ளே போனான்.

ஹாலில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஹால் நடுவே இருந்த மேசையில் ஒரு தாள் படபடத்தது. 'அட, இதென்ன!' மேலே வைக்கப்பட்ட வெயிட்டை எடுத்துவிட்டுப் பரபரப்புடன் அந்தத் தாளைப் படிக்கத் தொடங்கினான்.

**"ச**ரளா எழுதுகிறேன்.

இது என் கடைசிக் கடிதம்.

நான் உங்களை உயிருக்கும் மேலாக நேசித்தேன். அதனால்தான் என் சுற்றம், உற்றார், பெற்றோர் அனைவரையும் எதிர்த்து, சொத்துசுகங்களைத் துறந்து உங்களைத் திருமணம் செய்து கொண்டேன். உங்கள் மீது கொண்ட தூய அன்புக்காக நான் எத்தனையோ இழந்து நிற்கும்போது எனக்காக நீங்கள் என்ன செய்தீர்கள்?

உங்கள் உயிர் நண்பருக்குத் துரோகம் செய்து அவர் இல்லாத சமயங்களில் நீங்கள் அவருடைய மனைவியுடன் கூடிக் குலவுகிற விவரங்கள் எல்லாம் அறிய நேர்ந்தது என் துரதிர்ஷ்டம் தான். பூட்டியே இருக்கும் உங்கள் பீரோவின் லாக்கரை மறதியால் இன்று பூட்டாமல் போய் விட்டீர்கள். தற்செயலாகப் பீரோவைத் திறந்தவள் திறந்திருந்த லாக்கரினுள் அவள் உங்களுக்கு எழுதிய காமரசம் சொட்டும் கடிதங்களை, ஆட்டோமாடிக் காமிராவில் நீங்கள் இருவரும் கட்டிப் பிடித்துக் கொண்டு எடுத்த பலகோணப் புகைப்படங்களை நான் பார்த்தேன்.

பிறன் மனை நோக்காத பேராண்மையோ, கட்டிய மனைவிக்குத் துரோகம் செய்யாத நேர்மைத் திறனோ, பழைய நண்பர் — ஆசான் தமிழ்ப் புலவர் தமிழ்க் கண்ணன் போன்றோருக்கு முதுகில் கத்திக் குத்தாத உண்மையின் உயர்வோ இல்லாத உங்களோடு வாழ எனக்குத் தெம்பில்லை. போகிறேன்.

போகு முன் இரண்டு காரியங்களைச் செய்துவிட்டுத்தான் போகிறேன்.

ஒன்று: உங்களுக்கும் உங்கள் நண்பரின் மனைவிக்கும் இடையில் உள்ள கள்ளத் தொடர்பைப் பற்றியும் இனியேனும் ஜாக்கிரதையாக இருக்குமாறும் உங்கள் நண்பர் சுராஜுக்கு ஒரு விவரமான கடிதம் எழுதி— அவருடைய மனைவி உங்களுக்கு எழுதிய கடிதங்கள் — புகைப்படங்களுடன் அனுப்பியிருக்கிறேன்.

இரண்டாவது: புலவர் தமிழ்க் கண்ணனின் கவிதை நோட்டை இரவல் வாங்கி வந்து அதிலிருந்து கவிதையைத் திருடிப் போட்டிக்கு அனுப்பிப் பரிசு பெற்ற விஷயத்தைக் குறிப்பிட்டு, பரிசு பெற வேண்டியவர் புலவரே என்று எழுதி, அந்தக் கவிதை நோட்டையும் சேர்த்து 'மலர்க் கொத்து' ஆசிரியருக்கு அனுப்பி வைத்தேன்.

கடைசியாக ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உலகத்திலேயே பெரிய துரோகம் நம்பிக்கைத் துரோகம்தான். அதற்கு மட்டும் மன்னிப்பே கிடையாது!

—சரளா.

''அடி, சண்டாளி!''

வாய் விட்டே திட்டியபடி தளர்ச்சியுடன் நடந்து படுக்கை அறையைநோக்கிப் போனான் அழகேசன்.

வழக்கமாக அறையின் நடுவில் காணப்படும் கட்டில் ஓர் ஓரத்துக்குத் தள்ளப்பட்டிருந்தது. அங்கே ஒரு ஸ்டூல் சாய்ந்து கிடந்தது. அது நின்றிருந்திருக்க வேண்டிய இடத்துக்கு நேரே மேலே அவளது கால்கள் தொய்வுடன் தொங்கி இலேசாகக் காற்றில் ஊசலாடிக் கொண்டிருந்தன!



**விடுங்கள், ஏக்கப் பெருமூச்சு!**

ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தமான கேனரி தீவில் காலமான செல்வந்தர் தம் சொத்தான ஒன்றரைக் கோடிப் பவுன்களைத் தமக்குப்பிறகு வாரிசுகள் யாரும் இல்லாததால் தம்முடைய பதினெரு தொழிற்சாலைகளில் பணிபுரியும் முந்நூறு தொழிலாளிகளுக்கும் எழுதி வைத்துள்ளார். இதன்மூலம் ஒவ்வொரு தொழிலாளிக்கும் கிடைக்கும் தொகை எவ்வளவு தெரியுமா? சுமார் 10 லக்ஷம் ரூபாய்! - ரமணி



# பழம் மட்டுமா தருகிறது?

அருள் வாக்கு

சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்

அஞ்ஞானத்தைப் போக்கிக் கொள்ளாத ஒருவன் மீண்டும் மீண்டும் பல பிறவிகள் எடுப்பதும், இறப்பதுமாகிய இந்தத் துக்ககரமான ஸம்ஸாரத்தில் அவதியுறுகிறான். ஆயினும் ஒருவன் மனிதப் பிறவி எடுத்ததற்குக் காரணம் அவனது பூர்வ ஜன்ம புண்ணியங்கள் என்றே கூற வேண்டும்.

உலகில் உள்ள ஒவ்வொருவனும் தனக்கு எப்போதும் சுகம் கிடைக்க வேண்டும் என்றே விரும்புவான். துக்கம் வருவதை ஒருவனும் விரும்ப மாட்டான். சுகத்தைத் தேடி அலையும் மனிதன் லௌகிகமான போகங்களில் ஈடுபடுகிறான். ஆனால் அவனது போகங்களிலிருந்து மெய்யான பேரின்பம் கிடைப்பதில்லை. போலியான சிற்றின்பமும் அதிக துக்கங்களுமே மிஞ்சுகின்றன. இது தெரியாமல் மேலும் மேலும் லௌகீக போகங்களில் ஈடுபட்டுத் தன் ஸ்வல்ப வாழ்நாளையும் வீணடிக்கிறான்.

'மனித வாழ்வு நிலையானதல்ல. ஒரு நாஸ்திகனுக்குக்கூட 'நான் என்றாவது இறந்துவிடுவேன், இவ்வுடல் அழிந்துவிடும்' என்ற நிச்சயம் இருக்கும். ஆகவே அவன் இருக்கின்ற வாழ்நாட்களிலேயே தர்ம விஷயங்களில் ஈடுபட வேண்டும். சாஸ்திரங்கள் கூறுவது போல் நடக்க வேண்டும். இப்படி அவன் தர்ம விஷயங்களிலேயே தன் வாழ்நாளைச் செலுத்துவானேயானால் செல்வம் முதலியன தாமாகவே அவனை வந்தடையும். நாம் ஒரு மாமரம் நட்டு அதனைப் பேணி வளர்ப்பது அதனுடைய பழத்துக்காக. ஆயினும் அதோடு கூட குளுமையான நிழலும், சுகந்தமும் எப்படித் தாமாகவே நமக்குக் கிடைக்குமோ அப்படித்தான் தர்ம விஷயங்களில் ஈடுபட்டிருப்பவனுக்குச் செல்வம் முதலியவை தாமாகவே வரும். எனினும் அஞ்ஞானியான ஒருவன் என்ன கர்மாக்கள் செய்தாலும் அதனால் அவன் இந்த துக்க சாகரத்தைக் கடக்க முடியாது. ஆத்ம ஞானம் ஒன்றே இதற்கு முடிவாக முடியும். தன்னுடைய உண்மையான ரூபம் என்ன என்பதை விசாரம் பண்ண வேண்டும். நான் இந்த மனமும் அல்ல இந்த உடலும் அல்ல, எல்லாவற்றையும் ஸாக்ஷியாகப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த சைதன்ய சொரூபிதான் நான் என்று தீர்மானமுள்ள ஒருவனுக்கு என்ன துக்கம் தான் வரமுடியும்? அந்த உண்மையான 'நான்' தான் 'ஆத்மா'. 'சச்சிதானந்த ஸ்வரூபி' என்கிறோம். சுக துக்கங்கள் பற்றி நாம் யோசித்துப் பார்த்தோமானால் மனிதனுடைய துக்கத்துக்குக் காரணம் அவன் பிறவி எடுத்ததேயாகும் என்பது தெரியும். இவ்விதமான பிறப்புக்குக் காரணம் அவனது கர்மாக்களேயாகும். இந்தக் கர்மாக்களுக்கும் காரணம் ராகத்வேஷ மோஹங்கள் என்னும் தோஷம். இதற்கும் காரணம் என்னவென்றால் அவனுடைய அஞ்ஞானமேயாகும். இவ்வித அஞ்ஞானத்தைப் போக்குவதே நம் வாழ்க்கையின் லட்சியமாக இருப்பதை விட்டுக் கேவலம் லௌகிகப் போகங்களிலேயே வாழ்நாளை வீணடித்தால் நம்மைக் காட்டிலும் இழிந்த பிறப்பான ஒரு பிராணியின் ஜன்மாவே சிரேஷ்டம் என்று கூறுவது மிகையாகாது.

---

## இப்படியும் ஒரு மந்திரி!


தமிழக தேர்தல் பிரசாரங்கள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் திருநெல்வேலி "சங்கீத் ஹோட்டலில்" கேரள மந்திரியை வரவேற்க கட்சி தொண்டர்களும் ஊழியர்களும் காத்து நின்றிருந்தனர். அப்போது ரயில் நிலையத்திலிருந்து ஒரு ஆட்டோ வந்தது. அதிலிருந்து ஒரு பையுடன் இறங்கிய ஒருவர் "மந்திரி ரூம் எது" எனக் கேட்டார். இவர் மந்திரிக்கு வேண்டியவராக இருக்கலாம் எனக் கருதி ரூமை காட்டிக் கொடுத்திருக்கின்றனர். வந்தவரும் ஆட்டோவுக்குப் பணம் கொடுத்துவிட்டு மந்திரி ரூமுக்குள் சென்றுவிட்டார். சிறிது நேரத்தில் அவர் குளித்து விட்டு வெளியே வந்தார். பெரும் கூட்டம். வாசலில் மந்திரியை வரவேற்கக் காத்திருந்தது. அச்சமயம் தாசில்தார் வந்து ரூமிலிருந்தவருக்கு மாலை அணிவித்தார். அப்போது தான் அங்கிருந்தவர்களுக்கெல்லாம் தெரிந்தது அவர் தான் கேரள மந்திரி என்பது. அந்த மந்திரி பெயர் ராமகிருஷ்ணன். கேரளாவில் உள்துறை அமைச்சராகப் பதவி வகிக்கிறார். சிறிது நேரத்தில் மந்திரி ராமகிருஷ்ணன் பக்கத்திலிருந்த ஓட்டலில் சென்று டீ வாங்கிக் குடித்துவிட்டு ஒரு டாக்ஸியைப் பிடித்துக்கொண்டு அதில் ஏறிப் பிரசாரம் செய்யப் புறப்பட்டுச்சென்றார். தேர்தல் பிரசாரத்திற்கு வந்திருப்பதால் அரசுக் காரோ போலீஸ் உதவியோ வேண்டாம் என அவர் கூறிவிட்டுச் சென்றதைப் பார்த்தவர்கள் மூக்கில் விரலை வைத்து நின்றனர்.

தகவல்: என். எஸ். மணி



### சென்ற இதழில்...

அறுபத்து நான்கு வயது லட்சாதிபதி மாப்பிள்ளை ராஜாமணி இருதயநோய் காரணமாக ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருக்கிறார். அவருடைய கடைசிப்பிள்ளை, இருபத்தெட்டு வயது அர்ஜுன் அவரைக் கவனித்துக் கொள்ளுகிறான். ஒரு நாள், வழக்கம் போல் அதிகாலையில் GHக்கு எதிரே இருக்கும் சென்ட்ரலில் காப்பி குடித்துவிட்டுத் திரும்புகையில் கோபிச்செட்டிபாளையத்தில் வக்கீல் குமாஸ்தாவாக இருக்கும் சாமா அவனைப் பார்க்கிறான். தன் தலைக்குப் பாரமாக இருக்கும் இரு பிரயாணிகளை அவன் தலையில் சுமத்துகிறான். அவர்கள் நடேசனும் அவருடைய பெண் மல்லிகாவும். இருபத்திரண்டு வயது மல்லிகா உடனடியாக அர்ஜுனனின் கவனத்தை ஈர்க்க, அவர்களை அவன் ஏற்றுக் கொள்ளுகிறான். அன்றைய தினம் ரம்யமாக விடிந்திருக்கிறது என்ற எண்ணம் அர்ஜுன் மனத்தில் உண்டாகிறது.



# GH

## பி.வி.ஆர்.

### அத்தியாயம் 2

உலகத்தில் மல்லிகா எதையாவது நினைத்துப் பயந்தான் என்றால் அது ஒரு மூன்று எழுத்து வார்த்தையைத்தான். கதைகளிலும் சினிமாக்களிலும்தான் அந்த வார்த்தைஇயங்குகிறது. நிஜவாழ்க்கையில் அதற்கு இடம் இல்லவே இல்லை என்று நினைத்திருந்த அவளை இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு கடிதம் வந்து தாக்கியது. படித்ததும் அவளுக்கு உடம்பு பயத்தில் நடுங்கவில்லை, கோபத்தில் பற்றி எரிந்தது.

வேணுகோபாலன் என்ற ஒரு போக்கு அற்ற மனிதன் அவளுக்கு அவலட்சணமான கையெழுத்தில் ஏதோ ஒரு கதையில் வந்த வரிகளை அப்படியே காப்பியடித்து எழுதியிருந்தான். அம்பிகாபதி — அமராவதி காலத்திலேயே அம்மாதிரிக் கடிதத்தைப் பழமையின் சிகரமாகக் கருதியிருப்பார்கள். பூவும் தேனும் வண்டும் கடிதத்தில் விளையாடி ஓய்ந்தவை.

அந்தக் காதல் கடிதத்தை எழுதிய வேணுகோபாலன் அசடு. முகவரியையும் குறிப்பிட்டுக் கையெழுத்தையும் இட்டிருந்தான். முதலில் அம்மாவிடம் காட்டலாமா என்று மல்லிகா யோசித்தான். அது விபரீதத்தில் முடியும் என்று தோன்றிற்று. அவளுடைய அம்மா அவளை எப்படியாவது,எவன் தலையிலாவது கட்டி, கட்டுச்சாத மூட்டையுடன் அனுப்பத் துடித்துக் கொண்டிருந்தாள். தன் பெண்ணுக்கு ஒரு காதல் கடிதம் வந்திருப்பதைக் கண்டால் அதையே லக்னப் பத்திரிகை

யாகக் கருதி, ஓர் ஆவேசத்துடன் கல்யாண நாளை நிச்சயம் செய்து விடுவாள். சாதாரண மாக காதல் கல்யாணங்களில் வரதட்சணை யைப் பற்றிப் பேச்சு இருக்காது என்று அவள் நினைப்பவள். அம்மாவின் குணத்தை அறிந்த மல்லிகா கடிதத்தை எட்டாக மடித்து, யாரும் கைவிட்டு எடுக்க முடியாதபடி, தன் உடம்பிலேயே புதைத்துக் கொண்டு நேரே வேணுகோபாலனுடைய வீட்டுக்குச் சென் றாள். அவன் இருந்த தெருவின் கோடியில் ஒரு வெற்றிலை பாக்குக் கடைக்குப் பின்னால் இருந்த பல ஒற்றை அறைக் குடித்தனங் களில் ஒன்றில் அவன் இருந்தான். அவள் போனபோது காலை மணி ஏழு.


''மிஸ்டர் வேணுகோபாலன்!''

ஒரு தடவைக்கு இரண்டு தடவை யாகக் குரலை உயர்த்தி அழைத்த பிறகு ஓர் உருவம் வெளிப்பட்டது. தலையின் ரோமக் காட்டில் நெற்றியின் நீள அகலம் தெரியவில்லை. இன்னும் கலை யாத தூக்கத்தின் காரணமாகக் கண் விழிகள் எள் உருண்டையா அல்லது கோலி உருண்டையா என்பது விளங்க வில்லை. உப்பின கன்னத்தைப் பாதி காத்த வண்ணம் வளர்ந்த தாடி தாடைக் குக் கீழே தொங்கியது.

''மிஸ்டர் வேணுகோபாலனைப் பார்க்க வேண்டும்!'' என்றாள் மல்லிகா.

காதல் கடிதம் எழுதியவன் அல்லவா? அவன் துள்ளிக் கொண்டு முன்வந்தான்.

அவனுடைய குள்ளமான உடல் ஏழெட்டு அடி உயர்ந்து விசுவ ரூபம் எடுத்தது. மூன் றரை அடி அகலமான மார்பு மேலும் விரிந் தது. அவனுடைய காதலி அவ்வளவு விரை



வில் அவனைத் தேடிக்கொண்டு ஓடிவந்து தூக்கத்திலிருந்து அவனை எழுப்புவாள் என்று அவன் சொப்பனத்தில் கூட நினைக்கவில்லை.

"உள்ளே வா மல்லி..."

ஏதோ பல காலம் அன்னியோன்னியமாகப் பழகியவளைப் போல அவன் அவளை உரிமையுடன் அழைத்தான்.

மல்லிகாவுக்கு ஒரு குணம். கோபம் வரவேண்டிய சமயங்களில் அது வராது. மனம் கேலியிலும் நையாண்டியிலும் நிலைக்கும்.

"நீங்கதானே வேணு என்பவர்?"

"நானேதான்... என் கடிதாக கிடைச்சுதா?"

"உம்... அது கிடைச்சுத் தானே ஓடோடி வந்தேன். உங்களுக்கு ஊறுகாய் பிடிக்குமா? மோர் மிளகாய் பிடிக்குமா?"

அவனுடைய கேள்வியின் உட்பொருள் அவனுக்கு விளங்கவில்லை. இருந்தாலும் எலுமிச்சை ஊறுகாய் நினைவுக்கு வந்தது.

"எலுமிச்சங் காயை என் அம்மா துண்டு துண்டா நறுக்கி எண்ணெயில் வதக்கி அப்புறம்...."

"போதும், புரிஞ்சுது. கத்தியை நீயே கொண்டு வர்றியா? இல்லே நான் ஏற்பாடு பண்ணட்டுமா?"

திடீரென்று அவள் ஏன் ஏக வசனத்தில் இறங்குகிறாள் என்று வேணுகோபாலனுக்குப் புரியாமல் போகவே விழித்தான்.

"நான் வேலை செய்யற தொழிற்சாலையிலேயே உன்னைக் கட்டை விரலாலே தூக்கி சுண்டு விரலாலே அழுத்தறவங்க இருக்காங்க...இனிமே இந்த மாதிரி டர்ட்டி லெட்டர்ஸ் எழுதினே, உன் சப்பாத்தி மாவு உடம்பிலேந்து எலும்புகளை யெல்லாம் எடுத்துப் பொடி பண்ணிக் கோழிகளுக்குப் போட வைப்பேன்."

தாழ்ந்த குரலில் அவள் பேசியது அவனுக்கு இதமாக இருந்திருக்க வேண்டும். மௌனமாக அவளையே பார்த்தவனாக நின்றான். பிறகு சமாளித்துக் கொண்டு, "நான் மூணு மாசமா தினமும் உன்னைப் பஸ் ஸ்டாண்டில் பார்க்கிறேன். நான் ஹாஸ்பிடல் டியூட்டிக்குப் போறப்போ நீ அங்கே நிப்பே!" என்றான்.

"இதுமாதிரி இன்னொரு லெட்டர் வந்தா நீ ஹாஸ்பிடலுக்கு டியூட்டிக்குப் போக மாட்டே. காஷுவால்டி வார்டுக்கு நேரே போவே!"

அவன் நகர்ந்தான்.

"என்னை மன்னிச்சுடு."

"ஒழிஞ்சு போ."

"அந்த லெட்டரை எங்கிட்டயே கொடுத்துடு....."

"அதை பாங்க்லே லாக்கர்லே வைச்சிருக்கேன்..."

மல்லிகா வீடு திரும்பினாள்.



அவள்: "சிறுகதை எழுதறதை ஏன் நிறுத்திட்டீங்க...?"
அவர்: "மாப்பிள்ளையின் ஆவிகளில் வந்து மிரட்டுற மிரட்டல் தாங்க முடியலே... என் சிறுகதைகளில் இனிமே கை வச்சி யாரு தெரியும் சேதிறு!"
- உ. ராஜாஜி

ஜெனரல் ஆஸ்பத்திரியில் அவுட்பேஷன்ட் டிபார்ட்மென்டிலிருந்து ஏழு மாடி கார்டியாலஜி பிளாக்குக்கு வந்து கொண்டிருக்கையில் அந்த வேணுகோபால் ஒரு கைவண்டியைத் தள்ளிக் கொண்டு போவதைப் பார்த்தாள். குள்ளம். அகலத்தின் வளர்ச்சி காரணமாக இன்னும் குள்ளமாகியது. தாடி இல்லை. ஆனால் கொத்து மீசை. தலைமயிர் ஒரு காடாக இல்லை. இரண்டும் கெட்டானாக ஒரு வெள்ளைத் தொப்பி மறைத்தது. கை வண்டியை அவன் வெகு லாகவமாகத் தள்ளிக்கொண்டு போவதைக் கண்டு அவள் ரசித்த அதே கணம், 'இந்தப்பயல் அல்லவா அன்று எனக்குக் காதல் கடிதம் எழுதினான்' என்று ஆச்சரியம் தோன்றியது. என்றோ மறந்துவிட்ட நிகழ்ச்சியை ஞாபகப்படுத்த என்றே வேணுகோபாலன் கோயமுத்தூரிலிருந்து சென்னைக்கு வந்திருக்கிறானா?

திடீரென்று ஒரு புது விதமான எண்ணம் அவளுள் உதயமாயிற்று. வேணுகோபாலன் ஒரு சம்பவத்தை நினைவுக்குக் கொண்டுவரவில்லை, ஒரு உன்னதமான, தெய்வீகமான உணர்ச்சியை நினைவுக்கு இழுத்திருக்கிறான்.

காதல்!

ஏன் அவள் அதைப் பற்றி நினைக்க வேண்டும்? இதுவரையில் காதல் என்பது சினிமாக்களிலும் கதைகளிலும் அலுக்க வைக்கும் கற்பனை என்று நினைத்திருந்தாளே. அது ஏன் இப்போது அவளுடைய நெஞ்சின் ஓரத்தில் நின்று எட்டி எட்டிப் பார்க்க வேண்டும்?

ஏழு மாடிக் கட்டடத்தைப் பார்த்தாள். மேலிருந்து கீழாகப் பார்த்தாள். அடித்தளம் கண்ணில் பட்டது.

1966ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் தேதி (பதிமூன்று அன்லக்கி என்பார்களே!) ஆளுனர் உஜ்ஜல் சிங் தலைமையில் முதல் மந்திரி பக்தவத்சலம் அடிக்கல் நாட்டியிருக்கிறார். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகுதான் கட்டடம் பூர்த்தியாகியிருக்கிறது. முதல் மந்திரி கருணாநிதி 1972 ஏப்ரல் ஏழாம் தேதி திறந்து வைத்திருக்கிறார்.

இத்தனை ஆண்டுகளில் ஏழு மாடிகள். அமெரிக்காவில் நூற்றைம்பது மாடிகளை இரண்டே ஆண்டுகளில் கட்டிவிட்டு, மூச்சு விடாமல் அடுத்த கட்டடத்தைப் பார்க்க ஓடுகிறார்கள். சர்க்கார் வேலை என்றால் இப்படித்தானோ என்னவோ? ஆனால் இந்த இத்தனை ஆண்டுகளில் எத்தனை ஆயிரம் பேர் வைத்திய வசதி கிடைக்காமல் எரிந்திருப்பார்கள் அல்லது புதைந்திருப்பார்கள்?

"மல்லிகா!"

திடீரென்று வந்த குரலில் திடுக்கிட்டாள். பார்த்தாள். அர்ஜுனன்.

"ஓ. நீங்களா?"

"என்ன செய்திட்டிருக்கே?"

''உங்களுக்காகக் காத்துக்கிட்டிருக்கேன். அப்பா எங்கே?''

''அட்மிஷன் கிடைச்சுடுத்து. ஆனா ஜெனரல் வார்டிலேதான் இப்போதைக்கு கிடைச்சுருக்கு.''

''என்னவாம்?''

''தெரியாது. என்னென்ன டெஸ்டுகள் உண்டோ அவ்வளவு டெஸ்டுகளையும் பண்ணிடுவோம்னு டாக்டர் வேதா சொன்னார்.''

''வேதாவா? ஆணா, பெண்ணா?''

''ஆண்தான். வேதராமன்னு பேராம். அமெரிக்கா போறபோது 'ராமா'வைக் கழட்டி வைச்சுட்டார் போலிருக்கு.''

''ஆனா அங்கே இருக்கிறவங்களெல்லாம் ராமா, கிருஷ்ணான்னு பஜனை செய்யறார்கள்.''

''அதை விடு. என்ன சாப்பிட்டே?''

''ஒன்னுமில்லே. எதை எங்கே சாப்பிடறதுன்னு தெரிஞ்சாத்தானே... அர்ஜுன் நீங்க மட்டும் சமய சஞ்சீவியா வந்திருக்கலேன்னா, நான் என்ன செஞ்சிருப்பேனோ தெரியாது.''

''என்ன செய்திருப்பே? நீயே நேரே உன் அப்பாவை அழைச்சுட்டு அட்மிஷனுக்கு அலைஞ்சு வாங்கியிருப்பே.''

''அப்பா என்ன செய்யறார்? இப்போ நான் போய்ப் பார்க்கலாமா?''

''ஊஹூம்... இப்ப வேண்டாம். உன் அப்பா வந்ததும் வராததுமா பக்கத்துக் கட்டிலோடே சண்டையை ஆரம்பிச்சுட்டார்.''

''என்ன நடந்தது?''

''பக்கத்துக் கட்டில் ஒரு கால் முறிவு கேஸ்... இன்னிக்கோ நாளைக்கோ அவனை டிஸ்சார்ஜ் செய்துடுவாங்க...''

''அதுக்காகச் சண்டையா?''

''கேளு... அவன் திருட்டு 'தம்' அடிக்கிறான்....''

''அப்படின்னா?''

''பீடி குடிக்கிறான். நோயாளிகள் வார்டிலே குடிக்கப்படாது. ஆனா இவன் குடிக்கிறான். உன் அப்பா மூஞ்சியைப் புகை தாக்கி இருக்கு. கத்தினார்...''

''உம், அப்புறம்?''

''அவன் அடிக்கடி ஆஸ்பத்திரிக் கட்டிலில் மல்லிகைப் பூ பரப்பிப் படுக்கிறவன் போலிருக்கு.... 'டேய் பாப்பான், நான் யாருன்னு நெனைச்சே... கிழிச்சுடுவேன் என்கிறான்.''

''அப்படின்னா?''

''கிழிச்சுடுவேன்...''

''கிழிப்பானா?''

''நீ ஒன்னு... மெட்ராஸ்லே செய்யறவன் சொல்ல மாட்டான். சொல்றவன் செய்ய மாட்டான்.''

''குரைக்கிற நாயா?''

''அதுவேதான்... இன்னொன்று தெரியுமா?'

''என்ன?''

''உன் அப்பா இன்னிக்குக் காத்தாலே சென்ட்ரல்லேயே உன்னுடன் நடந்து வர்றப்போ, எப்போ கீழே விழுவாரோன்னு இருந்தார். இப்ப அமர்க்களமா கட்டில்லே உட்கார்ந்து தினத்தந்தி படிக்கிறார்.''

''மாய்மாலமா?''

''எல்லா டெஸ்டுகளையும் முடிப்போம்.''

''இப்ப நீ என்ன செய்யறே...''

''என்ன?''

''என் ஃபாதர் ஷேவிங்கை முடிச்சு குளிச்சுட்டு முகத்துக்குப் பவுடர் போட்டுண்டிருப்பார்... அவரைப் பார்ப்போம்.''

''உங்க அப்பா ஹாஸ்பிடல்லே இருக்காரா அல்லது ஒரு ஹோட்டல்லே இருக்காரா...?''

''ஹார்ட் கேஸ்... அதனாலே சமயம் வர்றப்போதான் கண்ணை மூடிண்டு கிடக்கணும். அவரை உனக்கு... ஸாரி உன்னை அவருக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். இன்னிக்கு மத்தியானத்திலிருந்து நீதானே அவரைக் கவனித்துக் கொள்ளணும்...''

''அவர் முகத்துக்கு என்னாலே பவுடர் பூச முடியாது.''

''வேண்டாம். அதுக்கு அவர் விடவும் மாட்டார். அப்புறம் நீயும் நானும் எங்க வீட்டுக்குப் போகிறோம்...''

''ஏன்?''

''பின் எங்கே நீ தங்கப் போவதாக உத்தேசம்?''

''சிந்தாதிரிப்பேட்டையில் என் ஒன்னு விட்ட அத்தை பெண் இருக்கிறாள். அங்கே.''

''அங்கேயும் போகலாம். அங்கே நல்ல வசதி இருந்தா நீ அங்கேயே தங்கிக்கலாம். ஆனா இன்னிக்கு நான் சொல்லுவதைக் கேளு... சாமா உன்னையும் உன் அப்பாவையும் என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்.''

மல்லிகா பதில் சொல்லவில்லை. அவனைப் பார்த்தாள். அவனுடைய கலையாத புன்முறுவல் ஒரு நிமிடம் அவளைத் தடுமாறச் செய்தது.

''உங்க அப்பாவைப் பார்ப்போம்...''

● ● ●

**கா**ர்டியாலஜி பிளாக்.

''இங்கே சின்னச் சின்னதா ஆறு அறைகள் இருக்கு. நோயாளி வந்ததும் இங்கே முதல் பரிசோதனை நடக்கும்... உள்ளே என்ன பரிசோதனை எப்படி நடக்கிறதுன்னு வெளியே யாருக்கும் தெரியாது... இருதயமாச்சே... ரகசியமாக இருக்க வேண்டாமா?''

''நடக்கலாமா?''

---


வீட்டுக்காரர்:- இதுதான் கடைசிக்குழந்தையா இருக்குமுன்னு நெனைச்சு 'மங்களம்'னு பெயர் வைச்சேன்!

மற்றவர்:- ஏன்... அதுக்கப்புறமும் ஏதும் பிறந்துடுச்சா...?

வீட்டுக்காரர்:- ஆமா...!

மற்றவர்:- அதுக்கு என்ன பெயர் வைச்சீங்க?

வீட்டுக்காரர்:- 'சுப மங்களம்' -புதுவை ச. மாரியப்பன்



''உம்...'' என்ற அர்ஜுன், ''உனக்கு பத்மஸ்ரீ சதாசிவத்தைத் தெரியுமா?'' என்று கேட்டான்.

'தெரியாது.''

''பெரிய நிபுணர். அவர் பெயரில் ஒரு ஆடிட்டோரியமே இருக்கு... மாணவர்கள், இளம் டாக்டர்கள் இவர்களுக்கெல்லாம் பெரிய டாக்டர்கள் இருதய நோய் பற்றி லெக்சர்கள் கொடுப்பார்கள்...''

''வரும்போது அதைப் பார்ப்போம்.... இப்ப முதல்லே உங்க ஃபாதர்!'' என்றாள் மல்லிகா.''

''ஓகே.''

மாடிப் படிகளில் ஏறி அவளுக்குக் கால் ஓய்ந்தது. இரவு பூராவும் ரயிலில் தூக்கமில்லை. முந்தின நாள் மாலை உப்புமா சாப்பிட்டதுதான். பசியில் வயிறு இரைந்தது. காலையில் ஓட்டல் பற்றிப் பேச்சு எழுந்ததே தவிர, அவளும் அர்ஜுனனும் அதை இன்னும் எட்டிப் பார்க்கவில்லை.

''ஜஸ்ட் எ மினிட் மல்லிகா...'' என்ற அர்ஜுன் திடீரென்று ஓர் அறை வாயிலில் நின்றான். பிறகு, ''அப்பா என்ன செய்துண்டிருக்கார்னு முதல்லே பார்க்கிறேன்!'' என்றான்.

உள்ளே சென்றவன் ஐந்து நிமிடம் கழித்து வெளியே வந்து, கண்களால் சமிக்ஞை செய்தான்.

அவள் கால் சத்தம்கூடக் கேட்கக் கூடாது என்ற பயத்தில் அடி மேல் அடி வைத்து நடந்து அறைக்குள் பிரவேசித்தாள்.

அது ஒரு ஆஸ்பத்திரி அறையாகவே படவில்லை.

அறையில் நட்ட நடுவிலே ஒரு கட்டில். அது காலியாக இருந்தது. இருபுறமும் இரண்டு நாற்காலிகள். இரண்டு டீப்பாய்கள். ஒரு டீப்பாய் மேல் நீல நிறக் கண்ணாடி பௌல். பௌல் நிறையப் பழ வகைகள். ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை. தலைமாட்டில் ஒரு டிரான்ஸிஸ்டர். இடது பக்கத்தில் ஒரு சாய்வு நாற்காலி. அதில் ரப்பர் மெத்தை.

மாப்பிள்ளை ராஜாமணி செக்கச் செவேல் என்று சாய்ந்திருந்தார். அவருடைய கையில் ஒரு தினசரிப் பத்திரிகை. அருகிலிருந்த ஒரு டீப்பாயின் மேல் பீங்கான் தட்டும், கோப்பையும் பிளாஸ்கும் இருந்தன.

''அப்பா!''

''இவள்தானா?''

''ஆமாம்ப்பா.''

''உன் பேரு என்ன?''

''மல்லிகா.''

''மிஸ்ஸா? இல்லே மிஸ்ஸஸ்ஸா?''

''மிஸ்...''

''என் பேரு தெரியுமோ இல்லையோ?''

''தெரியும்.''

''எங்கே சொல்லு.''

''மிஸ்டர் ராஜாமணி.''

''தப்பு... தப்பு... என்னடா, அர்ஜுன், என் பேரைக்கூடவா இவகிட்டே நீ சொல்லலே...''

திடீரென்று மல்லிகாவுக்கு ஞாபகம் வந்தது.

''மாப்பிள்ளை ராஜாமணி...''

''இப்ப எப்படித் தெரிஞ்சுது?''

''அப்பவே தெரியும்.... ஆனா நீங்க தப்பா எடுத்துப்பீங்களோன்னு பயந்து...''

''ராஜாமணி போனாலும் மாப்பிள்ளை நிலைக்கும்.''

''சரி சார்.''

''எனக்கு சார் பிடிக்காது.''

மல்லிகா விழித்தாள்.

''மாமான்னு கூப்பிடு... ஏண்டா இவளை எங்கே பிடிச்சே?''

''எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில...''

''குட்... மல்லிகா... இந்தப் பயல் என் பிள்ளை....ஆனா சின்னவனுக்கும் இவனுக்கும் ரொம்ப தூரம்.... கோபிச்செட்டிபாளையத்தில் நான் கைதட்டினா ஆயிரம் பெண்கள் ஓடி வருவா. ஆனா முன் பின் தெரியாத பெண்ணுன்னா சௌகரியம். அது சரி நீ எதுவரையில் படிச்சிருக்கே?''

அவள் சொன்னாள்.

''அது போதும். என் டெய்லி ரொடீன் என்னன்னு சொல்லிடறேன்... கார்த்தாலே எட்டு மணி வரைக்கும் நீ உள்ளே எட்டிக்கூடப் பார்க்கக் கூடாது.... சாயங்காலம் நாலு அடிச்சா நீ ஓடணும்.. அப்புறம் திரும்பிப் பார்க்கப்படாது. காப்பி கலந்து தரணும். ரேடியோவை மூடுன்னு சொன்னா மூடணும். வேர்க்கடலையில் ப்ரோட்டீன் இருக்கு. சொன்னா வாங்கிண்டு வரணும். என்ன?''

''சரி சார்... ஸாரி... சரி... மாமா...''

''என்னடா சம்பளம் பேசியிருக்கே, அர்ஜுன்?''

''முந்நூறு.''

ஒரு கணம் மல்லிகா திகைத்துப்போனாள்.

''ஜாஸ்திதான். இருந்தாலும் பரவாயில்லே... அது சரி உன் அப்பா பேரு?''

''நடேசன்.''

''எந்த ஊரு''

''அப்பா, அவ எங்கேயோ பிறந்தா... இப்ப மெட்ராஸ்லே இருக்கா... அவளை நீங்க ரொம்பவும் பயமுறுத்தாதீங்க...''

''அதுக்கில்லேடா... சில வருஷம் முன்னாடி நடேசன்னு ஒரு பயல் என்கிட்டே இருந்தான். ஆறே முக்கால் ரூபாய்க்குக் கணக்குச் சொல்லத் தெரியலே. இவ அப்பா பேரும் நடேசன்னப்போ எனக்கு அவன் பெயர் ஞாபகம் வந்தது!''

''இவ கணக்கு நன்னாப் போடுவா அப்பா. எஸ்.எஸ்.எல்.ஸி.யில் தொண்ணூத்திரண்டு வாங்கியிருக்கா....''

''பாக்கி எட்டு என்னாச்சு?'' என்றார் மாப்பிள்ளை ராஜாமணி. (தொடரும்)



அவள்: ''எம். எல். ஏ. ஆனதிலிருந்து உன் கணவருக்கு உங்களைச் சரியா கவனிக்கவே நேரமிருக்காது!''

இவள்: ''நான் என்ன அவர் தொகுதியா கவனிக்காமல் இருக்கிறதுக்கு... நல்லாத்தான் கவனிக்கிறீங்க!'' -உ. ராஜாஜி

# புதிய கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்




குழந்தைகளுடைய பற்களின் மென்மையான எனுமல் எளிதில் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் உள்ளாகிறது. பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராகப் பாதுகாப்பு தேவை. புதிய ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட் பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள் குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது. துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனுமலுடன் இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்எஃப்பி ஃப்ளோரைட் அதில் உள்ளது. கோல்கேட் ஃப்ளோரி கார்ட் புல்லரிக்கும் புதுச்சுவை கொண்டது. உங்கள் குடும்பத்திற்கு இன்றே வாங்குவீர்.




உலகெங்கும் உள்ள ஆராய்ச்சி சாலைகளில் சோதிக்கப்பட்டுள்ள எம்எஃப்பி ஃப்ளோரைட் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப் பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது மருத்துவ ரீதியாக நிருபணமாகியுள்ளது. கோல்கேட்டின் நீண்ட ஆராய்ச்சி மட்டுமே இந்த தனிப்பட்ட எம்எஃப்பி ஃபார்முலாவை உங்களுக்கு வழங்க முடியும்.

## ஃப்ளோரிகார்டில் உள்ள எம்எஃப்பி ஃப்ளோரைட் எனுமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

இப்பொழுது தமிழ்நாடு மற்றும் கேரளாவில் மட்டுமே கிடைக்கும்.

CFT-G-2 TM



Dr. S. R. சிவராஜ்

**வாலிபர்கள் !** **மணமானவர்கள் !!**

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி,
தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ,
இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்'
ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'

## 'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

*அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில் நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.*

❋ **குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்**
❋ **கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்**

*சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?*

**விரைவில் பலன் காண விசேஷ 1 மாத சிகிச்சை ★ குறைந்த ஸ்பெஷல் 1 மாத சிகிச்சை**

| A-வகுப்பு | B-வகுப்பு | C-வகுப்பு | மீடியம் | ஸ்பெஷல் | 1-ம் நெம்பர் | நேரில் பெறலாம் |
|---|---|---|---|---|---|---|
| ரூ. 350-00 | 250-00 | 175-00 | 115-00 | 90-00 | 75-00 | V.P.P.-யிலும் பெறலாம் |

தலைமை அலுவலகம் :

## சிவராஜ் சித்த வைத்தியசாலை

**C-56, தமிழ்ச் சங்கம் ரோட் பின்புறம்**
*(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)*
**காந்தி ஸ்டேடியம் - சேலம்-636007**

---

# மோகினி

மிக்ஸி
தயாரிப்புகளிலே
முற்றிலும்
மாறுபட்டது

Mohini




மூன்று சைஸ்களில்
கிடைக்கிறது

IS:4250

# சீகோ

மாவரைக்கும்
இயந்திரங்கள்
வெட் கிரைண்டர்

CEECO




பலவித
சைஸ்களிலும்
கிடைக்கிறது

வியாபார விசாரணைகள் வரவேற்கப் படுகின்றன

OSR

## கோயமுத்தூர் எலெக்ட்ரிக் & இன்ஜினியரிங் கார்ப்பரேஷன்

பழைய தபாலாபீஸ் ரோடு • கோயமுத்தூர்-641018 • போன்: 32509/32598




● நான் இந்திரா காங்கிரஸ் அபிமானி. கடந்த இரண்டு வாரங்களாக சஞ்சய் காந்தி அவர்களைப் பற்றிய கட்டுரைகளைக் கண்டதும் என் மனம் சோகத்தில் வாடித் துவண்டு விட்டது. சஞ்சய் பாபுவின் வாழ்க்கை வரலாறு என்ற பெயரில் அவர் பெயருக்கும் நினைவுக்கும் களங்கம் கற்பிக்கும் வகையில் எழுதி வருவதைப் படிக்க நேர்ந்ததற்காக நான் வருந்துகிறேன். இறந்த ஒருவரின் வாழ்க்கையில் பல மாசுகள் இருப்பினும், சில நல்ல பண்புகளை மட்டும் எடுத்துரைப் பதே பாரத மக்களின் பண்பாடு!

கோட்டைப்பாளையம் ஆர். விஜய்

● கல்கி பத்திரிகை தமிழகத்துக்கு ஆற்றி வரும் தொண்டு மிகச் சிறந்தது. குறிப்பாக சஞ்சய் காந்தியின் வாழ்க்கை வரலாறைத் தாங்கள் துணிவோடு வெளியிட்டு வருவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

சென்னை-14 எம். தர்மலிங்கம்

● சஞ்சய் வரலாற்றில் அவரது பலவீனங் களையே அதிகமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறீர். மற்றொரு மத்தாயாக மாறிவிட வேண்டா மென்று ஆசிரியருக்கு வேண்டுகோள் விடுக் கிறேன்.

ராஜபாளையம் எஸ். விஜயன்

● திரு பரந்தாமன் அவர்களின் 'கோட் டைக்குப் போனேன்' என்ற கட்டுரை படித்த போது என்னுடைய அனுபவம்தான் என்று நினைத்த ஒன்றை அவர் கட்டுரையில் படித்த போது ஒவ்வொருவருடைய அனுபவமும் இதுதான் என்று நினைக்க முடிந்தது.

சென்னை-3 எஸ்.ஆர். பிரசாத்

● ''கோட்டைக்குப் போயிருந்தேன்'' என்ற கட்டுரை கண்டு தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் 700க்கும் மேற்பட்ட தட் டெழுத்தர், சுருக்கெழுத்தர்கள் சார்பாக இயங்கும் சங்கம் வருந்துகிறது. திரு பரந்தாமன் அவர்கள் குறிப்பிடும் விஷயம் உண்மையிலேயே முக்கியமானதாக இருந் திருந்தால் அவர் அதற்குரிய அதிகாரியை அணுகியிருந்தால் மற்ற எந்த ஒரு பிரிவைச் சேர்ந்த தட்டெழுத்தரிடமாவது கொடுத்துத் தட்டச்சு செய்து கொடுக்க அவர் உத்தரவு போட்டிருப்பார்.

சென்னை ந. மணியன், செயலர்,
பொ. நடராஜன் தலைவர்

● விஜயபுரியிலிருந்து லட்சுமிபுரிவரை பகுதி யில் ''அச்சச்சோ'' சித்ரா என்ற நடிகையையும் சேர்க்க வேண்டும். விட்டுவிட்டீர்களே.

சென்னை-81 எம். கே. இராதாகிருஷ்ணன்

● 'விஜயபுரியிலிருந்து லட்சுமிபுரிவரை' என்ற கட்டுரை காலமறிந்து நடிகைகளுக்குக் கூறப்பட்டுள்ள அறிவுரை.

இருக்கந்துறை கே. பிரமநாயகம்

● ''ஆன் தி ஸ்பாட்' கட்டுரையில்'' கதா நாயகி ஸ்ரீகீதா நாய்களுடன்'' என்று ஒரு புகைப்படத்துக்குத் தலைப்புக் கொடுத்துள் ளீர்கள். ஸ்ரீ கீதாவுடன் மற்றும் மூன்று மனி தர்கள் இருப்பதை மறந்துவிட்டீரோ? அத் தலைப்பு மனத்தை நெருடியது.

கோவை டி. கே. கங்காராம்

● ''ஜாக்கிரதை! இலங்கை வானொலி'' என்ற தலைப்பில் எழுதியதில் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 8—30 மணிக்கு ஆங் கில இசையை அடிப்படையாகக் கொண்டு தமிழில் இசையமைத்த பாடலை ஒலிபரப்பு கிறார்கள் என்பதே சரி.

இரவு 8—30 மணிக்கு என்பது தவறு.

திருநெல்வேலி ரா. சியாமளநாதன்

● ராக்கெட்டைப் பறக்க விட்டது சரி! முட்டையை இறக்கிக் கொண்டாங்க!— தாங்கள் வெளியிட்டுள்ள கார்ட்டூன் செய்தி சிரிக்கவும் பின் சிந்திக்கவும் வைத்தது.

சிவகாசி கே. ராகவன்

● ஆல்பார்ட் ஹிட்ச்காக் பற்றிய தகவலில் டிரபின் வித் ஹாரி படத்திற்குப் பிறகு டிரெய்லர்களில் மட்டுமே அவர் தோன்றிய தாகக் குறிப்பிடப்பட்டிருப்பது தவறு. அதன் பின் வெளியான படங்களிலும் சமீ பத்தில் வெளியான ஃப்ரென்ஸி படத்திலும் அவர் ஏதாகிலும் ஒரு காட்சியில் தோன்றி யுள்ளதை உன்னிப்பாகப் படத்தைப் பார்த்த ரசிகர்கள் மறந்திருக்க முடியாது.

பெங்களூர்-5 அ. குமார்

● 'கோல்டன் பீச்' மகாபலிபுரத்தில் இருப் பதாக சலன் சொல்வது தவறு. அது அடை யாறுக்கு அருகில் உள்ள சஞ்சம்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ளது. சஞ்சம்பாக் கம் மகாபலிபுரம் இடையேயுள்ள தூரம் 25 மைல்.

மாமல்லபுரம் ஆர். சாம்பசிவம்


● ''மோர் குடிப்பவரை யெல்லாம் தயிர் குடிக்கப் பண்ண வேண்டுமே என்ன செய்ய லாம்'' என்றூராம் ராஜா!

மந்திரி, ''ரொம்ப சுலபம்! மோர் பெய ரைத் தயிர் என்றுக்கிஜுல் போச்சு!'' என்று ராம். ஹரிஜன் அற்புதமான பெயர். மரி யாதைக்குரிய பெயர். 'அதை மாற்றிப் பெருமாளை பெரிய பெருமாளாக்குவானேன்?


திருச்சி டி. ஆர். அலமேலு

● அம்மா, தாயே! எந்தக் கல்லூரியின் ஆண்டுவிழாவுக்கு இருபத்தையாயிரம் பேர் வருகிறார்கள் என்பதை எங்களுக்குக் கொஞ் சம் கூறுகிறீர்களா? (உறவின் கைதிகள்)

தஞ்சை ஷோபா


டாக்டர்கள்—ஓவர்டோஸ்!
நாட்டில் தேவைக்கதிகமான டாக்டர்கள் உள்ளனர் — செய்தி
Dr. ராமசி M.B.B.S
ஆலோசனை இலவசம்
Dr ஹரன் M.B.B.S
மருந்துகளுக்குத் தவணை முறையில் பணம் செலுத்தலாம்!
நடமாடும் டிஸ்பென்சரி
நடமாடும் க்ளினிக்
G.V.சாஸ்திரி
பேஷண்ட் தரகர்
டாக்டர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்
மருத்துவத் தம்பூரி
டாக்டர்:—
மெடிகல் லீவுக்கு டாக்டர் சர்டிபிகேட் வேணுமா, சார்?...
ரெடிமேட் சர்டிபிகேட்!
உனக்கு இருக்கட்டும் எத்தனை வேணும்?
அட்மிஷனுக்கு ஒரு அப்ளிகேஷனும் வரலே சார்!
DOOR TO DOOR கான்வாஸ் பண்ணுவோம், வாங்க போவோம்!


ஆஸ்பத்திரி - HO
அந்த டாக்டர் கிளினிக்லே டிபன் நல்லாருக்கு.. இந்த டாக்டர் கிளினிக்லே காபி நல்லாருக்கு!
எதுக்கு தகராறு? ... யார் வைத்தியம் பண்றதுன்னு சீட்டு குலுக்கிப் போட்டுப் பாத்துடுவோம்!
ஒரு வாரமா ஒரு பேஷன்ட்டும் இல்லே!.. ப்ளீஸ்! ஆஸ்பத்திரி வேணும்! நானே வைத்தியம் பண்றேன்! நீங்க பாத்து ஏது கொடுத்தாலும் சரி!.. ப்ளீஸ்!..
என்ன டாக்டர்,
ஓ.. ஃபீஸா!



டாக்ஸியில் ஏறப் போனவர்.....
டிரைவர்! ஒரு நிமிஷம் சிகரெட் வாங்கிட்டு வந்துடறேன்.
டாக்ஸிலே கூட இந்த ஆசாமி முன் ஸீட்டில்தான் ஏறுறான்.
பயணி கதவை மூடாமல் சென்றுவிட, டிரைவர் அசந்திருந்த போது.....
முன் ஸீட்டில் பாய்ந்து ஏறிய டைகர் பின் ஸீட்டில் குதித்து பிறகு தரையோடு தரையாகப் பதுங்கிக் கொள்கிறது!
2
007 பாலு
கதை: குமரன்
சித்திரம்: விஜு
சில வினாடிகளில் புறப்பட்ட டாக்ஸி பல சாலைகளைக் கடந்து...
எங்கே ஸார்?
அடையாறு போ!
... அடையாறு காந்தி நகரில் ஒரு பங்களா வாசலில் நிற்க....
ரெண்டு ரூபா போட்டுக்கிடு ஸார்! எம்டியா திரும்பணும்
கொள்ளை அடிக் கிறீங்களே அப்பா!


டாக்ஸியிலிருந்து வெளியேறிய டைகர், தோட்டத்தில் ஒரு செடி மறைவில் பதுங்கிக் கொள்ள, டாக்ஸியை அனுப்பிவிட்டு வந்தவன் வராந்தாவில்....
வணக்கம் முதலாளி
கெடச்சுதா?
நான் ஒரு காரியத்தில் இறங்கினா முடிக்காம விடுவேனுங்களா?
இவங்க என்ன பேசறாங்க புரியலே! ஆனா ஏதோ சதி நடப்பதாய்த் தோணுது... இனி நான் பாலு கிட்ட திரும்பலாம்!
இதற்கிடையில்...
தம்பி நல்லா விசாரிச்சுட்டோம்! இறந்தவனிடமிருந்து எடுக்கப்பட்ட இந்த பர்ஸ் அவனோடதே தான். பாக்கெட் அடிச்சது இல்லே. நீ பகல் கனவு கண்டிருப்பே!
ஸாரி ஸார்! நான் வரேன்!
மாம்பலம் ஸ்டேஷன் அருகே ரயில்வே லைன் பக்கம் வருகிறான் பாலு....
நான் கனவு காணலே! நான் பார்த்தது பொய்யில்லே... அவன் பாக்கெட் அடிச்ச பொருள் இங்கே எங்கேயாவது எகிறி விழுந்திருக்குமோ?
எவ்வளவு தேடியும் ஒண்ணும் அகப்படலேயே... ஒருவேளை... ஆ! அப்படித்தான் இருக்கும்! பிக்பாக்கெட் பண்ணலே அவன்! ஜிப்பா பாக்கெட்டுக்குள் எதையோ போட்டிருக்கான்! எதை? ஏன் பகிரங்கமாகத் தராமல் ஒருவரை ஒருவர் தெரியாத மாதிரி நடந்துக்கணும்? விபத்துதானா அது? அல்லது... விபத்து மாதிரி தோன்றச் செய்கிற சாமர்த்தியமான கொலையா!
தொடரும்



# கே. பாலசந்தர்

என் தந்தை ''எதிர் நீச்சல்'' நாடகத்தைப் பதினாறு தடவைகள் பார்த்திருக்கிறார். அதே போல்தான் பாலசந்தரின் மற்ற நாடகங்களையும் எங்கள் குடும்பமே மிகுந்த ஆர்வத்துடன் பார்த்து வந்தது. அவர் படம் எடுக்கிறார் என்றவுடன் நம்மையும் நடிக்கக் கூப்பிடுவார் என்று உண்மையிலேயே ஆவலுடன் காத்திருந்தேன். 'பூவா தலையா?' படத்துக்காக அவர் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். 'தாமரை நெஞ்ச'த்திலிருந்து சில வசனங்களைக் கொடுத்துப் பேசச் சொன்னார். மோசமாகத்தான் பேசினேன் என்று நான் நினைக்கிறேன். என்ன காரணத்தாலோ ''நான் சொல்லி அனுப்புகிறேன்'' என்று கூறி அனுப்பி விட்டார்.

'நூற்றுக்கு நூறு' படத்தின்போது என்னை வரச் சொல்லி ''இதில் ஒரு கதாபாத்திரம் இருக்கு. ஆனால் அந்தப் பாத்திரம் நல்லதுக்கு எதிர்மாறானது. இதில் நடிப்பதற்கு முன் நீ யோசித்துச் செய்'' என்றார். ''கதாபாத்திரத்தின் தன்மை முக்கியமல்ல; நடிப்பாற்றலை வெளியிட வாய்ப்பிருக்கிறதா என்பதுதான் முக்கியம். ஒரு நல்ல கலைஞரை நீங்கள் வீணடித்துவிட மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு'' என்று சொல்லி ஒப்புக்கொண்டேன். அதுதான் நான் கலாகேந்திராவில் நடித்த முதல் படம். அந்தப் படம் முடிந்தவுடன் 'நான்கு சுவர்'களுக்காகக் கோவா சென்றோம். ''கண் தெரியாத பெண்ணாக நீ நடிப்பதால் காண்டாக்ட் லென்ஸ் போட்டுக் கொண்டால் நல்லது'' என்று கூறி டாக்டர் அகர்வாலிடம் அழைத்துச் சென்றார்கள். ஒரு செட் லென்ஸ் 750 ரூபாய்! அப்பொழுது நான், ''இதைப் போட்டுக் கொண்டால் எனக்குக் கண் தெரியவில்லை; கண்ணிலிருந்து நீர் வடிந்துகொண்டேயிருக்கிறது. மேலும் கோவா பீச்சில் லென்ஸ் விழுந்து விட்டால் கண்டுபிடிப்பது கஷ்டம். இதற்காகப் படம் பிடிப்பு தடைப்படும். அதனால் நான் எப்படியாவது நடித்து விடுகிறேன்'' என்றேன். படத்தில் என் கதாபாத்திரம் சிறியதாய் இருந்ததால் அட்ஜஸ்ட் செய்து நடித்தேன். ''நூற்றுக்கு நூறு' படத்தில் இவர் என்ன சொல்லிக் கொடுக்கிறார்? எதற்காக இதைச் செய்யச் சொல்கிறார்? என்றெல்லாம் எனக்குப் புரியவேயில்லை. ஆனால் ''வெள்ளி விழா'' படம் முடிந்து வெளியானவுடன் எல்லோருமே என்னைப் பாராட்டினார்கள். படத்தைப் பார்த்த நான் என் வேடம் சிறிதாக இருந்தாலும் கைதட்டல் பெறும் வசனமும், காட்சிகளும் எனக்குத்தான் நிறைய இருக்கின்றன என்று அறிந்து கொண்டேன். அன்றுதான் அவரை நான் நன்றாகப் புரிந்து கொண்டேன். ஒரு நடிகனையோ, நடிகையையோ தேவையில்லாத வேடத்தில் நடிக்க வைத்து வீணடிக்க மாட்டார் என்பதை முன்னிலும் நன்கு உணர்ந்தேன்.

படத்துக்குப் படம் அவர் மாறுபட ஆரம்பித்தார். சொல்லிக் கொடுக்கும் முறை, படத்தைத் தயாரிக்கும் முறை, படத்தை இயக்கும் முறை, புது முகங்களைக் கண்டு பிடிக்கும் விதம், எல்லாவற்றிலும் மாறுதல்.

✕ அபூர்வ ராகங்களில் கமல், ஸ்ரீ வித்யா



# சிந்தனைச் சிதறல்கள்

-ஸ்ரீவித்யா

# பேசினார்?



கம்பெனி அலுவலகத்துக்கு நடிகர் நடிகைகள் சென்று தேர்ந்தெடுக்கப்படும் முறையையே மாற்றித் தாமே வெளியில் சென்று பலரைச் சந்தித்துப் புது முகங்களைத் தேர்ந்தெடுக்க ஆரம்பித்தார். நாடகங்களில் நடித்தவர்களையும் உபயோகப்படுத்தத் தவறவில்லை. ஒரு புதுக் கோணத்தில் கலைஞர்களை நெருங்க ஆரம்பித்தார்.

அவர் பெருமளவு புகழ் குவித்திராத அந்தக் காலத்தில் அவரும் வளர்ந்தார், எங்களையும் வளர்த்து விட்டார்! தம்மைத் தாமே புரிந்து கொள்ளக் கேள்விகள் கேட்டு, தமக்குத் தாமே பதிலும் கூறிக் கொள்வார்! வெள்ளி விழா படப்பிடிப்பின் போதுதான் இவருக்கு ஹார்ட் அட்டாக் வந்தது. செட்டில் திடீரென்று விழுந்து விட்டார். அதன் பின் காப்பி, டீ, சிகரெட் எல்லாவற்றையும் விட்டு விட்டு இருந்தார். முன்பு இவர் அருகில் செல்வதற்கே எல்லோரும் பயப்படுவார்கள். அவ்வளவு கோபம். ஆனால் வெள்ளி விழா படப் பிடிப்பின் கடைசிக் கட்டத்தில் உடல் நலமாகித் திரும்பி வந்தவர் கோபத்தையெல்லாம் விட்டு விட்டுப் புது மனிதராக உள்ளே நுழைந்தார்.

அதன் பின் அவர் ஒரு ஹிந்திப் படம் எடுத்துக் கொண்டிருந்தார். நான் அதே ஸ்டுடியோவில் வேறொரு பக்கத்தில் படப்பிடிப்பில் கலந்து கொண்டிருந்தேன். அவர் என்னை ''ஷூட்டிங் முடிந்ததும் வந்து பார்த்துவிட்டுப் போ'' என்று சொல்லியிருந்தார். நான் சென்றவுடன் ''இரண்டு மூன்று நடிகைகளிடம் ஒரு கதாபாத்திரத்தைப் பற்றிக் கூறினேன். அவர்கள் நடிக்க மறுக்கிறார்கள். இது ஒரு புது மாதிரியான கதை. நீ ஜெயசுதாவுக்கு அம்மாவாக நடிக்க வேண்டும்'' என்றார். ''நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. நடிக்கிறேன். நீங்கள் என்ன செய்தாலும் சரியாகத்தான் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்றேன். அவர் சொல்லிக் கொடுப்பதில் நாம் பாதி செய்தால் போதும் நடிப் பாற்றலில் உச்சாணிக்கிளைக்கு ஏறி விடுவோம். அவ்வளவு சிறந்த கலைஞர் அவர்.

'அபூர்வ ராகங்க'ளுக்குப் பிறகு நான் அவர் படத்தில் நடிக்கவில்லை. அவர் இனி என்னைக் கூப்பிடுவாரா என்பதும் எனக்குத் தெரியாது. ஆனால் 'மழலைப் பட்டாளம்' பட சம்பந்தமாக நான் ஒரு பத்திரிகையில் 'பாலசந்தரின் கவனத்துக்கு' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதைக் காண்பித்துக் கேட்டிருக்கிறார் ஒரு பத்திரிகையாளர். ''இதெல்லாம் வில்லி'' என்று அவர் பதில் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். உண்மையோ, பொய்யோ தெரியாது. கேள்விப்பட்டதுதான்!

என்னுடைய சில அபிப்பிராயங்களை நான் மனம் திறந்து சொன்னேன். குறைகளாகத் தெரிந்தவற்றைச் சொன்னேன். எப்பொழுதுமே நாங்கள் எல்லாம் அவரைத் தகப்பனார் ஸ்தானத்தில்தான் பார்ப்போம். தகப்பனாரிடம் எடுத்துக் கொள்ளும் உரிமையோடுதான் ஒரு குறையை நான் விரிவாக எழுதியிருந்தேனே தவிர மற்றபடி அவரைப் புண்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல.

ஆனால் அவர் வில்லி என்ற ஒரு வார்த்தையில் தீர்ப்பு வழங்கி விட்டார். அத்துடன் தண்டனையாக இனி எனக்கு வாய்ப்பளிப்பதில்லை என்று அவர் தீர்மானித்து விட்டது போலவும் எனக்குத் தோன்றுகிறது.

இப்பொழுது அவர் தெலுங்கில்தான் அதிகமாகப் படங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார். என்னை வைத்து ஒரு படம் எடுத்துப் பரபரப்பாக பிஸினஸ் செய்யவேண்டும் என்று அவருக்கும் அவசியம் இல்லை. நானும் அதை எதிர்பார்த்து இல்லை. ஆனால் ''இந்த ரோலை வித்யா செய்தால்தான் நன்றாக இருக்கும்'' என்ற எண்ணம் வரும்போது அவர் நிச்சயம் என்னைக் கூப்பிடுவார்.

என்னைப் பொறுத்தவரை நான் அவரை மிக உயர்ந்த இடத்தில் தான் வைத்து மதிக்கிறேன். அபூர்வராகங்களை விட ஒரு நல்ல படம் இனிமேல் அவரால் கூட எடுக்க முடியாது. அதில் நடிக்கும் வாய்ப்பும் அதிருஷ்டமும் எனக்குத் தான் கிடைத்தது என்று நான் திருப்திப் பட்டுக்கொள்ள முடியும். இன்றும் என்னைச் சந்திக்கிறவர்கள் ''நீங்கள் ஏன் அபூர்வராகங்கள் படம் மாதிரி நடிக்கவில்லை'' என்று கேட்கிறார்கள். நானா நடிக்கவில்லை? தமிழ் படத்தயாரிப்பாளர் இயக்குனர்களுக்கு ஒரு சிறந்த நடிகையை எப்படி உபயோகப்படுத்திக் கொள்வது என்று தெரியவில்லை. அது என் தவறா? மீண்டும் சொல்கிறேன், கலாகேந்திரா என்ற நிறுவனத்துக்கு அல்லாது, வேறு வெளிப் படங்களுக்கு அவர் அழைத்தால் கண்டிப்பாக ஆசையுடன் நடிக்கப் போவேன். ஆனால் வில்லி என்று மட்டும் நினைக்காமல் இருக்க வேண்டும். நான் வில்லியான மனிதப் பிறவியாக இருக்கலாம். ஆனால் என் நடிப்பு வில்லி என்று மட்டும் அவர் நினைக்காமலிருந்தால் போதும்!


பேட்டி : சலன்

## அத்தியாயம் 54

# காணக் கிடைக்காத தங்கம்

லிவாஸியரின் துணிவு ஸித்தி அஹமத் உட்பட எல்லோரையும் வியப்பின் உச்ச வரம்புக்குக் கொண்டு சென்றுவிட்டதால் அனைவரும் ஏதோ மந்திரத்தில் கட்டுண்டவர்கள் போல் வாயடைத்துச் சிலைகளென நின்றார்கள். தனது பெயரை உபயோகித்து ஸித்திகளின் கப்பல்களைக் கொளுத்திச் சூறையாடியதற்காக அவன் மீது சீற்றம் அடைந்திருந்த ராணிகூட, அவன் தன் முன்பாகத் தலைகுனிந்து வணங்கியபோது சீற்றத்தை உதறி செவ்விய இதழ்களில் இளநகையொன்றைப் படரவிட்டாள். அவன் தலை வணங்கி நிமிர்ந்தபோது அவனை அவள் கண்கள் ஆராயவும் செய்தன.

அதிக உயரமில்லாத அளவோடு கூடிய மெல்லிய சரீரம், அலட்சியச் சிரிப்பு உலாவிய இதழ்கள், குழந்தை முகத்தில் குறுகுறுத்த கண்கள், நீண்ட கைகள், பெண்களின் இடையைப் போல சிறுத்த இடை. இடையில் கொள்ளைக்கார மாலுமிகளின் பெரிய தோல் பெல்ட். அதில் செருகப்பட்ட இரண்டு அழகிய கைத்துப்பாக்கிகள், வலதுபுறத்தில் கச்சையிலிருந்து பாதத்தைத் தொட்டுக் கொண்டிருந்த நீண்ட வாள். இப்படிக் காட்சியளித்தான் லிவாஸியர். அவனது ஷர்ட் நல்ல சில்க் துணியால் தயாரிக்கப்பட்டு சில்க் நிஜாருக்குள் புதைந்து கிடந்தது. காலில் இருந்த பூட்ஸ்களின் இருந்த லேஸ்கள் கூட அலங்காரத்தின் அடையாளமாக விளங்கின. அவன் தனது கழுத்தைச் சுற்றிச் சிவந்த கர்சீப் ஒன்றைக் கட்டியிருந்தான். எந்த விதக் குண்டலத்தையோ வீரச் சங்கிலியையோ அவன் அணியாவிட்டாலும் அவன் நின்ற தோரணையிலேயே கம்பீரமிருந்தது. இத்தகைய லிவாஸியர் முதல் பார்வைக்குக் குழந்தை போல் இருந்



கடல் ராணி



# சாண்டில்யன்



தானே தவிர அவன் கண்களிலிருந்த குறுகுறுப்பில் கொலைத்தன்மையும் வஞ்சகமும் கலந்திருந்ததை இரண்டாவது முறை கவனித்த போது உணரவே செய்தாள் ராணி.

வாளைச் சுழற்றுவதில் இணையற்றவன் என்று பிரசித்தி பெற்றிருந்த லிவாஸியரின் கைகள் மெல்லியதா யிருந்தாலும், வாளை ஏந்தும்போது அவை சீறும் பாம்பைப் போல் இஷ்டப்படி வளையக் கூடியவை என்பதைப் புரிந்து கொண்ட ராணி, அவன் இடையிலிருந்த வாளின் அதிகப்படி நீளம் அவனுக்குத் தேவைதான் என்று நினைத்தாள். இப்படி அணு அணுவாக அவனை நோக்கி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்த ராணி, ''காப்டன் லிவாஸியர்!'' என்று மெதுவாக ஒரு முறை அழைத்தாள்.

''மை லேடி! யுவர்அடென்ஷன் ப்ளாட்டர்ஸ் மி (அம்மணி! தங்கள் கவனிப்பு எனக்குப் பெருமையை அளிக்கிறது)'' என்றான்

விலாஸியர் இரண்டாம் முறை ராணியை வணங்கி.

திடீரென ஏற்பட்ட பிரமை நீங்கிவிடவே ஷீத்தி அஹமத் தனது இடையிலிருந்த கைத் துப்பாக்கி மீது கையை வைத்தான். "டோண்ட் டரை எனிதிங் ஸ்டுபிட் (முட்டாள்தனம் எதிலும் இறங்காதே)" என்ற அனந்தின் வரண்ட குரல் ஷீத்தி அஹமத்தின் கையைத் தேக்கியதே தவிர வாயைத் தேக்காததால் "இதில் முட்டாள்தனம் என்ன இருக்கிறது? எங்கள் கப்பல்களைக் கொள்ளையடித்தவனை நான் சுடுவதை யார் தடுக்க முடியும்?" என்று கேட்டான் அஹமத் பெரு விழிகள் சினத்துடன் சுழல.

அனந்த் சாருவுடன் நான்கடி நடந்து முன்னே வந்தான். அகமதைப் பரிதாபம் சொட்டிய கண்களுடன் பார்த்தான். "விலாஸியருக்கு யார் உதவியும் தேவையில்லை. நீ உன் பிஸ்டலை உருவு முன்பு உன்னைப் பிணமாக்கி விடுவான்" என்று எச்சரித்தான்.

அஹமதின் எரிச்சல் அதிகமாகத் தெரிந்தது அவன் முகத்தில். "என்னைச் சுடுவதை நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்களா?" என்று கேட்டான் எரிச்சல் குரலையும் ஊடுருவ.

இதற்குப் பதில் அனந்த் சொல்லு முன்பாக வில்வர் கேட்டான்: "கடல் ராணியைத் தூக்கிச் செல்ல நீ வந்திருக்கிறாய். உன்னைக் காத்து ராணியிடம் ஒப்படைப்போமென்று நினைக்கிறாயா?" என்று.

இதற்கு ஏதும் பதில் சொல்லத் தெரியாததால் அஹமத் விழித்தான் ஆந்தை போல. சுற்று முற்றும் நோக்கினான் ஒரு முறை. அங்கிருந்த ஒவ்வொருவர் கண்களிலும் தன்மீது பரிதாபம் சிறிதும் இல்லாததையும் ராணி, சாரு இவர்களின் இதழ்களில் புன்முறுவல் விரிந்ததையும் கவனித்தான். அனந்தின் இதழ்களில் மட்டும் மற்றவர்கள் காட்டிய புன்னகை அரும்பவில்லை. உதடுகள் கடினமாக மூடியிருந்தன. முகம் கல்லாயிருந்தது. பெருத்த அபாயம் எதையோ அவன் எதிர்பார்க்கிறான் என்று அஹமதுக்குச் சந்தேகமறப் புரிந்ததால் அனந்தை நோக்கி "நீ பெரும் வீரனென்று பிரசித்தி இருக்கிறது" என்று துவக்கினான் பேச்சை.

அனந்த் மெள்ள உதடுகளைத் திறந்து "சில சமயங்களில் வதந்தி ஒரு மனிதனின் திறமையை அதிகப் படுத்துகிறது" என்று கூறினான்.

அஹமதின் இதழ்களில் இகழ்ச்சியும் வெறுப்பும் அதிகமாகத் தெரிந்தன. "விலாஸியரிடம் அஞ்சுகிறாயா?" என்று வினவினான் வெறுப்புடன்.

"அசட்டுத் தைரியத்தால் சாவதை விட பயத்தால் பிழைப்பது நல்லது" என்று பதில் கூறினான் அனந்த்.

"ஒரே மனிதன் இங்கிருக்கும் அனைவரையும் கொன்றுவிட முடியுமா?" ஷீத்தி அஹமதின் கேள்வி எழுந்தது படபடப்புடன்.

"முடியாது" என்று வில்வர் பதில் கூறினான்.

"அப்படியானால் இவனிடம் பயம் எதற்கு?" என்று கேட்டான் அஹமத்.

"விலாஸியர் வேகமாக ஒருவரைக் கொல்ல முடியும்" வில்வரின் குரலில் உள்ளே இருந்த நகைப்பு தெரிந்தது.

"அதனால்?"

"முதலில் யார் கொல்லப்படுவார் என்பது தெரியாதல்லவா?"

"தெரியாது."

"இப்பொழுது உனக்குப் புரியவில்லையா?"

"என்ன புரிய வேண்டும்?"

"முதலில் சாவது யார் என்ற கேள்வி எழுகிறது. சாவது நீயாயிருந்தால் பாதகமில்லை...."

"ஏன் பாதகமில்லை?"

"ராணியைத் தூக்கிச் செல்ல நீதான் வந்திருக்கிறாய்" என்ற காரணத்தைச் சொன்னான் வில்வர்.

அஹமத் மிரள மிரள விழித்தான் ஒரு விநாடி. கைத் துப்பாக்கியைத் தனது உத்தரவின்படி கீழே போட்டுவிட்டுத் தடிமரங்கள் போல் நின்றிருந்த தனது வீரர்கள் இருவரையும் பார்த்து "ஏன் நிற்கிறீர்கள் மரம் போல். உங்களுக்கு வெட்கமில்லை?" என்று சீறினான்.

"இருக்கிறது" என்று வில்வர் பதில் சொன்னான்.

"என்ன இருக்கிறது?" என்று அஹமத் கேட்டான்.

"அவர்களுக்கு வெட்கம் இருக்கிறது. அத்துடன் உயிரும் இருக்கிறது. உயிர் போன பின்பு வெட்கம், மானம் இவை பொருளற்றவை என்று நினைக்கிறார்கள்" என்று வில்வர் விளக்கியதும் அஹமதின் ஆட்கள் தங்கள் தலைகளை வேகமாக ஆட்டினார்கள் மேலும் கீழுமாக, வில்வர் சொன்னது சரியென்பதைக் குறிப்பிட.

அஹமதின் கோபம் எல்லை கடந்தது. "அஞ்சன்வேலுக்கு வாருங்கள். உங்கள் தலைகள் ஆடுவதைப் பார்த்துவிடுகிறேன். இரண்டையும் ஒரே வெட்டில் தரையில் உருளச் செய்கிறேன்" என்று கூவினான் அஹமத் இரைந்து.

அதுவரை அங்கு நடந்த உரையாடல்களை மௌனமாகக் கவனித்துக் கொண்டு புன் சிரிப்புடன் நின்றிருந்த விலாஸியர் "இப் அண்ட்

செந்தமிழ்ச் செம்மல் ஆ. சீநிவாசராகவன் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி முதல்வராக இருக்கும்போது நான் அவர் மாணவனாக இருந்தேன். ஒரு தடவை நான் உணவு விடுதி கட்டணம் கட்டத் தவறிச் சாப்பிடும் அனுமதி மறுக்கப் பெற்றேன். மின்னல்போல் ஒரு யோசனை தோன்றியது. உடனே சில கவிதைகளில் என் நிலையை உருக்கமாய் விளக்கி எழுதி அவரிடம் விண்ணப்பம் போல் கொடுத்தேன். கவிதைகளைப் படித்த அவர் பக்கத்திலிருந்த உதவி முதல்வரைப் பார்த்து "தமிழ் சாகிறது சாகிறது என்கிறார்களே (அப்போது இந்தி எதிர்ப்பு போராட்டம் நடந்த வேளை) இவன் போன்றோர் வாழும் போது அது எப்படிச் சாகும்" என்று கூறிவிட்டு எனக்குப் பரிவுடன் நான் வேண்டிய அனுமதியும் கொடுத்தார்!

- சோ. விஜயசிங்







# விரைவில் நிவாரணம் பெற சக்தி வாய்ந்த, நம்பகமான அனஸின் சாப்பிடுங்கள்

**சக்தி வாய்ந்தது:** உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலிநிவாரணியை அதிக அளவில் கொண்டது அனஸின். ஆகையால்தான் அனஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

**நம்பகமானது:** டாக்டரின் நம்பகமான மருந்தைப்போல பல-மருந்துகளின் கலவையே அனஸின். ஆகையால்தான் லட்சக்கணக்கானவர்கள் அனஸின் சாப்பிடுகிறார்கள்; சிபாரிசும் செய்கிறார்கள்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவினால் ஏற்படும் வலிகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனஸின் சக்திவாய்ந்த நிவாரணி.





இந்தியாவின் புகழ்பெற்ற வலி நிவாரணி

* Regd TM

அளிப்பவர்கள்: ஜெஃப்ரி மேனர்ஸின் அனஸின் பிரிவினர்.

A23-7/77A



சமீபத்தில் எங்கள் பகுதியில் உள்ள ஒரு பெண் தூக்குப் போட்டுக்கொண்டு விட்டாள். அந்த வீட்டின் உரிமையாளர் துர்மரணம் சம்பவித்த அந்த வீட்டைச் சுத்தம் செய்து நான்கு கழுதைகளை அந்த வீட்டினுள் அடைத்து வைத்திருந்தார் ஒருநாள் முழுவதும். காரணம் வினவியதற்கு, 'கழுதைகள் பல சேர்ந்து கத்தினால் துர்மரணத்தைத் தழுவிக் கொண்டுவிட்ட அந்தப் பெண்ணின் ஆவி அந்த வீட்டில் தங்காது. அதற்காகவே இந்த ஏற்பாடு' என்றார். இந்தச் செய்தி எனக்கு வியப்பாக இருந்தது. இப்பொழுது அந்த வீட்டிற்கு வேறு குடும்பம் குடிவந்து விட்டது!

-சக்தி நாமஞர்

---

வென் யூ கோடு அஞ்சன் வேல் தட் மைட் ஹாப்பன் (நீ அஞ்சன்வேலுக்குச் சென்றால் நீ சொல்வது நடக்கலாம்)'' என்றான் மெதுவாக. அவன் குரல் மிக அழகாக இருந்தது. சொற்கள் மிக இனிமையாக வெளிவந்தன.

''நான் சொல்வதை யார் தடுக்க முடியும்?''என்று கேட்ட அஹமத்''ஹாவ் யூ எனி ஐடியா ஹௌ மெனி மென் ஐ ஹாவ் ப்ராட் வித் மி(என்னுடன் எத்தனை பேரை அழைத்து வந்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா?)'' என்று ஆங்கிலத்திலும் வினவினான்.

விவாஸியரின் புன்முறுவல் அதிகமாக விரிந்தது அவன் செல்லிய இதழ்களில். அணுவளவும் மீசையோ தாடியோ இல்லாமல் அன்றாடம் வழித்துவிடப்பட்டிருந்த முகம் லேசாகச் சிவந்தது. ''லெட் அஸ் டு அவே வித் இங்க்லீஷ். இட் சஸ் எ ஃபாரின் லாங்வேஜ் பார் போத் ஆப் அஸ் (ஆங்கிலத்தை விட்டு விடுவோம். நம் இருவருக்கும் அது அந்நிய மொழி)'' என்ற விவாஸியர் ''நீ நிரம்ப வீரர்களை அழைத்து வந்திருப்பாய் என்பதில் சந்தேகமில்லை'' என்று மராத்தியில் பேசினான்.

அவன் மராத்தி பரம சுத்தமாயிருந்ததைக் கண்டு ராணியும் சாருவும் வியப்படைந்தார்கள். அவர்கள் வியப்பைக் கவனித்த விவாஸியர் சாருவுக்கும் தலை வணங்கினான். ''இவளை அனுமதித்தால் காலை வரையில் ஒவ்வொருவருக்காகத் தலையை வணங்கிக் கொண்டே இருப்பான்'' என்று எரிந்து விழுந்தான் அஹமத்.

விவாஸியர் அவனை நோக்கி நகைத்தான் மெல்ல.''அஹமத்! பெண்களுக்கு மரியாதை காட்ட நாம் பழக வேண்டும். எங்கள் நாட்டில் அது மிக முக்கியமாகக்கருதப்படுகிறது'' என்று அறிவுரை கூறினான்.

''உன் அறிவுரை எனக்குத் தேவையில்லை'' என்றான் அஹமத்.

''அறிவு சம்பந்தப்பட்ட எதுவும் அங்கு ஏறாதென்பது எனக்குத் தெரியும். ஆனால் அஹமத்! இந்தப் பெண்களில் யார் மீது நீ கைவைத்தாலும் அடுத்த விநாடி நீ பறந்து கொண்டிருப்பாய்'' என்று கூறியதன்றிப் போகும் இடத்தைக் குறிப்பிடத் தனது வலது கை ஆட்காட்டி விரலை வானத்தை நோக்கி உயர்த்தினான்.

இந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அஹமத் வெகு துரிதமாகத் தனது கச்சையிலிருந்த பிஸ்டலை எடுத்து விட்டான். அப்பொழுதுதான் தன் எதிரி எப்பேர்ப்பட்டவன் என்பதைப் புரிந்து கொண்டான். விவாஸியரின் இடதுகையில் ஜால வித்தை போல் அவன் கைத்துப்பாக்கி தோன்றியது. அதிலிருந்து பறந்த ரவை அஹமதின் ரிவால்வரைப் பறித்துச் சென்று எட்டடிக்கு அப்பால் வீழ்த்தியது. ''உன் கையைக் காயப்படுத்த எனக்கிஷ்டமில்லை.'' என்று கையைச் சுடாததற்குக் காரணம் சொன்னான் விவாஸியர்.

இந்தச் சமயத்தில் அஹமதின் உதவிக்கு ஸில்வர் வந்தான். ''லெட் அஸ் ஸ்டாப் திஸ் டாம் ஃபூலரி, லெட் அஸ் டாக் (இந்த முட்டாள்தனத்தை நிறுத்துவோம். நாம் பேசுவோம்.)'' என்று ஸில்வர் யோசனை சொன்னான்.

''அதுதான் சரி. விடிய சில விநாடிகளே இருக்கின்றன'' என்றாள் ராணி.

''எப்பொழுதும் காலை நேரம் நமக்குத் தெளிவை அளிக்கிறது''என்றான் விவாஸியர்.

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கிழக்கு வெளுத்து வெளிச்சம் லேசாகச் சோலையை ஊடுருவியது. அப்பொழுது ராணியை நோக்கிக் கேட்டான் விவாஸியர். ''லேடி! வில் யூ டேக் எ ஹம்பிள் டோகன் ஆப் அப்ரீஸியேஷன் ப்ரம் யுவர் ஸ்லேவ் (அம்மணி தங்களிடம் உள்ள மதிப்பைக் காட்ட உங்கள் அடிமை ஒரு பரிசளிக்கிறான், ஏற்றுக் கொள்வீர்களா?)'' என்று மிகப் பணிவுடன் கேட்டான்.

அத்துடன் தனது கையைச் சோலைக்கு வெளியே நீட்டவும் செய்தான். அவ்வழியில் கண்ணைச் செலுத்திய அனைவரும் பிரமை பிடித்து நின்றனர். ''ஏற்கிறேன். கண்டிப்பாக ஏற்கிறேன். என்ன அழகான பரிசு!'' என்று குரலில் வியப்பு அலை பாயக் குதூகலத்துடன் கூறினாள் கடல் ராணி.

பரிசு மகத்தானது. யாரும் எதிர்பாராத பரிசு. அதை அங்கு கொண்டுவர முடியுமென்று அனந்த் கூட நினைக்கவில்லை. ''அற்புதம்! காணக் கிடைக்காத தங்கம்'' என்ற இந்திரஜித் தனது இதழ்களை அசைத்து முணுமுணுத்தான்.

அஹமதின் முகத்தில் அசட்டுத்தனமும் கிலியும் கலந்து தாண்டவமாடியது. நிலைமை ஒவ்வொரு விநாடியும் படு மோசமாகிக் கொண்டு வருவதை ஸில்வரும் உணர்ந்தான்.

(தொடரும்)

# க்ளிக் க்ளிக் க்ளிக்

ராஜேஷ்குமார்

ரத்தம் கக்கியபடி — தக்காளிப் பழமாய் மறைகிற சூரியன்; அநாதையாய்நிற்கும் ஒற்றைப் பனைமரம்; சேற்றில் குளிக்கும் எருமை மாடு;கோவணச்சிறுவன்;மாராப்பு இல்லாமல் வைக்கோல் போரைத் தலைக்கட்டாக எடுத்துச் செல்லும் பெண்; குத்துக்காலிட்டபடி முகம் நிறையச் சுருக்கங்களோடு சுருட்டைப் புகைக்கும் கிழவர். — இவர்கள் எல்லாரையும் தன் யாஷிகா காமிராவுக்குள் அடைத்துக் கொண்டு — அந்த மேட்டுப் பகுதியின் மேல் ஏறி நின்றான் முருகேசன்.

அவனுடைய காமிரா இன்னமும் பசியோடு இருந்தது.

ஒரு வாரப் பத்திரிகை அறிவித்திருந்த 'போட்டோ போட்டி'யில் கலந்துகொண்டு முதல் பரிசான ஐம்பது ரூபாயை நோகாமல் நொள்ளாமல் அள்ளிக் கொண்டு போய்விட வேண்டும் என்பதில் தீவிரமாயிருந்தான் முருகேசன். அதற்காகத்தான் இந்தப் போட்டோ வேட்டை. வீட்டிலேயே சின்னதாய் ஒரு ஸ்டுடியோ. ஓர் இருட்டறை. டெவலப்பிங் பிராஸஸ் சாமான்களெல்லாமே இருந்தன அவனுக்கு!

முருகேசன் சுதந்திரமாய்க் காமெரா வோடு பொட்டல் வெளிகளிலெல்லாம் சுற்றி வந்தான். 'அது மட்டும் 'க்ளிக்' ஆனால் ஷ்யூராய் அந்த அம்பது ரூபாய் நமக்குத்தான்'— ஆசைக் கனவுகளோடு ஒவ்வொன்றும்



'க்ளிக்' கித் தள்ளினான். கண்ணில் பட்டதெல்லாம் காமிராவில் அடைபட ஆரம்பித்தது.

கடைசியாய் இப்போது அந்த மணல் மேட்டின் மீது ஏறி நின்றிருக்கிறான்.சூரியனின் ஒளி இன்னமும் மிச்சமிருந்தது. மேட்டின் மீது நின்றபடி தன் முட்டை சைஸ் விழிகளைச் சுழற்றினான் முருகேசன்.

எதிரே ஒரு கோரைப் புல் மண்டிய பிரதேசம். நடு நடுவே பாறைத் திட்டுக்கள். கொஞ்சம் மணல் வெளி. மற்றபடி எல்லாமே கோரைப் புல் கூட்டம். கண்ணுக் கெட்டிய தூரம் வரை! சட்டென்று முருகேசனுக்கு மண்டையில் அந்த ஐடியா பிரசன்னமாகியது.

'இப்படியே இந்த மேட்டிலிருந்து கவிழ்ந்து படுத்து காமிராவைத் தாழ்த்தி இந்தக் கோரைப் புல் கூட்டத்தை மட்டும் ஒரு 'ஸ்நாப்' எடுத்தால் எப்படி இருக்கும்...?' 'ஃபெண்டாஸ்டிக்கா' இருக்கும் என்றது முருகேசனின் ஆத்மா. 'இயற்கையன்னையின் கூந்தல்' என்று தலைப்புக் கூட வைக்கலாம்— யோசனை சொல்லியது முருகேசனின் அரை ராத்தல் மூளை.

அந்த மேட்டின் மீது அப்படியே கவிழ்ந்தான் முருகேசன். மாட்டுச் சாணம் தன் பேண்டில் பரவியதுகூடத் தெரியாமல் வ்யூ ஃபைண்டரில் பார்வையைப் பதித்தான்.

''ஆகா! அட்டகாசம்...'' வாய்விட்டுத் தன்னையே பாராட்டிகொண்டு கோணத்தைச் சரிபார்த்து 'க்ளிக்'கினான் முருகேசன்.

இருட்டறை.

காமிராவின் வயிற்றைத் திறந்து பிலிமை உருவிக் குளிப்பாட்டினான் முருகேசன். கவனமாக பிராஸஸ் செய்து டெவலப் பண்ணினான்.

ஒரு முப்பது நிமிடம்.

நிழல்கள் நிஜமாக ஆரம்பித்தன. கோவணச் சிறுவன் மட்டும் கலங்கலாய்த் தெரிய

மற்றதெல்லாம் அச்சு அச்சாகக் கண்ணில் ஒற்றிக் கொள்கிற போல் விழுந்திருந்தன. மாராப்பு இல்லாத பெண் முருகேசனுக்கு ஊருக்குப் போயிருந்த அவனுடைய மனைவியின் 'அவசியத்தை' நினைவூட்டினாள். கிழவர் விட்ட சுருட்டுப் புகை படத்தில் மேகமாய் உறைந்து நின்றது.

கடைசியாய் அந்தக் கோரைப்புல் படம். நினைத்தபடியே பிரமாதமாய் விழுந்திருந்தது. 'சபாஷ்டா முருகேசா... சபாஷ்டா!' முருகேசனின் ஆத்மாவும் அரை ராத்தல் மூளையும் பாராட்டின.

படத்தை வெளிச்சத்தில் உயர்த்திப் பிடித்துப் பார்த்தான் முருகேசன்.

பார்த்தான்.

பார்த்...

பார்.... — சட்டென்று அவன் விழிகள் படத்தின் ஓரத்தில் நிலைத்து நின்றன. அவனுடைய நரம்புகளில் ஐஸ் வாட்டர் பாய்ந்தது. இதயத்துக்குக் காக்காய் வலிப்பு வந்தது.

கோரைப்புல் கூட்டத்தின் ஒரு ஓரத்தில் புற்களுக்கு வெளியே—

நீட்டியபடி இரண்டு கால்கள் தெரிந்தன.

மனிதக் கால்கள்! அதிலும் ஒரு பெண்ணின் கால்கள்... கொலுசுகள் காலில் தெரிந்தன.

சித்திரை வெய்யிலில் கூட வியர்க்காத முருகேசனின் உடம்பு இப்போதுவியர்வையில் 'ஷவர்பாத்' எடுக்க ஆரம்பித்தது.

''பி...பி...பி...பிணம்...'' — முருகேசனின் ஆத்மா திக்கியது.

''ஆ....ஆ...ஆ...ஆமாம்...'' — முருகேசனின் அரை ராத்தல் மூளை அதே திக்கலோடு ஆமோதித்தது. எவனோ கழுத்தை நெரித்தோ வெட்டியோ போட்டுவிட்டுப் போயிருக்கிறான். உடம்பு ஏதாவது தெரிகிறதாவென்று கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு போட்டோவில் தேடினான் முருகேசன். ஊஹூம்.. கால்கள் மட்டும் புதருக்கு வெளியே தெரிந்தது.

''போலீஸில் சொல்லிவிடலாம்''-ஆத்மா.

''வேண்டாம்'' — மூளை.

''இல்லை சொல்லிடலாம்'' — ஆத்மா.

''வீண் ஆபத்து'' — மூளை.

கடைசியாய்—

'அவார்டு ஏதாவது போலீஸிலிருந்து கிடைக்கலாம்' என்று ஆத்மா காட்டிய ஆசை வலையில் சட்டென்று விழுந்தான் முருகேசன்.

**வா**யை இருபது சென்டி மீட்டர் விட்டத்துக்குத் திறந்து நீ..ண்...ட.... கொட்டாவியொன்றை விட்டார் இன்ஸ்பெக்டர் இருதயராஜ்.

அவர் கொட்டாவி விட்டு முடித்ததும் முருகேசன் அவர் முன்னே போட்டோவை நீட்டினான். நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான.

''என்னய்யா போட்டோ? நெல்லா?''

''நெல் இல்லே சார்... புல்லு.''

''சரி புல்லு... இதுக்கென்னய்யா?''

''போட்டோவை நல்லாப் பாருங்க ஸார், உங்களுக்கே தெரியும்.'' — இன்ஸ்பெக்டரால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றதும் முருகேசனுக்குப் போலீஸ் இலாகாவே இளப்பமாய்த் தெரிந்தது.

''இந்தக் கோரைப்புல்லு நடுவே நீ எங்கே யாசகம் ஒளிஞ்சுக்கிட்டிருக்கியா?'' என்று இன்ஸ்பெக்டர் இருதயராஜ் கோபமாய்க் கேட்டார்.

''இல்லை ஸார்...'' — காலரை நிமிர்த்திக் கொண்டான் முருகேசன். ''போட்டோ ஓரத்தில் பாருங்க ஸார்... புதருக்கு வெளியே ரெண்டு காலு தெரியுது...''

இன்ஸ்பெக்டர் பார்த்தார். ''ஆமாய்யா!'' என்றார் ஆச்சரியமாய். பிறகு அவரே கேட்டார். புல்லுக்குநடுவிலே எவனுச்சும் படுத்துத் தூங்குறானு?''

முருகேசனுக்கு இப்போது நிஜமாகவே கோபம் வந்தது. ''என்ன ஸார் நீங்க? இது தூங்கறவனோட கால் இல்லே ஸார்... கால்களை நல்லாப் பாருங்க... விறைச்ச மாதிரி தெரியுது. அதுவும் இது ஒரு பெண்ணோட கால்கள். கொலுசு மாதிரி ரெண்டு கால்களிலேயும் தெரியுது...''

''ஆமாய்யா!'' என்றார் இருதயராஜ் இன்னமும் ஆச்சரியமாய். ''கண்டிப்பா இது ஒரு பெண்ணோட பிணமாத்தான் இருக்க முடியும்.... ஆமா... இந்தப் படத்தை எந்த ஏரியாவிலே எடுத்தே?''

''சங்கிலிபாளையத்திலே ஸார்.''

''சங்கிலிபாளையமா? அப்ப கண்டிப்பா இது பிணமாகத்தான் இருக்கும். மாசத்துக்கு ஒரு கொலை நடக்கணும்னு சங்கிலிபாளையத்துக்குக் கோட்டா இருக்கு. இந்த மாசக் கோட்டா போலிருக்கு இது...''

''ஸார்... இந்தக் கொலை பற்றி முதன் முதலாத் தகவல் கொடுத்தவன் நான்தான். எனக்கு ஏதாச்சும் அவார்டு கிடைக்குமா ஸார்?''

''கிடைக்குமாவாவது... நிச்சயம் கிடைக்கும். முதல்லே பிணத்தைப் போய்ப் பார்ப்



காமாட்சி: உங்கபிள்ளையின் காதில் என்ன கட்டு போட்டு இருக்கு?

மீனாட்சி: என் மருமகளுக்கு அவன் காதைக் கடிக்கிற பழக்கம் உண்டு என்றேனே, இப்பவாவது நம்பறியா?

-லலிதா செல்லப்பா

போம். பைல் நாட் சிக்ஸ் ஜீப்பைக் கொண்டாரச் சொல்லு.''

அந்த மேட்டின் மீது இன்ஸ்பெக்டரும் முருகேசனும், இரண்டு கான்ஸ்டேபிள்களும் ஏறி நின்றனர்.

''இந்த இடம்தான் ஸார். இங்க படுத்துக்கிட்டுத்தான் போட்டோ எடுத்தேன்.'' முருகேசன் சொல்ல கையிலிருந்த போட்டோவைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர் இருதயராஜ்.

''அப்படின்னு வலது கைப்பக்கம்தான் ரெண்டு காலும் தெரியுது. இப்படியே போய்ப் பார்ப்போம்...''

மேட்டை விட்டு எல்லோரும் கீழே இறங்கி வலது கைப்பக்கமாய் நடந்தனர். புற்கள் மேலே விழுந்து முருகேசனுக்கு 'கிச்சு கிச்சு' மூட்ட வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு நடந்தான்.

சில கஜ தூரம் நடந்திருப்பார்கள்.

இன்ஸ்பெக்டர் இருதயராஜ் சட்டென்று நின்றார்.

''பாரய்யா ரெண்டு காலு தெரியுது.''

முருகேசன் பார்த்தான். கன்னங் கரேலென்று இரண்டு கால்கள் சற்றுத் தூரத்தில் ஒரு புதரிலிருந்து நீட்டிக் கொண்டிருந்தன.

முருகேசனின் இதயம் கபடி ஆடியது.

''ஸார் எனக்குப் பயமாயிருக்கு.''

''போலீஸ் கூட வந்துட்டு நீ ஏய்யா பயப்படறே? தைரியமா வா'... பைல் நாட் சிக்ஸ் பாடி கிட்டப் போய்ப் பாரு.''

பைல் நாட் சிக்ஸ் தைரியமாகப் போனார். புதருக்குள் எட்டிப் பார்த்துவிட்டுக் கடகடவென்று சிரித்தார்.

''ஏனய்யா சிரிக்கிறே?''

''நீங்களே வந்து பாருங்க ஸார்''-சொல்லிவிட்டு இன்னமும் சிரித்தார்.

இன்ஸ்பெக்டர் இருதயராஜ் ஆர்வமாய்ப் போனார். முருகேசன் அதைவிட ஆர்வமாய் அவரை முந்திக் கொண்டு போனான். இருவரும் புதருக்குள் எட்டிப் பார்க்க—

சிதிலமாகிப்போன — எந்தக் காலத்ததோ அய்யனார் சிலையொன்று ஆகாயத்தைப் பார்த்தபடி கால்களை நீட்டியபடி கிடந்தது.

---

# கல்கி-நற்பணி மன்றம்

## வாசகர் பரிசுத்திட்டம்

இந்த வாரம் நீங்கள், உங்கள் வசதி, தகுதிக்கு ஏற்பச் செய்த ஏதேனும் ஒரு நற்பணியைக் கீழே உள்ள கூப்பனில் சுருக்கமாக நாலு வரிகளில் எழுதுங்கள். கூப்பனை வெட்டி எடுத்து உறையிலிட்டு, **"கல்கி — நற்பணி மன்றம், தபால் பெட்டி எண் 3159, சென்னை - 600032** என்ற விலாசம் எழுதி, போதிய தபால் தலை ஒட்டித் தபாலில் சேர்த்துவிடுங்கள்.

இவ்வாறு சேரும் உறைகளை மாதம் ஒரு முறை குவித்துக் கிளறிய பின் அதிர்ஷ்டசாலியான ஒருவரைப் பொறுக்கி எடுப்போம். அந்த ஒருவருக்கு உஷா தையல் மிஷின் பரிசாகக் கிடைக்கும். வேறு 50 அதிர்ஷ்டசாலிகளுக்குத் தலா ரூ. 10 பரிசு கிடைக்கும். இந்த 51 நபர்களின் பெயர்களும் விலாசங்களும் கூடுமானால் அவர்களது புகைப்படங்களும் அவர்கள் செய்த நற்பணிகளும் கல்கியில் பிரசுரமாகும்.


உறையில் கூப்பனைத் தவிர வேறு எதுவும் வைக்கக் கூடாது.

ஆகஸ்டு மாதத்துக்கு முடிவு தேதி: செப்டம்பர் 22.

**கல்கி நற்பணி மன்றம்**

இவ்வாரம் (ஆகஸ்டு 10—16)

நான் செய்த நற்பணி:



கையெழுத்து: தேதி:

பெயர்:

விலாசம்:




# கடுகு பதில்கள்!

⌘ நெல்லை ஆ. கணபதி, சென்னை-15

கே: திருச்சி 'கலையரங்கத்தில் ஒரு நாள் ஒரு கைவிசிறி குறைவதாகத் தேடினார்கள்: இப்போது தெரிகிறது நீங்கள் என்றைக்குப் படம் பார்த்தீர்கள் என்று?

ப: ஒரு கை விசிறி குறைந்த அன்று நான் பார்க்கவில்லை. நான் படம் பார்த்த அன்று இரண்டு கைவிசிறி குறைந்திருக்கும். (என் மனைவியும் வந்திருந்தாள்!)

⌘ மிஸ். பி. விஜி, மதுரை-2

கே. நீர் கூட ஒரு 'ஐ' (நான்) ஸ்பெஷலிஸ்ட் போலிருக்கிறதே.

ப: என்னிடம் என்னைப் பற்றிக் கேட்கும்போது 'நான்' வராமல் எப்படி பதில் எழுதுவது? குப்புசாமி, கோபால்சாமி ஆகியவர்களைப் பற்றி எழுதும்போது 'அவரும் என்னைப் போல் வாயால்தான் சாதம் சாப்பிடுகிறார்' என்பது போன்ற அபத்தங்களை எழுதினால் சொல்லுங்கள், ஐ ஸ்பெஷலிஸ்ட் என்று.

⌘ கே. கருணாநிதி, திருக்கோவிலூர்

கே: இருட்டில் நடந்து பழக்கப்பட்டதுண்டா?

ப: எதிர்காலம் என்ற இருட்டில்தான் உலகில் வாழும் நாம் எல்லோரும் நடந்து கொண்டிருக்கிறோம்.

⌘ எஸ். சீனிவாசன், மதுரை-3

கே: கதையுடன் ஸ்டாம்பு வைத்து அனுப்பினால் (பாவிகள்!) மூன்று மாதங்கள் கழித்துத் திருப்பி அனுப்புகிறார்களே. நிராகரிக்கப் பட்டவைகளை இத்தனை நாட்களுக்குள் திருப்பி அனுப்ப வேண்டும் என்று நியதி ஒன்றும் கிடையாதா?

ப: உடனே திருப்பி அனுப்பி விட்டால் 'படிக்காமலே திருப்பி அனுப்பி விட்டார்கள்' என்பீர்கள். ஒரு விதத்தில் பத்திரிகை ஆசிரியர்கள் பாவிகள்தான். தினந்தோறும் எத்தனை மகா மட்டமான கதை கட்டுரைகளைப் படிக்கவேண்டியிருக்கிறது!

⌘ பி. ஆர். கீதா, ஊரூர்

கே: 'கேள்விகள் எழுதும் விதங்கள்' என்று ஒரு புத்தகம் எழுதியுள்ளேன். வானதி பதிப்பகத்தாரிடம் சொல்லிப் பிரசுரிக்கச் சொல்வீர்களா?

ப: தனக்கே தகராறாம், தம்பிக்குப் பலகாரமாம் என்று ஒரு பழமொழி தெரியுமா?

⌘ சுதா மணிமேகலை, வேலூர்

கே: குந்தவை, பூங்குழலி, வானதி, சிவகாமி-இவர்களுள் யாரைத் தங்களுக்குப் பிடிக்கும்?

ப: அமரர் கல்கியின் கதைகளைப் படிக்கிறவர்கள் அவர்களுடைய கதாபாத்திரங்களுடன் ஒன்றிப் போவது நிச்சயம். அவரது எழுத்தின் வெற்றிக்கு அதுவே காரணம். நீங்கள் சொன்ன நால்வரும், உடன் பிறந்த சகோதரி மாதிரி எண்ணும்படி அல்லவா ஒரு அன்னியோன்யத்தை உருவாக்கியுள்ளார்!

⌘ ஜெயந்தி சண்முகம், சித்தரஞ்சன்

கே: மாமியார் மெச்சிய மருமகளாக வாழ என்ன செய்யவேண்டும்?

ப: மாமியாரை, மருமகள் மெச்சும் மாமியாராக ஆக்குங்கள். மற்றவர்களிடம் உள்ள நல்ல குணங்களையும் பண்புகளையும் பழக்கங்களையும் கவனிக்கவும் பாராட்டவும் செய்தால், அவர்களும் உங்களிடமுள்ள திறமைகளையும் குணங்களையும் கவனிக்கத் துவங்குவார்கள். ஒருவரைக் குறை சொல்லிக் கொண்டே இருந்தால், அவரும் உங்கள் மேல் குறைகளை (கற்பனையாகக்கூட)க் கண்டு பிடித்துக் கொண்டே இருப்பார்கள். டேல் கார்னகி எழுதிய 'ஹௌ டு வின் ஃப்ரண்ட்ஸ்' புத்தகத்தை எல்லா நாட்டுப் பெண்களுக்கும் நான் சிபாரிசு செய்கிறேன்.

⌘ சின்னக் கண்ணன், சென்னை-40

கே: ஒரு புத்தகம் எழுதும் அளவுக்குக் கடவுளின் அருளைக் கண்டிருப்பதாகச் சொல்கிறீர்களே, உதாரணத்திற்கு ஒன்று கூறுங்கள்.

ப: ஏன், இந்தக் கேள்வி — பதில் எழுதக் கிடைத்த வாய்ப்பையே எடுத்துக்கொள்ளுங்களேன். லட்சக் கணக்கான தமிழர்களில் ஒருவனான என்னை, நூற்றுக் கணக்கான எழுத்தாளர்களில் ஒருவனான என்னை இப்படி ஒரு பணிக்குத் தகுதி உடையவனாக ஆக்கியதே அவன் அருள்தானே!

பரிசு பெறுபவர்:

**ஜெயந்தி சண்முகம்**
**வீதி நெம்பர் 73**
**வீட்டு நம்பர் 12/பி.**
**எஸ். பி. வடக்கு**
**சித்தரஞ்சன் 713331**



தாக்கர்ஸி – தலைமுறையினரின் நாகரீக இணைப்புப் பாலம்



Dattaram HM-19 TAMIL

TF

க்ரோஷேவ்ஸ் (முன்கூட்டியே சுருக்கப்பட்டது) மற்றும் டெபிவேஸ் (மடிப்பைத் தடுக்கப் பரிசோதனை செய்யப்பட்டது) காட்டன் துணிகளை பாலியெஸ்டர் கலப்பினை சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், ஆடைத் துணிகள் மற்றும் புடவைகள்.

1873 முதல் உன்னதமான ஜவுளிப் பரம்பரைச் சின்னம்

# தாக்கர்ஸி ஃபாப்ரிக்ஸ்

ஹிந்துஸ்தான் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிட்.

# ஈறு உபாதையிலிருந்து நிவாரணம் பெற்றது பற்றி வியத்தகு பாராட்டுகள்

**போர்ஹென்ஸ் உபயோகிப்பவர்கள் தாமாகவே எழுதிய பல கடிதங்களில் இதோ இரண்டு:**

**...பற்களை சுத்தம் செய்வதோடு மட்டுமில்லாது, பற்கள் சம்பந்தமான எந்த உபாதையையும் தவிர்க்கிறது...''**

''...நானோ அல்லது என் குடும்பத்தினரில் யாரேனும் பல் வலியினாலோ ஈறு தொந்தரவினாலோ அவதியுறும்போது போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் உபயோகிக்கிறோம்...வலி சிறிது நேரத்திற்குள் குறைந்து விடுகிறது. உங்களுடைய போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் பற்களை சுத்தம் செய்வதோடு மட்டுமில்லாது, பற்கள் சம்பந்தமான எந்த உபாதையையும் தவிர்க்கிறது.

(கையொப்பம்)
கீபா ஷாக்பட்வர்தன், பம்பாய்

**''...ஈறு ஆரோக்கியமாக விளங்க உதவுகிறது...''**

...''தரத்தில் தன்னிகரற்ற பேஸ்ட். போர்ஹென்ஸ் என்றால் அது மிகையாகாது அதைப் புகழ்வதற்கு நான் தயங்கவே மாட்டேன். அதுவும் பல் தொந்தரவோடு கூட ஈறு உபாதையுள்ளவர்களுக்கு மிகவும் உத்தமமானது.

...நான் கல்லூரியில் படித்த சமயம் ஈறில் தொல்லை ஏற்பட்டு அவதிப்பட்டபோது எங்கள் கல்லூரி டாக்டர் இந்த பேஸ்ட்டை உபயோகிக்கச் சொன்னது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இப்போது கூட நல்ல ஈறினைப் பெற்று விளங்க உதவியாயிருக்கிறது...''

(கையொப்பம்)
கவுர் கிஷோர் சக்ரபர்த்தி, பர்தான்

(இக்கடிதங்கள் மற்றும் இவை போன்ற மற்ற கடிதங்களின் புகைப்பட நகல்களை ஜெப்ரி மேனர்ஸ் & கம்பெனி லிமிடெடின் எந்த அலுவலகத்திலும் காணலாம்.)

## பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் உபயோகித்து உங்கள் ஈறுகளை பராமரியுங்கள்




**டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஸ்பெஷல் ஃபார்முலா**

டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஃபார்முலாவின் திறமிக்க அஸ்ட்ரிஞ்ஜன்ட் செயல் உங்கள் ஈறுகளை வலுப்படுத்தி ஈறு உபாதைகளைத் தடுக்க உதவுகிறது.

**பல் டாக்டர்கள் கூறுகிறார்கள்**

ஈறு உபாதையால் ஆரோக்கியமான பற்களைக்கூட இழக்க நேரிடும். ஆகவே, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் மற்றும் போர்ஹென்ஸ் டபிள் ஆக்ஷன் டூத்பிரஷ் கொண்டு பற்களைத் துலக்குங்கள், ஈறுகளைத் தேய்த்துக் கொடுங்கள்.




**இலவசம்!** ''உங்கள் ஈறுகளையும் பற்களையும் பராமரிக்கும் முறை.'' பற்களையும் ஈறுகளையும் பராமரிப்பது பற்றிய வண்ணப் புத்தகம். 25 பைசா தபால் தலையுடன் இம்முகவரிக்கு எழுதுக: போர்ஹென்ஸ் டென்டல் அட்வைஸரி பியூரோ, த.பெ. எண் 11463, டிபார்ட்மெண்ட் T197-220 பம்பாய் 400 020. எம்மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்கவும்.

**போர்ஹென்ஸ்**
பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

220F 172 TAM

Regd. T.M: Geoffrey Manners & Co. Ltd.



# சஞ்சய்-5 கல்லூரி அழகி

செப்டம்பர் 29, 1974.

நீண்ட நாள் குடும்ப நண்பர் மகமது யூனூஸ் வீட்டில் கல்யாணம். மணமகன் சஞ்சய். மணமகள் மேனகா.

இந்திரா காந்திக்கு ஆடம்பரமான திருமணங்கள் பிடிக்காது. எளிமையைக் கடைப்பிடிப்பதில் சஞ்சய் இன்னும் தீவிரம் காண்பித்தார். உணவில் சிக்கனம், உடையில் எளிமை, (வெள்ளை பைஜாமா, வெள்ளை ஜிப்பா) காலில் வெறும் செருப்பு. குளிர் காலத்திலும் கூட மேலுக்கு ஒரு சால்வை தவிர வேறு எந்த உடையும் தரிப்பதில்லை.

சஞ்சய் காந்திக்குப் பல வகையில் மேனகா ஏற்றவளாக இருந்தார். குழந்தை முகம். எளிதில் யாரையும் கவர்ந்துவிடக் கூடிய சுபாவம்.

சஞ்சய் மேனகாவை எப்போது சந்தித்தார் என்பது பற்றிச் சரியான தகவல் இல்லை. மேனகாவின் தந்தை கர்னல் ஆனந்த் மிலிடரியிலிருந்து ரிடையரானவர். தாய் அம்தேஷ்வர் டில்லியில் சோஷல் சர்க்யூட் என்று சொல்லப்படும் சீமான், சீமாட்டிகள் சந்திப்பில் திளைப்பவர். இது போன்ற ஒரு பார்ட்டியில் மேனகாவை சஞ்சய் சந்தித்திருக்கலாம். மேனகா லேடி ஸ்ரீராம் கல்லூரியில் மாணவியாக இருந்தார். கல்லூரி அழகி என்று கூட ஒரு வருடம் கிரீடம் தரித்தார்.

சஞ்சய் கல்லூரி வாசலுக்கே சென்று காத்திருந்து இருவரும் உல்லாசமாகத் திரிவார்கள் என்று சொல்லப்படுகிறது. மேனகா கல்லூரிப் படிப்பு முடித்ததும் ஜர்னலிஸம் படித்தார். தனியார் ஜர்னலிஸம் பள்ளி நடத்தி வந்த லாம் காஸ்டலினோ 'டேட் லைன் டெல்லி' என்ற பள்ளிப் பத்திரிகைக்காக ''யாராவது சஞ்சயைப் பேட்டி கண்டால்' நன்றாக இருக்கும்'' என்று மாணவர்களைக் கேட்டார்.

''நான் பேட்டி கண்டு வருகிறேன்'' என்றார் மேனகா.

''உனக்கு சஞ்சயை ரொம்பத் தெரியுமோ? அவரைச் சந்திப்பதே கஷ்டம்!'' என்றார் காஸ்டலினோ.

''இன்று மாலை அவரை நான் சந்திக்க இருக்கிறேன்'' என்று மேனகா அலட்சியமாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

அதன் பிறகு அவர் டேட்லைன் பள்ளிக்கே திரும்பவில்லை. பேட்டியும் வரவில்லை. சஞ்சயுடன் அவருக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது.

அச்சமயத்தில் மேனகா இன்னொரு வகையில் பிரபலமாகியிருந்தார். விளம்பர மாடலாக 'போஸ்' கொடுப்பதை ஒரு பொழுது போக்காக வைத்திருந்தார். டில்லியில் டி.சி.எம். துணிக் கம்பெனி சார்பாக ஒரு நூறு விளம்பரப் பலகைகளில் வெறும் டவலை மட்டும் உடம்பில் சுற்றிக் கொண்டு கவர்ச்சியாகக் காட்சி தந்தார். கல்யாணம் நிச்சயமான கையோடு அந்த விளம்பரங்கள் அகற்றப்பட்டு விட்டன.

இத்திருமணத்தில் சுவாரஸ்யமான விஷயம் மேனகா சீக்கிய குடும்பத்தைச் சார்ந்தவள். இந்திரா காந்திக்கு இது ஒன்றும் பெரிய விஷயமாகப் படவில்லை. அவரே ஒரு பார்ஸியை மணந்தவர். அவருடைய கவலை எல்லாம் 'சஞ்சய்க்கு ஏற்றபடி மனைவியாக மேனகா இருப்பாளா?' என்பதுதான்.

''மேனகா குழந்தை மாதிரி இருக்கிறாள். 18 வயசே ஆகியிருக்கிறது. சஞ்சயை விட 10 வயது குறைந்தவள். மகனின் வேகத்துக்

கி.கஸ்தூரிரங்கன்

கும் கோபத்துக்கும் ஈடுகொடுப்பாளா'' என்பது அவருடைய கவலையாக இருந்திருக்கும்.

மேனகாவைக் கூப்பிட்டுக் கேட்டார். ''சஞ்சயை நான் மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். என்னால் அவரோடு வாழ முடியும்.''

திருமணம் எளிய முறையில் முஸ்லீம் யூனுஸின் தலைமையில் நடந்தது. பிரதமர் வீட்டுத் திருமணத்துக்குப் பத்திரிகையாளர் டி.வி. ரேடியோ நிருபர்கள் போட்டோகிராபர்கள் யாருக்கும் அனுமதி இல்லை. மணமகன் மணமகள் இருவரும் கதராடை உடுத்தி ரிஜிஸ்டிரார் முன் மாலை மாற்றிக் கொண்டனர். தம்பதிகளாகப் பதிவு செய்து கொண்டனர். சொந்தக் குடும்பத்தினர் தவிர விருந்தாளிகளாக அமிதாப்பச்சன் குடும்பத்தினர், சஞ்சயின் தந்தை பிரோஸ் காந்தியின் சகோதரிகள் இருவர் முதலாக 30 பேர்களே பிரசன்னமாகி இருந்தனர்.

திருமணம் முடிந்த அடுத்த நாள் ஹனிமூன் என்று எங்கும் போகவில்லை. சஞ்சய் மாருதி கார் பாக்டரிக்கும் மேனகா அப்போது படிக்க ஆரம்பித்திருந்த ஜெர்மன் வகுப்புக்கும் போனார்கள்.

மேனகாவை மனைவியாகப் பெற்றது சஞ்சய் காந்தியின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. மேனகாவுக்கு இல்லாவிட்டாலும் அவருடைய அம்மா அம்தேஷ்வர் ஆனந்துக்கு அரசியலில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று ஆசை உண்டு.

பிரதமரின் மகனாக இருந்து கொண்டு மாப்பிள்ளை வெறும் 'மோட்டார் மெக்கானிக்'காகக் காலம் தள்ளுவதில் அவருக்கு அதிருப்தி. மேனகாவும் வயதில் சிறிசானாலும் உலக அனுபவம் அதிகம். இந்திய அரசியலில் சஞ்சய் ஈடுபட்டால் ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்படுத்தலாம் என்று நினைத்தார்.

சஞ்சய்க்கு அதுவரை அரசியலில் நாட்டம் இருக்கவில்லை. அவர் விரும்பி யிருந்தால் இந்திரா நினைத்திருந்தால், 1971-72ல் நடந்த தேர்தல்களில் நின்று சட்டமன்றத்தினராகி கட்சியிலும் முக்கிய இடம் பிடித்திருக்க முடியும். ஆனால் சஞ்சயின் கருத்தெல்லாம் கார் பண்ணுவதில்தான் இருந்தது.

1974ல் மாருதி கார் உருப்படாது என்று அவருக்குத் தெரிந்து போய்விட்டது. அவருக்குத் திறமைக் குறைவு என்பதால் அல்ல. ஒரு காரை உருவாக்குவதற்கு வேண்டிய சூழ்நிலை நிலவவில்லை. எவ்வளவுதான் செல்வாக்கு இருந்தும் போதிய முதலீடு கிடைக்கவில்லை.

சஞ்சயின் பார்வையில் எதிர்க் கட்சிகளும் அதிகாரிகளும், இந்திரா மந்திரி சபையில் இருப்பவர்கள் சிலரும் மாருதி கார் உருவாவதற்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறார்கள் என்று தெரிந்தது.

மாருதி கார் பற்றிய விவாதங்கள் போதாதென்று வணிக மந்திரி எல். என். மிஸ்ரா சம்பந்தப்பட்ட லைசென்சு ஊழல் பார்லிமெண்டில் வெடித்தது. துளசிராம் என்ற ஒரு காங்கிரஸ் எம். பி. பாண்டிச்சேரி வியாபாரிகள் சார்பாக லஞ்சம் கொடுத்து மிச்ராவிடமிருந்து லைசென்ஸ் பெற்றார் என்றும், அதற்காக விண்ணப்பத்தில் சக எம். பிக்களைக் கேட்காமல் அவர்கள் கையெழுத்தைப் போர்ஜரி செய்ததாகவும் தெரிந்து ஏக ரகளையாகி விட்டது. இந்திரா காந்தி கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினார்.


அதே சமயத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு விலைகள் திடுதிடுவென்று உயர ஆரம்பித்து விட்டன. பீஹார், குஜராத் முதலான மாநிலங்களில் எதிர்க் கட்சிகள், மாணவர்களின் கிளர்ச்சி வலுக்க ஆரம்பித்தது.

ஜெயப் பிரகாஷ் நாராயணன் அதுவரை அரசியலிலிருந்து ஒதுங்கி யிருந்தவர் இந்திரா ஆட்சி ஊழலைக் கண்டித்துப் பேசலானார். பீகார் மாணவர் கிளர்ச்சிக்கும் தலைமை தாங்கி ஆட்சிக்கு எதிரான பெரிய இயக்கத்தையே ஆரம்பித்து வைத்தார்.

மாருதி கார் பெரிய அரசியல் பிரச்னையாக உருவெடுத்தது.

'சென்னை ஆர்ச் பிஷப் அருளப்பா அவர்களிடம் சில கல்வெட்டுக்களையும் சுவடிகளையும் காட்டி, ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த கணேசய்யர் என்பவர், திருவள்ளுவர் ஒரு கிறிஸ்துவர் என்றும் பல தென்னாட்டு இந்துக்கோயில்கள் முன்பு கிறிஸ்தவ தேவாலயங்களாக இருந்தவை என்பதற்குத் தம்மிடம் சான்றுகள் இருப்பதாகவும் கூறி, நம்பவைத்து, லட்சக் கணக்கில் பணம் வாங்கி மோசடி செய்தார்.'

— இது பத்திரிகைச் செய்தி



இதற்கு முன்பும் ஒருமுறை 17ம் நூற்றாண்டில் ராபர்ட் - டி - நொபிலி என்ற பிரெஞ்சுப் பாதிரியார் ஏமாற்றப் பட்டதைப் புகழ்பெற்ற ஹிந்தி நூலாசிரியர் மகாவீர் பிரசாத் துவிவேதி என்பவர் விவரிக்கிறார்.

'பாதிரியார் நமது ஹிந்துமத வேதங்களை ஆராய்ச்சி செய்ய விரும்பினார். வேத புத்தகச் சுலோகசுவடிகளோ கிடைப்பது கடினமாக இருந்த காலம் அது. பண்டைய சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பண்டிதர் ஒருவர், சமஸ்கிருத ஸ்லோகங்கள் பலவற்றை சுவடிகளில் எழுதி 'இது தான் அசல் யஜுர்வேதம்' என்று அவரிடம் கொடுத்து ஏமாற்றிப் பெரும் பொருள் பறித்துக் கொண்டார்.

அப்படி இப்படிச் சுற்றி இந்தப் போலி நூல் 1761ம் ஆண்டு பாரிஸ் நகரில் உள்ள தலைமைப் புத்தகாலயத்தை அடைந்தபோது அதற்குக் கோலாகலமான மதிப்பும் மரியாதையும் கிடைத்தன. ஆனால் விரைவிலேயே உண்மை வெளிப்பட்டு அது வேதமே இல்லை, வெறும் புரட்டு என்று கண்டு பிடிக்கப்பட்ட பிறகுதான் புரிய வந்தது - நொபிலி பாதிரியார் பரிதாபகரமாக ஏமாற்றப் பட்டார் என்று.'' - ஏ. கே. பி.

இதன் நடுவில் சஞ்சய்க்கு உறுதுணையாக நின்ற மிச்ரா வெடிகுண்டு வீச்சில் மாண்டு போனார். ''மிச்ராதான் இந்திரா ஆட்சியின் ஊழலுக்கு அச்சாணி. அவர் வழியாகப் பல உண்மைகள் வெளிப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே அவரைத் தீர்த்துக் கட்டி விட்டார்கள்'' என்று வதந்திகள் எழுந்தன. இதைப் பற்றிக் கோபமாக இந்திரா குறிப்பிட்டுப் பேசினார். ''மிச்ராவை நான்தான் ஆள் வைத்துக் கொன்றதாக வம்பு பேசுகிறார்கள். நானே இறந்தாலும் கூட நான்தான் என்னைக் கொன்றேன் என்று என்மேல் பழியைப் போடுவார்கள்'' என்று ஆவேசமாகப் பேசினார்.

சஞ்சய் நேரடியாக அரசியலில் இறங்க வேண்டிய தருணம் வந்து விட்டது. அது வரை அரசியல் என்றாலே அவருக்கு அருவெறுப்பாக இருந்தது. அரசியல்வாதிகள் அத்தனை பேரும் அயோக்கியர்கள், பதவிக்காக எதையும் செய்வார்கள் என்ற கருத்து அவருக்கு உண்டு.

அம்மாவைச் சூழ்ந்திருந்த ஆலோசகர்களும் மந்திரிகளும் சைத்தான்களின் மறு அவதாரமாக அவர் எண்ணினார். முகஸ்துதிக்காரர்கள், முதுகில் குத்துபவர்கள், ஊழல் பேர்வழிகள் பதவி வெறி பிடித்த கிழடுகள் நிறைந்ததே அரசியல் என்று அவர் எண்ணியதில் தவறு இல்லை.

மேனகாவை மணந்த பிறகு சஞ்சய் பஞ்சாபிகள் அத்தனை பேருடைய அபிமான மாப்பிள்ளையாகி விட்டார். மெல்ல மெல்ல அவருடைய அபிமானத்தைப் பெற்று பலர் அந்தரங்க ஆலோசகர்களாயினர். இளைஞர்களாக இருந்த காங்கிரஸ் உறுப்பினர்கள், தொழிலதிபர்கள் முதலானோர் சஞ்சயை நாடி வந்தனர். கிழடுகளை அனுப்பிவிட்டுக் கட்சியிலும் ஆட்சியிலும் இளைஞர்கள் ஆதிக்கம் பெற வேண்டும் என்று சஞ்சயின் மனத்தில் எண்ணம் வளரலாயிற்று.

அதுவரை இந்திரா காந்தியின் உள் வட்டத்தில் பெரும்பாலும் காஷ்மீரிகளே இருந்தனர். பி.என். ஹக்ஸர், டிக்கி கவுல், உளவுத் துறைத் தலைவர் காவ் எல்லோரும் காஷ்மீரிகளே. மேனகா சஞ்சய் மூலம் பஞ்சாபிகள் அந்தரங்க ஆலோசனையாளராக இடம் பிடிக்கலாயினர். ஒரே ஆண்டில் முக்கிய அதிகாரிகள் புதிதாகப் பதவி ஏற்றும் கண்டவர்கள் எல்லாம் சஞ்சய் காந்திக்கு வேண்டியவர்களான பஞ்சாபியர்களாக நியமனம் பெற்றார்கள். ஹரியானா முதல்வர் பன்சிலால் மத்திய பாதுகாப்பு மந்திரியாகப் பதவி உயர்வு பெற்றார்.

''காஷ்மீரி மாஃபியா போய் பஞ்சாபி மாஃபியா வந்தாயிற்று'' என்று டில்லியில் பேச்சு அடிபட்டது.

இதே கால கட்டத்தில்தான் இந்திரா தன் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சஞ்சயுடன் ஆலோசிப்பது வழக்கமாயிற்று. சஞ்சயின் அபிப்பிராயங்கள் அனைத்தும் கூர்மையாக, தெளிவாக இருப்பது இந்திராவுக்குப் பிடித்திருந்தது. சஞ்சய் போன்ற இளைஞர்கள் நேரடியாகக் கட்சி அரசியலில் புக வேண்டிய தருணம் வந்து விட்டது என்று அவரும் நினைத்தார்.

(தொடரும்)



## நட்சத்திர வடிவம் பரிசுத் திட்டம்–11 (ஜாக்பாட்) போட்டி முடிவு

தீபாவின் முழு உருவத்தையும் சரியான படி ஒட்டி அனுப்பியவர்கள் நால்வர் மட்டுமே.

(1) பி. அறிவாகன மந்திரி
85, வெல்லம் சாமியார் தெரு,
சிவகாசி-626123.

(2) டி. பி. ரவீந்திரநாத்,
39, 9வது குறுக்குத் தெரு,
குமரப்ப நகர், காட்பாடி,
வ. ஆ. மா. வ. 632007.

(3) எஸ். ராஜாமுத்து,
பிளாக் 7 ரூம் 11,
டயிற்சியாளர் ஹாஸ்டல்,
பொக்காரோ எஃகு ஆலை,
பொக்காரோ எஃகு நகர், பீகார்
827001.

(4) என். ரவிச்சந்திரன்,
மே. பா. பி. எஸ். ராமமூர்த்தி,
கோவிந்தராஜபுரம் காலனி,
கூடுவாஞ்சேரி,
செங்கல்பட்டு மா. வ.

ஜாக்பாட்டுக்குச் சேர்ந்துள்ள ரூ. 1875 இந்நால்வருக்கும் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. தலா ரூ. 468.75 தவிர ராதிகா முதல் லக்ஷ்மி முடிய பத்து போட்டிகளுக்கான பத்துப் புகைப்படங்களும் இந்நால்வருக்கும் அனுப்பப்படுகின்றன.

புகைப்படம்: மோஹனலிஸா

# “அறிவு கெட்ட பாப்பாரப் பயலே.....!”

● ‘வாழ்க வீரமணி’ என்ற தங்கள் தலையங்கம் கண்டேன். நெல்லையில் திரு வீரமணி நடத்திய பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு மாநாடு, முற்படுத்தப்பட்ட வகுப்பினரை விழித்தெழச் செய்துவிட்டது. அவர்கள் ஒரே வார கால அவகாசத்தில் மாபெரும் (உண்மையிலேயே மாபெரும்) ஊர்வலம் ஒன்றை நடத்தித் தங்கள் ஒற்றுமையைக் காட்டிவிட்டனர்.

திருநெல்வேலி — பாரத்வாஜன்

● பிளஸ் டூ தேர்வில் முதல் வகுப்பில் வெற்றி பெற்ற ஆயிரக்கணக்கான பிராமண இளைஞர்கள், சாதாரண கலை, விஞ்ஞானக் கல்லூரிகளில் கூட சேர இடம் கிடைக்காமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். 95 சதவீத பிராமணர்கள் பரம ஏழைகள். மொத்த ஜனத் தொகையில் மூன்று சதவிகிதமே உள்ள பிராமணர்கள், மற்றவர்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதாகக் கூறுவது என்ன நியாயம்?

விழுப்புரம் — ஆர். மார்க்கண்டன்

● வார்த்தைக்கு வார்த்தை — வரிக்கு வரி — முகமது அலியின் கும்மாங்குத்து கெட்டது போங்கள். அனைவரும் மனித ஜாதிதான். அவர்களுக்குள் வேறுபாடு இல்லை என்ற உணர்வுடன் தாங்கள் தலையங்கம் தீட்டியிருப்பது வீரமணி மட்டும் அல்ல, ஒவ்வொரு இந்தியனும் படிக்க வேண்டிய ஒன்றாகும்.

ஸ்ரீரங்கம் — என். ஸ்ரீதர்

## வட்டமேஜை

● செம்பிய ராஜேந்திர பாப்பார...... பையனுக்கு: வீரமணி தலையங்கத்தில் ‘‘நாமெல்லாம் ஒரே ஜாதி என்றல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறோம்’’ என்று ரொம்ப யோக்கியனைப் போல முற்போக்கு வேஷம் போட்டிருக்கிறாயே. அந்த நினைப்பு இருந்தால் கருணாநிதி அர்ச்சகர் சட்டம் கொண்டு வந்தபோது சில பாப்பார.... பசங்க சுப்ரீம் கோர்ட் வரை சென்று அதைக் கெடுத்தார்களே அப்பொழுது நாமெல்லாம் ஒரே ஜாதி என்று அர்ச்சகர் சட்டத்தை ஆதரித்து ஏன் எழுதவில்லை? மத விஷயத்தில் நாங்கள் உயர்ந்த ஜாதி, சலுகைகள் பெறுவதற்கு மட்டும் நாங்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் என்று நியாயம் பேசுவது பாப்பார..... பசங்க புத்தி.

ஊர் பேரில்லாத — அனுமதேயம்

● விண்வெளியில் ராக்கெட் செலுத்தும் திறமை படைத்த விஞ்ஞானிகளைப் பெற்றிருக்கும் இந்திய நாடு வீரமணி போன்ற விதண்டாவாதிகளையும் பெற்றிருக்கிறது என்று நினைக்கவே வேதனையாய் இருக்கிறது.

கல்பாக்கம் — சி.பி. ராஜு

● தலையங்கத்திலும் கார்ட்டூனிலும் ‘வீரமணி’ பாவம், மாட்டிக் கொண்டு அவஸ்தைப் பட்டிருக்கிறார். ‘மிருக ஜாதியாகி விடுவோம்’ என்ற வரியில் இயல்பான எல்லையையும் மீறி உங்கள் மனக் குமுறல் நன்கு புலப்படவே செய்கிறது. எதிலும் அனர்த்தம் விளைவிப்பவர்களுக்குப் புத்தி புகட்டும் அர்த்தமுள்ள தலையங்கம்.

ஸ்ரீரங்கம் — ஸ்ரீனிவாசன்

● அறிவு கெட்ட .... பயலே, வீரமணி பற்றி எழுத உனக்கேதடா யோக்கியதை.... இத்யாதி, இத்யாதி.

வீரமணி தம்பி சூரமணி

● சரியான நேரத்தில் துணிவோடு எழுதப்பட்ட தலையங்கம். பாராட்டுக்கள். வீரமணியின் பிராமண ஆதிக்க எதிர்ப்பு மகாநாடு, அவசியமில்லாத ஒன்று. அவரது சுயவிளம்பரத்துக்குப் பயன்படுவதோடு ஜாதி வெறியையும் தான் கிளப்பும் இந்தப் பிராமண எதிர்ப்பு மாநாடு.

கோடங்கிபாளையம் — ஆசிர் எம். அல்போன்ஸ்

● திராவிடர் கழகம் நடத்திய பார்ப்பனர் ஆதிக்க மாநாட்டை எதிர்க்கும் பார்ப்பனர்கள், சகஜீவன்ராம் அவர்கள் திறந்து வைத்த சம்பூர்ணானந்த் சிலை தீட்டாகிவிட்டது என்று கங்காதேவியின் நீரைக் கொண்டு ‘சம்புரோக்ஷணம்’ செய்தபோது வாய்மூடிக் கிடந்தது ஏன்?

பார்ப்பனரல்லாதாருள்ளும் உயர் சாதி என்று கருதப்படுவோரையும் திராவிடர் கழகம் எதிர்ப்பதாகக் கரடி விட்டுள்ளீர்கள். அது வழக்கமாக நீங்கள் மேற்கொள்ளும் பிரித்தாளும் சூழ்ச்சியே! வீடண, சுக்ரீவ, பிரகலாதன்கள் உங்களுக்கு எப்படியும் கிடைப்பர்.

பெங்களூர் — முத்துகுமார்

● பிராமண ஆதிக்கம் மட்டுமின்றி மற்ற எல்லா முற்பட்ட வகுப்பினர் ஆதிக்கத்தையும் ஒழிக்க வேண்டும் எனக் கருதுவதுபோல் முதல்வர் முற்பட்ட வகுப்பினராகக் கருதப்படுவோருக்குக் கல்லூரியில் இடங்களை மிகவும் குறைத்துச் சட்டமியற்றி விட்டார். இதனால் படித்திருந்தும் அதிக மார்க்குகள் வாங்கியும் எந்தக் கல்லூரியிலும் இடம் கிடைக்காமல் இளைஞர்கள் பலர் அலைகிறார்கள். அதிக மார்க்குகள் வாங்கியுள்ள அவர்களது அறிவானது மேற்கொண்டு எந்த விதமான படிப்பும் இல்லாமல் பாழாவதால் யாருக்கு லாபம்? நிச்சயமாக இது ஒரு முன்னேறி வரும் தேசத்துக்கு நஷ்டமே. இது இந்தியப் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாகவும் இருக்கிறது.

சென்னை-1 — எஸ்.எஸ். மணியன்

“தூரளகம்'' மூன்றாவது மாடியில் எங்கள் காரியாலயம்.

காரியாலய வேலையைத் தவிர மற்ற எல்லா வேலைகளுக்கும் ரொம்பச் சௌகரியம்.

கட்டிடத்தை விட்டுக் கீழே இறங்கினால் போதும். காய்கறி, பழம், பூ, பத்திரிகைகள், துணிமணிகள், மருந்துகள் எல்லாம் பிளாட்பாரத்திலும் சுற்று முற்றுமுள்ள கடைகளிலும் கிடைக்கும்.

எங்கள் காரியாலயச் சிப்பந்திகள் பலரையும் சிற்றுண்டி இடைவேளையின்போதுமட்டுமல்லாமல், காரியாலய நேரங்களிலும் கூடக் கட்டிடத்தைச் சுற்றியுள்ள பிளாட்பாரக் கடைகளில் காணலாம். இதில் பெண் சிப்பந்திகளும் அடக்கம். வளையல், ரிப்பன், கொண்டைஊசி என்று அவர்களுக்குத் தேவையான சாமான்களை வாங்குவதில் எவ்வளவு அதிகமான நேரத்தைச் செலவிட முடியுமோ அவ்வளவு செலவிடுவார்கள். ஆண் சிப்பந்திகளை மிரட்டுவது போல் இவர்களை அதிகாரிகள் மிரட்ட முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

சில பிழைக்கத் தெரியாத அப்பாவிகள் மட்டும் ஆபீஸ் நேரம் ஆபீஸ் வேலை செய்வதற்கு மட்டுமே என்று நினைத்துக்கொண்டு காரியாலய நேரம் முடிந்த பிறகு மாலையில் தான் தங்கள் வியாபாரங்களை வைத்துக் கொள்வார்கள்.

பிளாட்பாரத்தில் பூவிற்கும் பெண்கள் நிறைய இருந்தார்கள். அவர்களுக்கு நல்ல வியாபாரம் நடந்து வந்தது.

எங்கள் காரியாலயச் சிப்பந்திகளிலேயே பலர் மல்லிகைப் பூ வாங்கிக்கொண்டு போவதைத் தினமும் பார்த்துக் கொண்டே போவேன்.

ஆனால் பூ வாங்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியதே இல்லை. அதற்கு ஒரு காரணமும் இருக்கவில்லை. ஏதோ நமக்குச் சம்பந்தமில்லாத ஒரு பொருள் என்பது போல நடந்து போய்க் கொண்டே இருப்பேன்.

“வா சாமி, மல்லிப் பூ முழம் முப்பதுகாசு'' என்று சில நாட்கள் என்னை அழைத்துப் பார்த்த அந்தப் பெண்கள் பிறகு என் முகத்தைக் கண்டதுமே தங்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டு வேறுகிராக்கிகளைத் தேடத் தொடங்கி விடுவார்கள்.

“இது ஒரு ரசனை இல்லாத ஜடம் போல் இருக்கிறது'' என்றோ, “பெண்டாட்டி, பிள்ளை இல்லாத ஒண்டிக்கட்டை போலிருக்கிறது'' என்றோ அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கலாம்.

அந்தப் பிளாட்பாரத்தில் எவ்வளவோ வியாபாரம் நான் செய்துதான் இருக்கிறேன். பத்திரிகைகள் வாங்கி யிருக்கிறேன். பழம் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். ஆனால் பூ மட்டும் வாங்க வேண்டும் என்று தோன்றியதில்லை.

அந்தப் பிளாட்பாரத்திலிருந்து என்று மட்டும் இல்லை; எங்கிருந்துமே நான் என்றைக்குமே பூ வாங்கிக் கொண்டு போனதில்லை.

பூக்காரி வழக்கமாக வீட்டுக்கு வருகிறாள். என் மனைவி அவளிடமிருந்து வாடிக்கையாகப் பூ வாங்குகிறாள். மாசக் கணக்கு தான். இது எனக்குத் தெரியும். அப்புறம் நான் வேறு எதற்குத் தனியாக வாங்கிக் கொண்டு போக வேண்டும்?

பூ என்று மட்டும் இல்லை. வீட்டுக்கு வேண்டிய எதையுமே வாங்கிக் கொண்டு போகிற பழக்கம் என்னிடம் இருக்கவில்லை. காய்கறி மளிகை சாமான் முதலியவை எல்லாம் என் மனைவி ராஜேஸ்வரியின் பொறுப்பு. எனக்கு இவைகளெல்லாம் பார்த்து வாங்கத் தெரியாது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

கேட்பவர்கள் சிரிக்கலாம். ஆனால் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். எனக்கு மல்லிகைப் பூவுக்கும் முல்லைப் பூவுக்கும் உள்ள வித்தியாசம் கூடச் சரியாகத் தெரியாது.

பூ விஷயம் இப்படியென்றும் மற்றவைகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

பூக்காரிகள்என்னை அலட்சியம் செய்ய



# ரெண்டு முழம் மல்லிகைப் பூ

கோமா ஆனந்ததீர்த்தன்



அவன்: "எங்க கட்சி சார்பா நேற்று நடை பெற்ற பேரணி எப்படி...?"

இவன்: "ஒரு கலாட்டா ஒரு சோடாப்புட்டி வீச்சு ஒண்ணுமே யில்லாத அது ஒரு பேரணியாடா ...சரியான போர் அணி!"

• உ. ராஜாஜி

ஆரம்பித்ததிலிருந்து எனக்கு ஆத்திரம் ஏற்பட்டது. ஆனால் அதைத் தீர்த்து கொள்வதற்கு என்ன வழி? அவர்களை யாரிடமிருந்தாவது நானும் ரெண்டு முழம் மல்லிகைப் பூ வாங்கி, மற்றவர்களைப் போல் நானும் ஒரு சராசரி மனுஷன்தான் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஊட்டுவதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரிய வில்லை.

இருந்தாலும் ஒரு தயக்கம். நான் பூ வாங்குவதை யாராவது பார்த்தால் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்களோ என்ற கூச்சம், பயம். இவ்வளவு நாளும் வாங்காதவன் இப்போது திடீரென்று பூ வாங்க ஆரம்பித்து விட்டானே என்ன காரணம் என்று யூகம் செய்து எதையாவது கட்டிவிட்டார்களென்றால்?

கணேசனைப் பற்றி நானே அப்படித் தானே நினைத்துக் கொண்டிருந்தேன். அவன் என் செக்‌ஷனில்தான் வேலை செய்து வந்தான். என் வயசுதான். அதாவது முப்பத் தெட்டு. ஆனால் இன்னும் கட்டைப் பிரம்மச்சாரி. அதுமட்டுமல்ல, தனிக் கட்டை. திருவல்லிக்கேணியில் ஒரு சந்தில் நாலு குடித் தனங்கள் இருக்கும் ஒரு வீட்டில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு வசித்து வருகிறான். ஹோட்டலில்தான் சாப்பாடு. இவன் தினமும் யாருக்காகப் பூ வாங்கிக் கொண்டு போகிறான்?

ஒரு நாள் நாசூக்காக என் சந்தேகத்தை அவனிடம் வெளியிட்டு விட்டேன். அவன் சிரித்தபடி பதில் சொல்லாமல் இருந்துவிட்டான். ஆனால் அன்று மாலையே என்னை வற்புறுத்தித் தன் அறைக்கு அழைத்துச் சென்றான். அவன் அறையை ஒரு நோட்டம் விட்ட எனக்கு அவனைப் பற்றித் தவறாக நினைத்து விட்டோமே என்ற வெட்கம் ஏற் பட்டுவிட்டது.

சுவரில் ராமகிருஷ்ணர், விவேகானந்தர், சாரதாமணி அம்மை, ஆஞ்சநேயர், விநாயகர் படங்கள் மாட்டியிருந்தன. எல்லாப் படங்களுக்கும் முதல் நாள் அவன் போட்டிருந்த மல்லிகை மாலை வாடிப்போய்க் காற்றில் அசைந்து கொண்டிருந்தது.

என்னை இருக்கச் சொல்லிவிட்டு அவன் குளித்துவிட்டு வந்தான். நான் அவன் மேஜைமேல் கிடந்த புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தேன். எல்லாம் ராமகிருஷ்ண மடத்தாரால் பிரசுரிக்கப்பட்ட மத, தத்துவ புத்தகங்கள்.

குளித்துவிட்டு வந்து படங்களுக்கெல்லாம் புது மாலையைப் போட்டான். ஊதுவத்தி ஏற்றி வைத்தான். பத்து நிமிடங்கள் தியானம் செய்துவிட்டு என்னுடன் பேச வந்தான்.

"நான் காப்பி சாப்பிடுவதில்லை. உங்களுக்குத் தெரியும். உங்களுக்குக் காப்பி வரவழைக்கட்டுமா?" என்று கேட்டான்.

"வேண்டாம்" என்று கூறிவிட்டு அவனைப் பற்றித் தவறாக நினைத்ததற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

"பரவாயில்லை. நீங்கள் அப்படி நினைத்ததில் தவறொன்றுமில்லை. அது சகஜம். ஆனால் appearances are deceptive என்பதை நாம் மறந்து விடுகிறோம். என்னைப் பற்றி இப்படி நினைத்தீர்களே நம்ப ரங்காச்சாரியைப் பற்றி உங்களுக்கு விஷயம் தெரியுமோ?" என்று கேட்டான்.

"தெரியாதே! அவரும் தினமும் பூ வாங்குவதைப் பார்த்திருக்கிறேன்."

"அவரைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. ஆனால் நீங்களே விசாரித்துப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டான். நான் எவ்வளவு வற்புறுத்தியும் அவன் சொல்லவில்லை.

நான் விசாரித்து அறிந்த உண்மை என்னைத் திடுக்கிட வைத்தது.

ஐம்பது வயதைத் தாண்டியவரும் கல்யாண வயதை அடைந்துள்ள மூன்று பெண்களை உடையவரும், லக்ஷ்மீகரமான களையும் ஆரோக்கியமும் வாய்ந்த மனைவியைப் பெற்றிருப்பவருமான ரங்காச்சாரி தங்கச்சாலைத் தெருவில் ஒரு இருபத்திரண்டு வயதுப் பெண்ணை ஆசைநாயகியாக வைத்துக் கொண்டிருப்பதாகவும், தினமும் அவர் மல்லிகைப்பூ வாங்கிக் கொண்டு போவது அவளுக்காகத் தான் என்பதையும் அறிந்து கொண்டேன்.

நினைத்துப் பார்க்கும்போது கணேசன், ரங்காச்சாரி இருவருடைய வாழ்க்கையுமே தவறான பாதையில் செல்வதாகத்தான் எனக்குத் தோன்றியது.

அன்றைக்கு எப்படியோ ஒரு பூக்காரியின் அழைப்பை மீற முடியாமல் என் கால்கள் தயங்கி, திசை திரும்பி, அவளிடம் என்னை இழுத்துச் சென்றுவிட்டன.

"எவ்வளவு முழம் கொடுக்கட்டும் சாமி" என்று கேட்டாள்.

"நான் சாமி என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டேன். பூ எவ்வளவு வேண்டும் என்பதைச் சொல்லாமல்.

அவள் நாணினாள்.

"சாமி இல்லையா நீ? மூஞ்சியைப் பார்த்தா அப்படித் தெரிஞ்சுது. நாலு முழம் கொடுக் கட்டா?" என்று முழம் போட ஆரம்பித் தாள்.

வாழை இலையில் அவள் சுற்றிக் கொடுத்த பூவை என் ப்ரீஃப் கேஸில் எடுத்து வைத்துக் கொண்டு அவளுக்குக் காசைக் கொடுத்தேன்.

''தினமும் எங்கிட்டயே வாங்கு சார்!'' என்றான்.

'சாமி'யை விட்டு விட்டு 'சாரை'ப் பிடித்துக்கொண்ட அவனைப் பார்த்துச் சிரித்தேன்.

''நான் சாமிதான். ஆனால் நீ என்னை சார்னே கூப்பிடு. சாமி வேண்டாம். எனக்கு அது பிடிக்காது'' என்று கூறிவிட்டு நகர்ந்தேன்.

ஏதோ குற்றம் செய்துவிட்டவனைப் போல என் மனத்தில் ஓர் உறுத்தல்.

பஸ் மெரினா சாலையில் ஓடிக் கொண்டிருந்தது. என் மனத்திலோ ஒரு நெருடல்.

பூவை வீட்டுக்குக் கொண்டு போகலாமா? அல்லது பஸ் ஸ்டாண்டிலிருந்து நேரே கற்பகாம்பாள் கோவிலுக்குப் போய் அம்பாளுக்குச் சாத்தும்படி கொடுத்துவிட்டுப் போய்விடலாமா என்று தோன்றியது.

அதற்குக் காரணம் இருந்தது.

கல்யாணமாகி ஆறாவது மாதம். ஒரு நாள் பாதாம் அல்வா வாங்கிக்கொண்டு போனேன். ஆசை ஆசையாகத்தான் வாங்கிக் கொண்டு போனேன்.

வீட்டை அடைந்ததும் ராஜி படுக்கையில் போர்த்துக் கொண்டு முனகிக்கொண்டு படுத்திருந்ததைப் பார்த்தேன். தொட்டுப் பார்த்தால் கை சுட்டது.

104 டிகிரி ஜுரம் என்று தர்மா மீட்டர் காட்டியது. அவள் ஜுரமாகப் படுத்திருக்கும்போது எனக்கும் அதைச் சாப்பிடப் பிடிக்கவில்லை. அவளுக்குக் கொடுக்காமல் வீட்டில் உள்ள வேறு யாருக்கும் அதைக் கொடுக்கவும் எனக்குப் பிடிக்கவில்லை.

இரண்டு நாள் கழித்து ராஜிக்குத் தேவலையான பிறகு அதைக் கொடுக்கலாம் என்றிருந்தேன்.

ஆனால் இரண்டு நாளில் அவள் ஜுரம் இறங்கவில்லை. இருபத்திரண்டு நாட்கள் ஆயிற்று அவள் காய்ச்சல் குறைந்து நார்மலுக்கு வர. டைபாய்ட்.

வாங்கின மூன்றாவது நாள் அந்த பாதாம் அல்வாவைக் குளத்தங்கரையில் ஒரு பிச்சைக்காரனுக்குக் கொடுத்து விட்டேன். மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டான்.

அந்தச் சம்பவம் என் மனத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. நான் வாங்கிக் கொடுத்து ராஜி அனுபவிப்பதற்கு ராசியில்லை என்ற ஓர் எண்ணம் என் அடி மனத்தில் உறைந்து விட்டது. இப்போது கூட நான் வீட்டை அடையும் போது ராஜி 'ஸ்டவ்' ஆக்ஸிடெண்டில் காயமுற்று உடம்பெல்லாம் தீப்புண்களுடன் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருப்பாளோ?' என்று விபரீதக் கற்பனை!

வீட்டை அடைந்து வாசலில் இருந்த அழைப்பு மணியை அடித்தேன்.

ராஜியே வந்து கதவைத் திறந்தாள். முழுசாக முழு மதியம் போல் வந்தாள்.

என் மனத்தில் பெரிய நிம்மதி. சந்தோஷம். ''எங்கே வீட்டில் ஒருத்தரையும் காணவில்லை?'' என்று கேட்டேன்.

''உங்க மன்னிக்கு உடம்பு சரியில்லையாம். உங்கண்ணா ஃபோன் பண்ணினார். உங்கம்மா அங்கே போயிருக்கா. நாளைக்கு, நாளன்னிக்கு சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைதானேன்னு ஸ்கூல் லீவாச்சேன்னு குழந்தைகளையும் கூட்டிண்டு போயிருக்கார்'' என்றாள்.

''அப்பா?''

''ஏதோ மீட்டிங்காம். போயிருக்கார்.''

''அப்போ இன்னிக்கு வெள்ளிக் கிழமையா?'' என்றேன் அப்பொழுதுதான் ஞாபகம் வந்தவன் போல்.

''ஏன்? அதுக்கென்ன?''

''ஒண்ணுமில்லே. என்னவோ ஞாபகம்; இன்னிக்கு வியாழக் கிழமைன்னே நினைச்சுண்டிருந்தேன்.''

''வெள்ளிக் கிழமையும் அதுவுமா இன்னிக்குப் பூக்காரி வரல்லே. நீங்க எங்கேயும் வெளியே போகல்லியே? நான் பிள்ளையார் கோவில் வரைக்கும் போய் பூ வாங்கிண்டு வந்துடறேன்.''

சரியான சந்தர்ப்பம்.

''வேண்டாம் ராஜி. பூ வாங்க வேண்டாம்'' என்றேன்.

''ஏன்? என்ன இது அச்சானியமாப் பேசிண்டு?'' என்று ராஜி என் முகத்தை ஆராய்ந்தாள்.

நான் அவளுக்குப் பதில் ஒன்றும் கூறாமல் ப்ரீஃப் கேஸைத் திறந்து பூச்செண்டை எடுத்து அவள் கையில் கொடுத்தேன். மலர் போலவே அவள் முகம் மலர்ந்தது.

''என்ன இது? அதிசயமா இருக்கே?'' என்று கேட்டபடியே வாங்கிப் பிரித்தாள்.

''எவ்வளவு? நாலு முழமா? அடடா, அம்மாவும் இல்லே, குழந்தைகளும் இல்லையே. இவ்வளவு பூவை நா ஒருத்தியேவா வெச்சுக்கிறது?'' என்று கூறி அதை இரண்டு துண்டுகளாக்கினாள்.

ஒரு துண்டை ஹாலில் மாட்டியிருந்த லக்ஷ்மியின் படத்துக்குச் சூட்டிவிட்டு வந்தாள். மிகுதியைத் தன் தலையில் சூட்டிக் கொண்டாள்.

அன்று இரவு படுக்கை அறையில் ராஜியைப் பின்னாலிருந்து அணைத்தபடி என் முகத்தை அவள் மலர் சூடிய கூந்தலிலே புதைத்துக் கொண்டபோது சுவர்க்கம் என்பது இதுதானோ என்று தோன்றியது.

''பூக்காரி, நாளையிலிருந்து நான் உனக்கு வாடிக்கைக்காரன்'' என்று எனக்குள்ளாகவே தீர்மானித்துக் கொண்டேன்.

தயாரிப்பாளர்: ஏங்க இந்த நாயைப் படத்திலேந்து நீக்கிவிட வேண்டும்னு சொல்றீங்க?
டைரக்டர்: இரண்டு படத்திலே நடித்தவுடன் ரொம்ப திமிர் வந்துவிட்டது. இன்று நான் வரும்போது கால் மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறது!

- சந்திரசேகர்






ஜெயலலிதா

# உறவின் கைதிகள்

8

I have spread my dreams under your feet;
Tread softly because you tread on my
dreams.
— William Butler Yeats 1865-1939

உஷாவோடு பேசிய பிறகு ராஜீவ் ஸ்டுடியோவுக்குப் புறப்பட்டுப் போய்விட்டான். அன்று முழுவதும் அவன் கவனம் வேலையில் இல்லை. ராஜீவ் அபார ஞாபக சக்தியுடையவன். சாதாரணமாக எவ்வளவு நீளமான வசனம் கொடுத்தாலும் ஒரு வார்த்தை கூடப் பிசகாமல் ஒரே 'டேக்'கில் சரியாகப் பேசி முடிப்பவன். இன்று, ஓரிரு வாக்கியங்கள் மட்டுமே கொண்ட சுருக்கமான வசனங்களைக் கூட ஞாபகம் வைத்துக் கொள்ள முடியாமல் தடுமாறினான்.

இன்று படம் பிடிக்கப்பட்டுக் கொண்டிருந்த காட்சியில் ஒரு புதிய நடிகை அவனுக்குத் தங்கையாக நடித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு வயது 19, 20க்குள் இருக்கும். இதுவே அவள் தோன்றும் முதல் தமிழ்ப் படம். இதுவரை மலையாள, கன்னடத் திரைப் படங்களில் சில்லறைப் பாத்திரங்களில் தோன்றியிருந்தாள். அவளைப் பொறுத்த வரையில் ஒரு வண்ணத் தமிழ்ப் படத்தில், அதிலும் ராஜீவ்குமாரோடு நடிக்கும் சந்தர்ப்பம் என்றால், இதுவே அவளது திரை வாழ்க்கையில் பெரிய திருப்பு முனையாக அமையப் போவதாகக் கனவுகள் கண்டு கொண்டிருந்தாள்.

அவள் பெயர் மாலா. கூடவே அவளுடைய தாயும் இருந்தாள். இருவரும் ராஜீவைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்தார்கள். ராஜீவினுடைய கண்ணியமான இமேஜ் எல்லாம் வெளி உலகத்தோடு சரி. சினிமா வட்டாரத்தில் எந்த ரகசியமும் கிடையாது. இருக்கவும் முடியாது. அவனுடைய சபல புத்தி, பழக்க வழக்கங்கள், இங்கே பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

இந்தத் தாயும் மகளும் படப் பிடிப்புக்கு வரும் முன்பே பேசிக் கொண்டிருந்தார்கள். எப்படியாவது ராஜீவுடைய கவனத்தை ஈர்த்து, அவனை வலைக்குள்ளே போட்டுக் கொள்ள முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று. அவனோடு உறவு ஏற்பட்டாலும் அதிக காலம் நீடிக்காது என்பது அவர்களுக்குத் தெரியும். அதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை, விரும்பவும் இல்லை. இந்தப் பெண்ணை அவனுக்குப் பிடித்துவிட்டால் குறைந்தபட்சம் நான்கு ஐந்து படங்களிலாவது அவளைச் சிபாரிசு செய்ய மாட்டானா! அது மட்டும் நடந்து விட்டால், திரை உலகில் நன்றாகக் கால் ஊன்றி விடலாமே. சில நல்ல வேடங்களுக்கு ராஜீவ் இவளைச் சிபாரிசு செய்கிறார் என்ற விஷயம் தெரிந்தவுடனேயே மற்ற எத்தனையோ தயாரிப்பாளர்கள் அவளை ஒப்பந்தம் செய்ய ஆட்டு மந்தை மாதிரி போட்டி போட்டுக் கொண்டு வர மாட்டார்களா? அதற்குப் பிறகு ராஜீவுடைய தயவு இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? வேறு எத்தனையோ படங்கள் கிடைக்கும், பணம் வந்து குவியும், அவள் பெரிய நட்சத்திரம் ஆகிவிடலாம்!

இப்படி எண்ணற்ற ஆசைக் கனவுகளோடு வந்திருந்த தாய்க்கும் மகளுக்கும் பெருத்த ஏமாற்றம்தான் மிஞ்சியது. ராஜீவ் செட்டுக்குள் பிரவேசித்த உடன், தாய் மகளைத் தூண்டி விட்டாள். ''போய் வணக்கம் சொல்லுமா!''

ராஜீவுக்கு முன்னால் போய் நின்று ''வணக்கம் அண்ணே!'' என்றாள் மாலா.

கடுப்போடு ராஜீவ் அவளை முறைத்துப் பார்த்தான். பாவம் மாலா! அவளிடம் ராஜீவைப் பற்றி இத்தனை விவரங்கள் கூறிய நண்பர்கள், ''அண்ணே'' என்று அழைத்தால் அவனுக்கு அறவே பிடிக்காது என்பதைச் சொல்ல மறந்து விட்டனர்.



வேண்டா வெறுப்புடன் ''வணக்கம்'' என்று கூறிவிட்டு ராஜீவ் ஷாட்டுக்குப் போய் விட்டான்.

ஷாட் முடிந்ததும், ராஜீவ் செட்டில் ஒரு புறமாகத் தனது, சொந்த நாற்காலியில், வீட்டிலிருந்து கொண்டு வந்து வைக்கப்பட்ட ஏர்-கூலருக்கு முன்னுல் போய் அமர்ந்தான்.

மாலாவுடைய அம்மா அவளை முழங் கையால் ஒரு குத்துக் குத்தினுள். ''போய் அவர் பக்கத்தில் உட்காருடீ! ஏதாவது பேசு!'' என்ருள்.

''வேண்டாம்மா. பயமா இருக்கு. வணக்கம் சொன்னபோதே என்னை முறைச்சுப் பார்த்தார்!'' என்ருள் மாலா.

''இந்தா, பயம் அது இதுன்னு பல்லே ஒடைப்பேன். போய்ப் பேசுடி போ!'' மாலாவை ஒரு தள்ளுத் தள்ளினுள் அம்மா.

தயங்கியவாறே மாலா ராஜீவ் அருகில் சென்ருள். அவன் நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டபடி கண்களை மூடிக் கொண்டிருந்தான். அவன் எண்ணங்களில் உஷா நிறைந்திருந்தாள்.

அவன் பக்கத்தில் ஒரு நாற்காலி இருந்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மாலா அதில் உட்கார்ந்தாள்.

நாற்காலி சற்று நகர்ந்த சத்தம் கேட்கவே ராஜீவ் கண்களைத் திறந்து பார்த்தான். ஸ்ரீ ராமபிரான் சீதாபிராட்டியை நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் சூர்ப்பனகை தோன்றிய மாதிரி அவன் உஷாவைப் பற்றி நினைக்கையில் மாலா அவன் கண்களுக்குச் சூர்ப் பனகையாகக் காட்சி அளித் தாள்.

கோபமாக அவளை விறைத்துப் பார்த்தான். திணறிப் போய் என்ன செய்வதென்று புரியாமல் மாலா அசடு வழிய ''இ... ஹி... ஹி'' என்று இளித்தாள். அவள் அங்கே வந்து அமர்ந்ததன் நோக்கம் ராஜீவுக்குப் புரியாமல் இல்லை. ஆனுல், உஷாவைக் கண்டது முதல் இந்த மாதிரிப் பெண்களிடம் அவனுக்கு இப்பொழுது வெறுப்பே தோன்றிற்று. ''உஷா எங்கே, இது எங்கே? உஷாவைப் பார்த்த கண்களோடு இந்த மாதிரி ஜென்மங்களைப் பார்ப்பதே பாவம்!'' என்று நினைத்தான்.

''முத்து!'' தனது அஸிஸ்டெண்டை அழைத்தான்.

''சார்?''

''என் நாற்காலியை வெளியே கொண்டு வா. செட்டுக்கு வெளியே உட்காரப் போறேன்'' என்று ராஜீவ் எரிச்சல் அடைந்த வகையில் எழுந்து வெளியே போய்விட்டான்.

பாவம், மாலா! அவளுக்கு முகத்தில் அடித்த மாதிரி ஆகிவிட்டது. என்ன செய்வது? அவள் வேளை சரியில்லை. இரண்டு வாரங்களுக்கு முன்பு; ராஜீவ் உஷாவைச் சந்திப்பதற்கு முன்பாக மாலாவை ராஜீவ் பார்த்திருந்தால், யார் கண்டார்கள், ஒரு வேளை அவள் விதியே வேறு மாதிரி அமைந்திருக்கலாம்! இந்த மினி நாடகத்தைக் கவனித்த செட்டில் உள்ள மற்றவர்கள் எல்லோரும் மாலாவைப் பார்த்து நகைக்க ஆரம்பித்து விட்டனர். ஏமாற்றத்துடன் போய் மறுபடியும் தனது அம்மா பக்கத்தில் உட்கார்ந்தாள். ''போம்மா! அப்பவே வேண்டாம்னு சொன்னேன். நீ கேட்கலே. என்ன நடந்தது பார்த் தாயா?''

''பார்த்தேன் டீ, பார்த்தேன். நீ ஒரு மக்கு. அவரை எப்படி நைஸ் பண்றதுன்னு உனக்குத் தெரியலே!''

மாலை ஐந்து மணிக்கு உடல் நலம் சரியில்லை என்று கூறிவிட்டு, ராஜீவ் அத்தோடு அன்றைய படப் பிடிப்பை நிறுத்தும் படி செய்துவிட்டான். நேராக வீட்டுக்கு விரைந்தான். சீக்கிரம் மேக்-அப்பைக் கலைத்துக் குளித்துவிட்டுப் படுக்கை அறையில் ஃபோன் அருகில் உட்கார்ந்து அதையே ஆவலோடு பார்த்துக் கொண்டு இருந்தான். ஆறடிக்க இன்னும் ஐந்து நிமிடங்கள் இருக்கும்போதே, ஃபோன் மணி அடித்தது. உடனே ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ?''

''உஷா ஹியர்.''

''உன் ஃப்ரெண்ட் கூடப் பேசினியா?''

''பேசிட்டேன்.''

''என்ன சொன்னுள்?''

''சரின்னு சொல்லிட்டா.''

''உண்மையாகவா?''

''ஆமாம்.''

ராஜீவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

''தட்ஸ் வொண்டர்ஃபுல்!''



''அது சரி, நான் எங்கே உங்களை மீட்பண்றது?''

''உன்னை பிக்-அப் பண்ண சுரேஷை அனுப்பறேன். தப்பா நினைச்சுக்காதே, உஷா. நானே கார் எடுத்துக்கிட்டு வந்து உன்னை அழைச்சுக்கிட்டுவரணும்னு ஆசையா இருக்கு. பட் தட்ஸ் இம்பாஸிபிள். ஏன்னு உனக்குப் புரியுது இல்லையா?''

''புரியுது. சுரேஷை எங்கே அனுப்புவீங்க?''

''நீ சொல்லு. எங்கே எத்தனை மணிக்கு அனுப்பட்டும்?''

''பூர்ணிமாவும் நானும் மார்னிங் ஷோவுக்குப் போறதாச் சொல்லிட்டு சபையர் தியேட்டருக்குப் போறோம். 9-30 மணிக்கு சுரேஷ் தியேட்டருக்கு வந்தால், அங்கிருந்து அவர் கூட உங்க கார்லே வந்துடறேன்.''

''உன் ஃப்ரெண்ட் என்ன செய்வாள்?''

''அவள் படத்தைப் பார்த்துவிட்டு வீட்டுக்குப் போயிடுவாள். என்னை ஏற்கனவே ஹாஸ்டல்லே இறக்கி விட்டதா அவள் வீட்டிலே சொல்லிடுவாள்.''

''மறுபடியும் ஹாஸ்டலுக்கு எப்படிப் போய்ச் சேருவே?''

''சாயங்காலம் ஆறு மணிக்கு முன்னாலே என்னை ஹாஸ்டலிலிருந்து கொஞ்சம் தூரத்திலே இறக்கிவிட சுரேஷ் கிட்டச் சொல்லுங்க. அங்கிருந்து நடந்து போயிடுவேன். யாருக்கும் சந்தேகம் வராது.''

''பூர்ணிமாவுக்குக் கார் இருக்கா?'' என்று கேட்டான் ராஜீவ்.

''இருக்கு. ஏன்?''

''இல்லே, காலையிலே அவளுடைய டிரைவர் நீ வேறே கார்லே போறதைப் பார்த்துட்டா...'' என்று ராஜீவ் எழுப்பிய சந்தேகத்துக்கு உஷா குறுக்கிட்டு விளக்கம் சொன்னாள்.

''அதைப் பத்திக் கவலைப்பட வேண்டாம். பூர்ணிமா தானே டிரைவ் பண்ணுவாள். அவளுக்கு டிரைவிங் லைசென்ஸ் இருக்கு. நாளைக்கு அவளே கார் எடுத்துக்கிட்டு ஹாஸ்டலுக்கு வந்து என்னைத் தியேட்டருக்கு அழைச்சுக்கிட்டுப் போவாள்.''

''இதனாலே உன் ஃப்ரெண்டுக்கு டிரபிள் ஒண்ணும் உண்டாகாதே?'' என்று ராஜீவ் கேட்டான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. அவளுடைய அப்பா — அம்மா அவ மேலே பரிபூர்ண நம்பிக்கை வெச்சிருக்காங்க. எத்தனையோ தடவை அவளும் நானும் இப்படி ஒண்ணா வெளியே போயிருக்கோம். அதனாலே சந்தேகப்பட மாட்டாங்க'' என்றாள் உஷா.

''குட்! ஹலோ, நாளைக்கு உண்மையா நான் உன்னைப் பார்க்கப் போறேன் இல்லையா?''

''யெஸ்... பட்...'' உஷாவின் குரலில் திடீரென்று தடுமாற்றம் தோன்றிற்று.

''வாட் இஸ் த மேட்டர் உஷா?''

இத்தனை நேரம் இருந்த உற்சாகம் மறைந்து, உஷாவின் நெஞ்சுக்குள் பதற்றம் தலைதூக்க ஆரம்பித்தது.

''எ....எனக்கு... என்னவோ... ப...பயமாயிருக்கு!'' அவள் குரலில் லேசான நடுக்கம் உண்டாயிற்று.

''டார்லிங்!'' இதுவரை அவள் கேட்டிராத அந்த இனிய சொல்லால் முதன் முறையாக ராஜீவ் அவளை அழைத்ததும், உஷாவின் உடல் முழுதும் சிலிர்த்துப் போய்விட்டது. அவன் உணர்ச்சி ததும்பும் குரலில் தேங்கிக் கிடந்த ஆவலும், தீவிர விருப்பமும் அவளை மனம் உருகச் செய்தது. ஏதோ விவரிக்க முடியாத உணர்ச்சிகள் அலை அலையாய் அவள் உடல் முழுதும் பாய்ந்தன. கொடி போன்ற அவளை அதிர வைத்தன.

''டார்லிங்! பயப்படாதே. ஐ ப்ராமிஸ் யூ. எவ்ரிதிங் வில் பி ஆல் ரைட். உனக்கு எந்த ஆபத்தும் வராமே நான் பார்த்துக்கறேன்.''



''என்னடா பாரதம் விட்ட ராக்கெட்டைப் பற்றி எல்லோரும் புகழும் போது உங்க செக்ஷன் பசங்க மட்டும் தப்புன்னு முணுமுணுக்கிறாங்க?''

''அவங்க தப்புனு சொல்றது எங்க செக்ஷன் 'பரத்' காகித ராக்கெட்டை 'ரோகிணி' மீது விட்டு, அவள் பிரின்ஸிபாலிடம் புகார் பண்ணியதை!

- பி. ஆர். கண்ணன்

---



விஞ்ஞானிகள் டால்பினுடன் (Dolphin) பேச முடியுமா என்பது பற்றி ஆய்ந்து வருகின்றனர். நீருக்கடியில் ஒலிக் கருவிகளை அமைத்து டால்பினின் 'விசில்' ஒலிகளைப் பதிவு செய்கின்றனர்; பின்னர் மைக்ரோ போன் மூலம் சிறிய ஆங்கில வார்த்தைகளைச் சொல்லுகின்றார்கள். இதற்கு மறுமொழியாக உடனே டால்பின் 'விசில்' ஒலி எழுப்புகின்றது. ஆனால் டால்பின் மனிதனைவிட திறமையாகவும் விரைவாகவும் சிந்தனை செய்து ஒலிகளை எழுப்பு கின்றது. டால்பின் வேகத்திற்கு மனிதனால் ஈடு கொடுக்க முடியவில்லை. எனவே கம்ப்யூட்டர்கள் வைத்து டால்பின் மொழியை ஆராய்ந்து வருகின்றனர்! டால்பின்கள் 32 வகையான ஒலிகளை எழுப்புவதாகக் கண்டு பிடித்துள்ளனர். இந்த 32 விசில் ஒலிகள் மூலம் டால்பின்கள் தங்களுக்குள் பேசிக் கொள்வதாகக் கண்டு பிடித்துள்ளனர். - பி. நாராயணன்

ராஜீவுடைய ஆண்மை நிரம்பிய குரல் அவளைத் தழுவியது; வருடியது; அவளுடைய பயத்தைப் போக்கி நம்பிக்கை யூட்ட முயன்றது. அவளுடைய பதற்றத்தைச் சாந்தப் படுத்தப் பார்த்தது. பலவிதமான உணர்ச்சிகள் மனத்துக்குள் எழ, அவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு சுழன்று வர, குழப்பத்தில் உஷா தத்தளித்தாள். அவள் தலை சுற்றியது.

''ஐ டோண்ட் நோ.. ஐ'ம் அஃப்ரேய்ட்... இப்படி நான் இதுக்கு முன்னாடி எங்கேயும் போனது கிடையாது..'' என்றாள் நடுக்கத்தோடு.

''டார்லிங், ப்ளீஸ் டோன்ட் பீ அஃப் ரேய்ட். பயப்படறதுக்கு ஒண்ணுமே இல்லை. நீ கண்டிப்பா வரணும். வருவே இல்லே? ப்ளீஸ் ஸ்வீட் ஹார்ட், ஐ மஸ்ட் ஸீ யூ! ஸே யூ வில் கம்!'' அவன் குரல் விடாப் பிடியாக அவளைக் கெஞ்சியது, மன்றாடியது. வற்புறுத்தியது. இந்த இனிய தூண்டுதலுக்கு முன்னால் உஷாவுடைய பயமெல்லாம் சூரியனின் பிம்பங்கள் தோன்றியதும் அதிகாலை பனி மறைவதுபோல் மறைந்து விட்டது. அவள் மனத்துள் நடைபெற்ற போராட்டத்தில் ஆசை வென்றுவிட்டது. ''ஐ வில் கம்'' என்று வாக்களித்தாள்.

''தேங்க்யூ மை டார்லிங்!'', ரிஸீவரின் மீது ராஜீவ் ஒரு முத்தமிட்டான். அதற்கு உஷாவிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை.

''உஷா?''

''உம்?''

''காதில் விழுந்ததா?''

''உம்!''

''அதுக்கு பதில் கிடையாதா?''

ஒரு விநாடி தயங்கினாள். பின்பு உஷாவும் அதே மாதிரி ரிஸீவரில் முத்தமிட்டாள்.

''தேங்க் யூ ஸ்வீட் ஹார்ட்! அண்டில் டுமாரோ!''

''அண்டில் டுமாரோ'' அவன் கூறிய அதே வார்த்தைகளை உஷா மறுமொழிந்தாள்.

''ஸ்வீட் ட்ரீம்ஸ்!'' என்றான் ராஜீவ்.

''குட் நைட்.''

''ராத்திரி பூராவும் உன்னைப்பத்தியே கனவு காணப் போகிறேன்!'' என்றான் ராஜீவ் குரல் குழைய.

அவன் வார்த்தைகளின் உள்நோக்கத்தைக் கிரகித்துக் கொள்ளவே உஷாவின் ஒவ்வொரு நரம்பும் துடித்தது.

''குட் நைட்!'' என்று மெதுவாக மீண்டும் ஒருமுறை கூறிவிட்டு ரிசீவரை வைத்து விட்டாள்.

(தொடரும்)

# 1980 அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி

## பிரசுரத்துக்கு ஏற்கப்பட்ட கதைகள்

1. **வெகுமதி**
   – கல்யாண வேங்கடேசன் (என். வேங்கடேசன்)
2. **சிலர் உள்ளே இருக்கிறார்கள்**
   – ''ஜெரா'' (கோவி. ஜெயராமன்)
3. **தாலி இங்கே, தங்கம் எங்கே?**
   – ''அய்க்கண்'' (மு. அய்யாக்கண்ணு)
4. **பழுத்த இலையில் பச்சை நரம்புகள்**
   – விஜேதானந்த் (தே. லட்சுமி நரசிம்மன்)
5. **பொருள் தெரியாத போராட்டங்கள்**
   – சேகர் பாபு (வி. எஸ். சேகர்)
6. **வேர்கள் மட்டும் உறுதியானவை**
   – பிரதிபா ராஜகோபாலன் (கே. ராஜகோபாலன்)
7. **தோப்பில் தனிமரம்**
   – ஊர்மிளா (என். எஸ். சௌந்தரம்)
8. **உஷத் காலத்தில் ஒரு அஸ்தமனம்**
   – வித்யா
9. **கடந்து செல்லும் நினைவுகள்**
   – ''ஷிவா'' (கோமதி சிவகுமார்)
10. **உருவங்கள் மாறலாம், உணர்ச்சிகள் மாறுவதில்லை**
    – ஜெயகதா (எஸ். கே. அமர்நாத்)
11. **வேலை கிடைத்து விடும்!**
    – பட்டுக்கோட்டை ராஜேஸ்வரன்
12. **ஊமைக் காயங்கள்**
    – விஜயலக்ஷ்மி (வி. விஜயா)
13. **விதை நெல்**
    – பூ. சொல் விளங்கும் பெருமாள்
14. **பிரமைகள்**
    – அன்னம் (கே. விசுவநாதன்)
15. **நன்றியின் பரிமாணங்கள்**
    – அய்க்கண் (மு. அய்யாக்கண்ணு)
16. **ராணி டீச்சர்**
    – ஜெயகதா (எஸ். கே. அமர்நாத்)
17. **வேதனையில் ஓர் இதயம்**
    – வி. உஷா
18. **உயர்ந்தவர்கள்**
    – அன்னம் (கே. விசுவநாதன்)
19. **மூட ஜன்மங்கள்**
    – ஜெயரதன் (எஸ். வேங்கடசுப்பிரமணியம்)
20. **உண்மை வனைந்தது**
    – கண்ணபிரான் (க. ஆ. சுப்பிரமணியன்)

# அடைக்கலம்

கருணா மணாளன்

ஆயிரம் ரூபாய் உடனடியாகத் தேவைப் பட்டது.

''நஜ்மா? ஒரு பெரிய தப்புப் பண்ணி விட்டேன்...'' என்று கைகளைப் பிசைந்தபடி முகத்தைத் தொங்கப் போட்டவராகக் கூறினார் நஸீம்.

''என்ன செய்தீங்க?''

''......''

''சொல்லுங்கள், என்ன நடந்தது?''

''முந்தாநாள் வேலை முடியும் தருவாயில் மானேஜர் வந்து, 'நஸீம், ஒரு ஆயிரம் ரூபா கேஷாக் கொடு. இதை சஸ்பென்ஸில் எழுதிக்கொள். நாளை பாங்க் நேரம் முடியறதுக்குள் தந்து விடுகிறேன். இது ஜி.எம். முக்குத் தெரிய வேண்டாம்... நமக்குள் இருக்கட்டும்!' என்று வாங்கிச் சென்றார். சஞ்சய் மரணத்தை யொட்டி இரண்டு தினங்களாக ஆபீஸ் விடுமுறை. நேற்று ஆபீஸ் போனதும் பெரிய அதிர்ச்சி. மானேஜர் ஸ்கூட்டர் விபத்தில் ஸ்பாட்லேயே காலமாகி விட்டார்.''

''அப்புறம்?''


''நான் ஆயிரம் ரூபாய் கொடுத்ததற்கு அவரிடம் எழுத்து மூலமாக எதுவும் வாங்கவில்லை. ஜி. எம்.மிடம் உண்மையைச் சொன்னேன்....''

''இதை முன்பே என்னிடம் சொல்லியிருக்க வேண்டாமா? அவர்தான் வாங்கியிருக்கிறார் என்று என்ன நிச்சயம்? நீ நல்ல பையன் என்று எனக்குத் தெரியும். அதனால், இரண்டு நாள் அவகாசம் தருகிறேன். பணத்தைச் சரிக்கட்டிவிடு. இன்றைய லிமிட்டல்லாக்கு என் அக்கௌண்டிலிருந்து பணம் எடுத்துச் சேர்த்துவிடு' என்று சொல்லியபடி அவர் செக் ஒன்று தந்தார்... இரண்டு தினங்களுக்குள் ஆயிரம் ரூபாய் புரட்டாவிட்டால் நம் மானம் மரியாதை யெல்லாம்... நினைத்துப் பாக்கவே முடியல்லே....'' விழிகளில் நீர் மல்கக் கூறினார்.


இப்படி ஒரு நெருக்கடி ஏற்படாதா, நாம் எல்லாம் சந்தோஷப்பட மாட்டோமா என்று என் மாமனாரும் மாமியாரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். காரணம், வாங்க மாட்டேன் வரதட்சிணைக் கட்சியைச் சேர்ந்தவர் என் கணவர். வரதட்சிணை எதுவும் வாங்காமல் என்னைத் திருமணம் செய்ததால் அவர்களை விட்டு நாங்கள் பிரிந்து, அவர்களின் உதவி — ஒத்தாசை எதுவும் இன்றி மூன்றரை வருடங்களாகத் தனிக் குடித்தனம் செய்து வருவது அவர்களுக்கு ஒரு பெரிய கண்ணெரிச்சல். இப்படி ஒரு செய்தி என்று அவர்கள் கேள்விப்பட்டால் அவர்களுக்குப் பால் பாயசம் சாப்பிட்டது போலிருக்காதா?

நகை நட்டு இருந்தாலாவது பாங்கியில் வைத்துக் கடன் பெறலாம். காலையில் ஆப்பமும், மாலையில் சுக்குத் தண்ணீ வியாபாரமும் செய்து அரை வயிறும் குறை வயிறுமாக உழலும் பிள்ளை குட்டிகளுடன் சங்கடப்படும் என் பெற்றோரிடம் இவ்வளவு பெரிய தொகைக்கு வழி ஏது?

சந்தைப்பேட்டையில் சிராஜ் அஹமது ஒரு தனி ரகம். சிறு வயதில் என்னைத் தொட்டால் மிட்டாய் தரு



எஸ்.வி.வி நூற்றாண்டு



கல்கி ஆகஸ்டு 24 நகைச்சுவை சிறப்பிதழ்

அகஸ்தியன் தயாரிக்கிறார்

வான். முத்தமிட்டால் மிட்டாயுடன் காகம் தருவான். எக்கச்சக்கமாக சிராஜ் அஹமது வீட்டுக்குப் போய்விட்டால் 'பரிசு' தராமல் அனுப்ப மாட்டான்.

சிலேட்டுக்காக புத்தகத்துக்காக பாவாடை தாவணிக்காக சிராஜ் அஹமது பதித்த முத்தங்களுக்குக் கணக்கே கிடையாது. ஏனோ அதில் ஒரு திருப்தி.

வயதுக்கு வந்த பிறகு அங்கே நான் போவதை நிறுத்திக் கொண்டேன்.

உதவி என்று ஒரு காரணத்தை வைத்து சிராஜ் அஹமதிடம் சென்றுவிட்டுப் புனித மாகத் திரும்புவது நிச்சயமாக முடியாத ஒரு காரியம். இந்த இக்கட்டான கட்டத் துக்குக் கைகொடுக்கக் கூடிய அளவு வசதி படைத்த ஒரே ஆள் சிராஜ் அஹமது!

அரும்பாகச் சென்றபோதெல்லாம் மல ராக நினைத்தவன்... இன்று மலராகச் செல்லும்போது....?

ஆயிரம் ரூபாய்!

இதற்காக...? புனிதம் என்று கருதும் கற்புத் தன்மையை இழப்பதா? பணத்தை எப்போதும் பெற்றுக் கொள்ளலாம்..இழந்த கற்பை எங்கிருந்து பெறுதல் முடியும்?

வேறு வழி?

அவமானம் ஏற்படாமல் இருக்க வேண்டு மானால் நாயகனின் நாணயம் சந்தி சிரிக்காமல் இருக்க வேண்டுமானால்... சிராஜ் அஹமதின் வேட்டைக்கு இரையாகியே தீரவேண்டும்!

"நாளை பத்து மணிக்குள் பணம் வேண் டும்... இல்லாவிட்டால் நம்முடைய கௌர வம் காற்றில் பறந்துவிடும்... சே! ஒருவருக்கு உபகாரம் செய்யப் போய் இப்படி மாட்டிக் கொண்டேனே...!" —கணவரின் துடிப்பு!

"சரிசரி கவலையை விடுங்கள்... நான் இன் றைக்குச் சந்தைப்பேட்டைக்குப் போய் யாரிடமாவது கிடைக்கிறதா என்று முயற்சி பண்ணுகிறேன்...."

"உம்" என்றார் கணவர் அரை மனத் தோடு.

**ச**ந்தைப்பேட்டை.

"என்னம்மா. திடுதிப்புன்னு ஒரு கடுதாசி கூடப் போடாமல் இப்படி வந்து நிற்கிறே? மருமகன் கூடத் தகராறு?" தந்தையின் ஆதங்கமான விசாரிப்பிலும் இப்படி ஒரு கேள்விக் குறி.

"தகராறு ஒண்ணும் இல்லேப்பா... அது இருக்கட்டும். சிராஜ் மச்சான் இருக்கா ராப்பா?"

"எந்த சிராஜைக் கேக்குறே? அம்பலம் சிராஜையா?"

"ஆமாம் என்னப்பா அவருக்கு?"

"மக்கத்துக்குப் போயிட்டு வந்திருக்காரு. அவரு இப்போ பெரிய ஹாஜியார்!"

"அப்படியா?... அவர் இப்போ ஹாஜியா?"

"ஆமாமாம். தாடி மீசை யெல்லாம் வச்சி பெரிய ஆலிம் சாகிப் மாதிரியில்லே ஆயிட் டாரு... வேணா போயி ஒரு நடை பார்த் துட்டு வா."

"அவசியம் பார்க்கிறேம்பா..."

**பா**வாடை தாவணி பருவத்துக்குப் பிறகு இப்போது சேலை உடுத்திய பாவையாக நுழை கிறேன் — சிராஜ் அஹமதின் வீட்டுக்குள்!

"யாரது?" — ஈஸிச் சேரில் சிரந்தம் ஒன்றில் லயித்திருந்த சிராஜ் அஹமது, என் நிழலாட்டத்தைக் கண்டு நிமிர்ந்தார்.

நரையே இல்லாத கருந்தாடி. மொண்டிதம் செய்யப்பட்ட உச்சந்தலையில் ஒரு பின்னல் குல்லாய் — கத்தரிக்காயைக் காம்பு மூடி யிருப்பது போல்!

"நீ...நஜ்மா இல்லே?"

"ஆமா மச்சான். நஜ்மாதான்.! மக்கத் துக்கெல்லாம் போயிருந்தீங்களாமே... தெரி யாதே!"

"ஸமார் 40 வருஷத்துக்கு முன் உங்கள் இரண்டு வயதுக் குழந்தையைக்காணோம் என்று புகார் கொடுத்திருந்தீங்களே! நினைவிருக்கிறதா? இந் தாங்க உங்கள் குழந்தை!"



**கராத்தே கற்றுக் கொள்ளுங்கள்**

*(105 படங்களுடன்)* **விலை ரூ. 6-00**



அகில இந்திய கராத்தே சங்கத்தின்
துணைத் தலைவராக 7 ஆண்டுகள் பதவி வகித்த
ஆசிரியர் தமிழ்வாணன் எழுதியிருக்கும்
அருமையான நூல் இது!

விற்பனையாகிக் கொண்டிருக்கும் இதர நூல்கள் :

ஜூடோ கற்றுக் கொள்ளுங்கள் *(102 படங்கள்)* ரூ. 7-00; Learn Karate by Easy Ways 5-00; புருஸ்லீயின் வாழ்க்கை வரலாறு 5-55; கிரிக்கெட் விளையாடுவது எப்படி? 4-90; நீங்களும் நீச்சல் பழகலாம் 2-60; விளையாட்டு விதிகள் *(52 விளையாட்டுகளைப் பற்றி)* 6-50

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பி.யில் பாதுகாப்பாக பெற எங்களுக்கு கடிதம் எழுதுங்கள். அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் V.P.P. புத்தகப் பாக்கெட்டைக் கையில் தரும்போது பணம் செலுத்தலாம். இலவச விலைப் பட்டியலுக்கும் எழுதுங்கள்.

# மணிமேகலைப் பிரசுரம்

*தபால் பெட்டி எண் : 1447*

4, தணிகாசலம் செட்டி ரோடு,
தியாகராயநகர், சென்னை-600 017

# மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான
**ஹைடன்ஸா**
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

# கல்கி

சந்தா விவரம்

★

| | ஓராண்டு | ஆறு மாதம் |
|---|---|---|
| இந்தியா | ரூ. 46 | ரூ. 23 |
| இலங்கை (இந்திய நாணயப்படி) | ரூ. 64 | ரூ. 32 |
| இதர வெளிநாடுகள் | ரூ. 100 | ரூ. 50 |

**மானேஜர்**

கல்கி, சென்னை-600 032

# கராத்தே கற்கலாம்! 2

பயிற்சி: ஆர்.வி.டி.மணி

சித்திரம்: ராஜு.. தயாரிப்பு: குண்டுமணி




''வெளியே பறைசாற்றிக் கொண்டு விளம்பரப் படுத்திக் கொண்டு நான் போகல்லே நஜ்மா! நம்ம ஊரிலேயே நிறையப் பேருக்கு நான் போயிட்டு வந்த பிறகுதான் தெரியும். அது சரி! உனக்கு என்ன வேணும்?''

''உங்களைத்தான் பார்க்க வந்தேன்...''

''என்னையா? எதுக்கு நஜ்மா?''

''ஒரு பெரிய நெருக்கடி... பண நெருக்கடி!''

''பணமா?'' ஆழமாகப் பார்த்த படி கேட்டார்.

அதே பார்வை! அதே நோக்கு!

''எவ்வளவு ரூபாய்?'' நைச்சியமாகக் கேட்டார்.

''ஆயிரம் ரூபாய்!'' ஒருவாறு தைரியத்தைத் திரட்டிக் கொண்டு சொல்லி வைத்தேன்.

''ரொம்பக் கேட்கிறியே... வயசு கூடினதைப் போல நீ கேட்கும் பணமும் கூடி விட்டதே! கடனு கவா... இல்லே?''

''நீங்க எப்படி எடுத்துக் கொண்டாலும் சரிதான்!'' பதற்றத்தில் மேலாடை நழுவி விழுந்ததைக் கூடக் கவனிக்கவில்லை.

முகத்தைத் திருப்பியபடி, ''உன் ஆடையைச் சீராக்கு நஜ்மா!'' கையை மட்டும் நீட்டி எச்சரித்தார்.

திகைத்தேன்.

அவர் கரங்களில் தஸ்பீஹ்மணி. விரல்கள் அந்தப் பச்சை நிற மணிகளை நகர்த்த 'அஸ்தக் ஃபிருல் லாஹ்' என்று நாவு உச்சரித்துக் கொண்டிருந்தது.

கனிந்த வாழைப்பழத்தைக் கண்டு குரங்கு ஓடுகிறதா? முதிர்ந்த செங்கரும்பை விரும்பாத யானையும் உண்டா?

''நஜ்மா, ஆயிரம் ரூபாய் போதுமா?''

இன்டல் பண்ணுகிறாரா? இல்லே, நிஜமாகவே கேட்கிறாரா?

''போதும்!''

''என் உதவியாக வைத்துக் கொள். கடனாக இல்லே!'' சொல்லிய பிரகாரம் தோல் பையைத் திறந்து பணத்தை எண்ணித் தந்தார்.

''இனிமேல் என் உதவி கோரி நீ என் வீடு நாடி வரவேண்டியதில்லே. சொல்லி அனுப்பினால் நானே வந்து உதவுவேன்...'' அல்ஹாஜ் சிராஜ் அஹமது சொன்னபோது... என் முன் மண்டிக் கிடந்த பழைய அழுக்காறுகள் அப்படியே இளகி ஓடுவதுபோல் இருந்தது. தம்மையும் காத்து என்னையும் காப்பாற்றி விட்ட உத்தமராயிற்றே!



படங்கள் : ஒலிம்பிக்கில் இந்திய ஹாக்கிக்கு மகத்தான வெற்றி

-இந்திய வீராங்கனைகள் உற்சாக ஆரவாரம்




Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone ; 431543) Editor: K. Rajendran

# நிகரில்லா வலிமைக்கு—ஏலே லோ
# நிர்லான் வலையிருக்கு—லேசுடா லேசு,
# நீடித்த உழைப்புக்கு—ஏலே லோ
# நிர்லான் வலையிருக்கு—வீசுடா வீசு !



# நிர்லான்

## நைலான் மீன்பிடி வலை மணிக் கயிறு

நிர்லான் ஸிந்தெடிக் ஃபைபர்ஸ் & கெமிக்கல்ஸ் லிட்.,

பதிவு அலுவலகம்:
"நிர்லான் ஹவுஸ்"
254-B, டாக்டர் அன்னி பெஸண்ட் ரோடு,
பம்பாய்-400 025

சென்னை கிளை:
300, மோப்ரேஸ் ரோடு
சென்னை-600 018

லின்டாஸ்-NIR-12-203 TM

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Sri Lanka

அம்மா உங்கள் கவனிப்பு கரை கடந்தது.

பார்லே

# உலகிலோர் ஒப்பிலா மணி யென அவளுக்கு உணர்த்திடும் அன்புறவே.



எல்லாம் பற்றதம்மா உங்கள் இனிய கவனிப்பு... அவளுக்காக நீங்கள் தேர்ந்தெடுக்கும் பிஸ்கட்டே அதன் தாமுரைக்கட்டுமே. தினமும் அதுவே. தீவிர சுகாதார முறையில் கைபடாத் தூய்மையோடு தயாரித்த பிஸ்கட்—சுவை மிக்கது. சுகாரமானது. அவளுடைய தேவைக்கு ஏற்ற ஊட்டச்சத்து உள்ளது. எண்ணிப் பாருங்கள், தரத்திற்காக 7 உலக விருதுகளை வென்ற பிஸ்கட்—பார்லே க்ளூகோ—இந்தியாவின் அதி நவீன பிஸ்கட் தயாரிப்பாளர்களின் படைப்பு.




உலக விருதுகளை வென்றது

பார்லே
க்ளூகோ உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தை பராமரிப்பு பிஸ்கட்.

everest/90/PP/332-tm